திருப்பணிச் செம்மல் உயர்திரு

G.S. துரைசாமி முதலியார்

மணி விழா மலர்

23-8-1984



உ

ஸ்ரீ முருகன் துணை.

திருப்பணிச் செம்மல் உயர்திரு

G. S. துரைசாமி முதலியார் மணி விழா மலர்

ஆக்கியோன்


தி. மு. சபாபதி தேசிகர்

23—8—1984

மலரை மணக்கச் செய்தோர்

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
M. பக்தவச்சலம்
ஜஸ்டிஸ் P. R. கோகுல கிருஷ்ணன்
ஜஸ்டிஸ் S. நடராஜன்
நீதிபதி T. N. சிங்காரவேலு
ம. பொ. சிவஞானம்
N. D. சுந்தரவடிவேலு
M. D. நாச்சிமுத்து
புலவர் கா. கோவிந்தன்
R. சண்முக சிகாமணி
செ. கெ. குமாரசாமி
Dr. S. சரவணன்
நா. ச. ராமசந்திரன்
S. M. கனகரத்னம்
K. S. நரசிம்ம முதலியார்
R. சண்முகம்
V. சங்கர சுப்பையன்
A. ராதாகிருஷ்ணன்
T. புருஷோத்தம்
L. நாராயணன் செட்டியார்
சு. ந. சொக்கலிங்கம்
மா. சா. இராமகிருஷ்ணன்
P. வேலுசாமி
த. நாகராஜன்
K. S. சுப்பையா
மு. ஏழுமலை
வி. வெ. சண்முகம்

ஸ்ரீ முருகன் துணை



திருப்பணிச்செம்மல்

உயர்திரு G. S. துரைசாமி முதலியார்

மணி விழா அழைப்பிதழ்

23—8—'84 வியாழன் மாலை மணி 4-00

**இடம் : நியூ உட்லண்டஸ், இராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர், சென்னை-4.**

பேரன்புடையீர்,

வணக்கம், நிகழும் இரக்தாக்ஷி ஆண்டு ஆவணிமீ 7உ (23—8—84) வியாழன் மாலை 4-00 மணிக்கு திருப்பணிச் செம்மல் அம்மையார்குப்பம் உயர்திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்கள் அறுபதாமாண்டு நிறைவை யொட்டி மயிலை, இராதா கிருஷ்ணன் சாலை, நியூ உட்லண்டஸ் ஓட்டலில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் முன்னிலையில் தமிழக அரசு மேலவைத்தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் மா. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நிகழ்ச்சி நிரலில் கண்டபடி பாராட்டுரை வழங்க இருப்பதால் தாங்கள் வந்தருளி சிறப்பிக்க வேணுமாய் வேண்டுகின்றோம்.

விழாக் குழுவினர்

BHARATHA NATIYAM

By KUMARI BABITA KATHARE

DISCIPLE OF SARSALAYA-MADRAS.

STUDENT OF SRIMATHI K. J. SARASA

நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை.

இறைவணக்கம்: ஓதுவார் கிருஷ்ணன்,
திருத்தணி திருக்கோயில்

தமிழ்த் தாய் வாழ்த்து

முன்னிலை: அருள்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

வரவேற்புரை: திருமிகு. தி. மு. சபாபதி தேசிகர்.

தொடக்கஉரை: மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் மா. பொ. சிவஞானம்.

மணி விழாச் செல்வர்க்கு பொன்னுடை போர்த்தல்
முன்னாள் தமிழக முதல்வர்

திருமிகு M. பக்தவத்சலம் B.A., B.L.,

மலர்வெளியீடு. புலவர். திருமிகு கா. கோவிந்தன்
முன்னாள் அவைத்தலைவர் சட்டமன்றம்

பாராட்டுரை வழங்குபவர் : திருமிகு பண்பாளர்கள்.

நீதி அரசர், T. N. சிங்காரவேலு.
நீதி அரசர் S; நடராஜன்
நீதி அரசர், S. T. ராமலிங்கம்
தாமரை திரு. M. P. நாச்சிமுத்து முதலியார்,
தலைவர் தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம்
A. M. வேலு M. P. சென்னை.
N. P. செங்கல்வராய நாயுடு Ex. M. P. சித்தூர்
O. V. அழகேசன் முன்னாள் மத்திய அமைச்சர்
R. சண்முகம். I. A. S.,
K. இலக்குமிகாந்தன் பாரதி I. A. S.,
R. சண்முக சிகாமணி I. A. S.,
V. சங்கரசுப்பையயன். I. A S.,
K. S. நரசிம்ம முதலியார். I. A. S. ஓய்வு
N. D. சுந்தரவடிவேலு முன்னாள் துணைவேந்தர்
சென்னை பல்கலைக்கழகம்.
டாக்டர். S. சரவணன் M. Sc., Ph. D.
C. K. குமாரசாமி M.A., முன்னாள் பதிவாளர். சென்னை
பல்கலைக்கழகம்,
T. புருஷோத்தம முதலியார். Ex. M.L C.,
S. M. கனகரத்தினம், நூல் மற்றும் துணி இணை
இயக்குனர்.
A. இராதாகிருஷ்ணன் M.A.B.L., முன்னாள் ஆணையர்.
H.R. & C.E.
J. டான்ஜோசப் முன்னாள் கல்விதுறை சென்னை.
V.K. வேலுசாமி B.A. செயலர் & நிர்வாக அதிகாரி
ஸ்ரீ ரங்கம் திருக்கோவில்

மணலி இராமகிருஷ்ண முதலியார் B. A.,

C. R. உமாபதி தலைவர், செ. மா. கா. க. காஞ்சிபுரம்

E. S. தியாகராஜன் Ex. M.L.A.,

கோல்டன் N. சுப்பிரமணியம் முன்னாள் தலைவர்

C. கோபால், M.L.A., சோளிங்கர்.

V. நாராயணன் A G.M. சிண்டிகேட் பாங்க்,

P. M. நரசிம்மன் M.L.A., பள்ளிபட்டு

T. R. செல்வராசு M.A. M.Lit. சென்னை.

A. ஏகாம்பர ரெட்டியார் Ex. M L.A.,

B.N. கத்தாரி கன்னட சங்கம், சென்னை.

குறளரசு ஜெயபாரதி பொது செயலாளர்
செங்கை மாவட்ட காங்கிரஸ்.

R. சண்முகம் M.L.A. தக்கார் S.S.D. திருத்தணி

M. S. செல்லப்பன் B.Com. நிர்வாக இயக்குனர்
யோகலஷ்மி மில்ஸ், சோளிங்கர்.

M. S. ராமகிருஷ்ணன் B.A. H.D.C. விற்பனை
ஆலோசகர் கோ-ஆப்டெக்ஸ் சென்னை.

M. ஏழுமலை M.A. B.O.L. L.L.B மதுரை

V. V. சண்முகம் M.A.B.L., திருத்தணி

புலவர் மி. சா. நடேசன். சென்னை.

V. ரத்தினசாமி A.D. காஞ்சீபுரம்.

S.M.T. பொன்னுசாமி முதலியார் ஏகாம்பர குப்பம்.

V. K. சீனிவாச முதலியார் புதுப்பேட்டை

M. V. பாலமன்னார் B.A., C.A.I.I B. சென்னை.

E. C. லோகநாத முதலியார் முன்னாள் பெருந்தலைவர்
பஞ்சாயத் யூனியன் R. K. பேட்டை

M. S. மணி சென்னை.

புலவர் உ. த. கோவிந்தசாமி, அம்மையார் குப்பம்

A. இராமசாமி திருத்தணி சுப்ரமண்யசுவாமி
திருக்கோயில்

M. G. சண்முகம் சோளிங்கர்.

மணி விழாக் குழுவினர்

தலைவர் : அருள்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இணைத்தலைவர் : திருமிகு தி. மு. சபாபதி தேசிகர்

செயலாளர் : திருமிகு ம. மு. தணிகைமலை, சென்னை-14.


திருமிகு வி. பாலமன்னுர், B.A. C.A.I. I.B. சென்னை-1.

பொருளாளர் : திருமிகு கி. ச. அண்ணுமலை முதலியார், அம்மையார்குப்பம்

உறுப்பினர்கள் : திருவாளர்கள்

N. M. கோவிந்தசாமி முதலியார்
S. M. முனிசாமி முதலியார்
G. S ராமசாமி முதலியார்
V. P. சுப்பிரமணி முதலியார்
M. ஏழுமலை M.A B.O.L. L.L.B.
V. N. கந்தசாமி முதலியார்
V. P. அருணுசல முதலியார்
V. M. கோவிந்தசாமி முதலியார்
N G. முனிசாமி முதலியார்
V. A. சங்கர முதலியார்
V. S. மார்கலிங்கம், M.A.
V M. அண்ணுமலை முதலியார்
N. G. திருவேங்கடம், B Com.,
V. A. தங்கவேலு
N. G. தர்மலிங்கம், B.Sc,
V. S. மணி, M.Com. M.E.D.
P. குமரவேலு
Dr. M. G. அண்ணுமலை, M.D.
V. K. மோகன்
G. R. குப்புசாமி
G. D. கணேசன்
G. D. இராமச்சந்திரன், M. Com.,

கிருஷ்ணமூர்த்தி ஐயர்
G. R. கிருஷ்ணன்
G. R. ஜோதிலிங்கம்
G. A. மீனாட்சிசுந்தரம்
பாலசுப்பிரமணிய சிவாசாரியார்
N. K. மூர்த்தி, டெக்கான் என்டர்பிரைசஸ், சென்னை.
சோளா எக்ஸ்போர்டர்ஸ், சென்னை.
C. M. சிவராமன் செட்டியார், சென்னை.
M. பாலகிருஷ்ண கத்தாரி, சென்னை
S. துரைசாமி தேவர், சென்னை
S. M. T. கோவிந்தசாமி முதலியார், ஏகாம்பரகுப்பம்
K. V. சொக்கலிங்க முதலியார், ஏகாம்பரகுப்பம்
R. Y. சிங்கார முதலியார், ஏகாம்பரகுப்பம்
A.M. பொன்னுரங்க முதலியார் Ex.M.L.A. சோளிங்கர்
B. R. சுப்பிரமணிய முதலியார், மதுரை (மத்தூர்)
V. M. பாண்டுரங்க முதலியார், புதுப்பேட்டை
B.T.M. சுப்பிரமணிய முதலியார், புதுப்பேட்டை
கோல்டன் N. சுப்பிரமணியம், திருத்தணி
E. S. தியாகராஜ முதலியார், Ex. M.L.A., பொதட்டூர்.
T. ராமசந்திர செட்டி D. ரங்கநாதம் செட்டியார்
T. S. தேவசேனபதி, திருவாலங்காடு
S. A. நடராஜ முதலியார், அம்மையார்குப்பம்
T. N. ராமசாமி முதலியார், அம்மையார்குப்பம்
A.M.R. சுப்பிரமணிய முதலியார், அம்மையார்குப்பம்
G. P. வெங்கடேச முதலியார், அம்மையார்குப்பம்
N. C. கோவிந்த முதலியார், அம்மையார்குப்பம்
B. R. வரதன், சத்திரவாடி
சேனு. நாராயணசாமி முதலியார், A. J. பேட்டை
N. K குட்டியப்பன், M.A., M.Ed.
M. S. கோபால் முதலியார், குருவராயபேட்டை
மு. மாணிக்க முதலியார், மின்னல்
M. P. சுந்தரமூர்த்தி, செயலர் சொரக்காய்பேட்டை
P. K. சுப்பிரமணியம், செயலர் சோளிங்கபுரம்
R. K. கோவிந்தசாமி முதலியார், R. K. Pet.



ஸ்ரீமத் காஞ்சி காமகோடி பீடம் பெரியவரும்
புது பெரியவரும்
அம்மையார்குப்பம் எழுந்தருளினார்கள்




கவிச்சக்ரவத்தி ஒட்டக்கூத்தர்



திருமுருக கிருபானந்த வாரியார்



நூலாசிரியரும் மணிவிழா தலைவரின்
ஆசிரியருமாகிய சிவஸ்ரீ தி. மு. சபாபதி தேசிகர்



உயர்திரு ஆசிரியர் மங்கலம்கிழார்



பத்மஸ்ரீ N. P. நாச்சிமுத்து முதலியார்



நீதி அரசர் T. N. சிங்காரவேலு
உயர்நீதிமன்றம்



திரு புலவர் K. கோவிந்தன்
முன்னாள் சபாநாயகர் தமிழக அரசு

ஸ்ரீ சந்ரமௌளீஸ்வராய நம :

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்
ஸ்ரீ மடம் சமஸ்தானம்


காஞ்சீபுரம்-931 502.

காம்ப்—காஞ்சீபுரம்

ஸ்ரீ. தி. மு. சபாபதி தேசிகர்

தாங்கள் அனுப்பிய சஷ்டியப்த பூர்த்தி சுப முகூர்த்தப் பத்திரிகை வந்து சேர்ந்து ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் விக்ஞாபனம் செய்யப்பட்டது. ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தில் குடும்ப ஸ்ரேயோபி விருத்தியின் பொருட்டு அனுக்ரஹித்த ப்ரஸாதம் இத்துடன் அனுப்பியிருக்கும் விபரம் தெரிவிக்க லான கார்யம்.

Lt. Col. R. சுப்ரமணியன்.
மானேஜர்,



முருகா

சிதம்பரம்

திருமுருக கிருபானந்தவாரியார்

25-7-84

வாழ்த்து

நேரிசைவெண்பா

மூவிருபதாண்டு முருகன் திருவருளால்
பூவுலகில் எய்தியுயர் புண்ணியன்—மேவுபுகழ்
நம்பிதுரைசாமி. நாளும் நலமாகச்
சிம்புளென வாழ்க செழித்து.

அன்பன்

கிருபானந்தவாரி

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமி அவர்கள்
அதிபர், ஸ்ரீகாசிமடம்.

திருப்பனந்தாள்—612504
(தஞ்சை மாவட்டம்)

வாழ்த்துரை

பத்திமையுடையராய்ப் பல்லாற்றானும் திருவருட் பணியும், மக்கட் பணியும் கைக்கொண்டு ஒழுகி வரும் அன்பர் அம்மையார்குப்பம், திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் அறுப்பான் அகவை நிறைவெய்தி மணிவிழாக் காண்பதும், விழாவில் மலரொன்று வெளியிடப் பெறுவது மறிந்து மகிழ்கின்றோம்.

அன்பர் சதாபிஷேகமும் கண்டு சகல நலன் களும் எய்திடவும், மலர், அன்பர் சீர் பரவிடும் அழகுறு மலராக மலர்ந்திடவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்.

சிவசிவ.

M. பக்தவச்சலம் **சென்னை-4**

அன்புள்ள தேசிகர் அவர்களுக்கு,

அம்மையார்குப்பம் திரு. துரைசாமி முதலியார் அவர்களுக்கு மணிவிழா ஏற்பாடு செய்திருப்பது பற்றி மகிழ்ச்சி. அவர் திருத்தணி திருக்கோயிலுக்கு சிறந்த பணிபுரிந்து வந்திருக்கிறார், பல கட்டளை களை ஏற்படுத்தியுள்ளார். தெய்வ பக்தியோடு, மனிதாபிமானமும் கொண்டவர். தொழில் வளர்ச்சி யிலும் ஈடுபட்டிருந்தார். அதில் பல சிரமங்களையும் சந்தித்து சிக்கலை தீர்த்து வருகிறார். அவருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

விழா இனிது நடைபெற முருகப்பெருமானை பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள,
M. பக்தவச்சலம்

Dr. N. D சுந்தரவடிவேலு,
M.A L.T., D. Litt.
சென்னை சர்வகலாசாலை,
முன்னாள் வைஸ் சான்சலர்

சென்னை-30

பேரன்புடையீர்,

வணக்கம் பல.

அம்மையார்குப்பம் திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்களின் அறுபதாம் அகவை நிறைவையொட்டி, மணிவிழா மலர் வெளியிடுவது சாலப் பொருத்தம்.

திருவாளர் முதலியார், சுறுசுறுப்பானவர்; நல்லியல்பினர் ; நட்புக்கினியவர்; பொதுத்தொண்டர்,

அறங்களில் சிறந்தது, கல்வி அறமாகும், திருத்தணிப்பகுதியில் கல்வி வளர, பெருந்துணையாக நின்றவர், நிற்பவர், திரு. துரைசாமி முதலியார் ஆவார்.

தொடக்கப்பள்ளி பகல் உணவுத் திட்டத்திற்கும், சீருடை வழங்கலுக்கும் பள்ளிச்சீரமைப்பு இயக்கத்திற்கும் திரு. முதலியார் ஆற்றியுள்ள தொண்டு பெரிதாம்.

திரு. துரைசாமி முதலியார், உடல்நலத்தோடும் உள்ள உவகையோடும் நூறாண்டு வாழ்வார்களாக

அன்பன்,

நெ. து. சுந்தரவடிவேலு.

M. P. நாச்சிமுத்து, B.A.B.L., ஈரோடு

அகில இந்திய கைத்தறி போர்ட், நியு டில்லி

தணிகை தேவாலாயங்களின் முன்னுள் அறங் காவலர்க் குழுத்தலைவரான அம்மையார்குப்பம் உயர்திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் பொதுநலத் தொண்டிலும், தெய்வபணிகளிலும் சமூக நல சேவையிலும் மற்றும் கொடைவள்ளலும் ஆகிய அவருக்கு நடைபெற இருக்கும் அறுபதா மாண்டு நிறைவு மணிவிழா சிறந்த முறையில் நடைபெற தணிகை முருகனை வேண்டிக் கொள் கிறேன்.

எம். பி. நாச்சிமுத்து

புலவர். கா. கோவிந்தன் திருவத்திபுரம், வ, ஆ.

அன்புடையீர்

வணக்கம். அம்மையார்குப்பம் உயர்திரு. துரைசாமி முதலியார் அவர்களுக்கு அறுபதாமாண்டு நிறைவு பெறுவதைமுன்னிட்டு மணிவிழா நடைபெறஉளது; அதுபோது மலர் ஒன்றும் வெளியிடப்படஉளது; என்பது அறிந்து பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். திரு. முதலியார் அவர்களோடு தி. மு. கழகம், பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட 1967ல், ஏற்பட்ட அன்புத் தொடர்பு, நாளும் வளர்ந்து கொண்டே உளது.

அவர் ஓர் அழுத்தமான காங்கிரஸ்காரர் என அறிந்திருந்தும், தணிகைத் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராக அவரே தொடர்ந்து இருக்கட்டும் எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆணையிட்டது, திரு முதலியார் அவர்களின் தொண்டின் தூய்மைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

தாம் பிறந்த அம்மையார்குப்பத்திற்கும், அதைச் சார்ந்த பகுதிகளுக்குமான முன்னேற்றப் பணிகளை, எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், அவ்வரசுகளை அணுகும் முறை அறிந்து அணுகி முடிக்க வல்லவர்.

தம்மை அணுகுவோர் குறைகளையும், தேவைகளையும், முறையை தீர்த்து வைக்கவும், நிறைவேற்றி வைக்கவும் வல்லவர்களோடு, தக்கார் மூலம் தொடர்பு கொண்டு முடித்துவைக்கும் தொண்டுள்ளம் வாய்க்கப் பெற்றவர் திரு. முதலியார்.

ஆறுபடை வீட்டாளர், ஆலங்காட்டாளர் அல்லாமல், ஐயப்பன் அருளையும் வேண்டி நிற்கும் இறையுணர்வு வாய்ந்த உள்ளம் உடையவர். அப்பெரியார்.

அவர் தொண்டும் நாட்டுக்கும், நல்லவர்க்கும் தொடர்ந்து கிடைக்க, அவர் வாழ்க!
பல்லாண்டு; வாழ்க வாழ்கவே!

கா. கோவிந்தன்

ஆர். ஷண்முகசிகாமணி,

ஐ.ஏ.எஸ்.

ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர்

வாழ்துச்செய்தி

தணிகை வேல் ஆலய முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவர் அம்மையார்குப்பம் இனிய நண்பர் திரு. ஜி. எஸ். துரைசாமி அவர்கள் 23-8-84 அன்று மணிவிழா காண்பதை அறிய பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

திருத்தணி குமரன் ஆலய அறங்காவலர் குழுத் தலைவராக தொடர்ந்து பல ஆண்டுகள் அவர் ஆற்றிய பணிகள் சிறப்பானவை; போற்றத் தக்கவை. மணி விழா காணும் இந்த நல்ல நேரத்தில் அவர் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ திருத்தணி முருகப் பெருமானை வேண்டிக் கொள்கிறேன்.

ஆர். ஷண்முகசிகாமணி.

நீதிபதி சிங்காரவேலு சென்னை

அன்புடையீர்,

அம்மையார்குப்பம் அன்பர் உயர்திரு **G. S.** துரைசாமி முதலியார் அவர்களுக்கு அறுபது ஆண்டு நிறைந்து மணி விழா கொண்டாட இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. தணிகைமலை தேவாலயங்களுக்கு அன்னார் தலைமையில் திருப்பணி நடந்ததும் அவர் செய்த தொண்டும் யாவரும் அறிவர். அவர் ஒரு தேச பக்தர். சமூக முன்னேற்றத்தில் மிகவும் அக்கரை உள்ளவர். மேலும் அவர் பல நல்ல காரியங்களைச் செய்து, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தொடர்ந்து சேவை செய்ய அவர் இன்னும் பல காலம் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புள்ள,

டி. என். சிங்காரவேலு

மா. பொ. சிவஞானம்,
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009.

தமிழகத்தின் வடக்கெல்லையிலுள்ள திருத்தணிகை வட்டத்தை ஆந்திராவிலிருந்து மீட்பதற்கு தொடர்ந்து 14 ஆண்டுக் காலம் போராட வேண்டியிருந்தது. இராமன் எத்தனை ஆண்டுகள் வனவாசம் செய்தானே, அத்தனை ஆண்டுக் காலம் நான் வடக்கெல்லைப் பிரதேசத்திலே சுற்றியலைந்திருக்கிறேன் அந்தப் போராட்டத்திலே எனக்குத் துணைநின்ற - தளபதி போன்ற - தமிழர்களிலே அம்மையார்குப்பம் திரு. ஜி. எஸ். துரைசாமி முதலியாரும் ஒருவராவார். அன்றுதொட்டு இன்று வரை அவருக்கு எனது நெஞ்சத்திலும் அவருடைய நெஞ்சத்தில் எனக்கும் இடம் இருந்து வருகிறது. பரஸ்பர மதிப்பும் நீடித்து வருகிறது.

அந்த அன்பர் அறுபது ஆண்டு நிறைவு பெற்று, மணிவிழாவைக் காண்கிறார் என்பது அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். எல்லைப் போராட்ட காலத்திலே எனக்குப் பெருந்துணை நின்ற ஆசிரியர் மங்கலங்கிழாருடைய நம்பிக்கைக் குரியவராகவும் திரு. துரைசாமி முதலியார் விளங்கியிருக்கிறார். ஆசிரியர் கிழார்தான் முதலியாரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஆசிரியர் மங்கலங்கிழாரின் ஆன்மாவும் மணிவிழா நாயகரை வாழ்த்தும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

திரு. முதலியார் பூரண உடல்நலத்துடன் ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ வாழ்த்துகிறேன். அவருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் இறைவன் மேலும் மேலும் எல்லா நலன்களையும் அருள்வாராக.

மா. பொ. சிவஞானம்.

C. K. குமாரசாமி, M. A., **சென்னை.**

சென்னை, சர்வகலாசாலை, ரிஜிஸ்டிரார்.

அன்புள்ள திரு. சபாபதி தேசிகர் அவர்களுக்கு,

தங்கள் 1—7—84 தேதியிட்ட கடிதம் மூலம் எனது இனிய நண்பர் திரு. G. S, துரைசாமி முதலியார் அவர்களது அறுபதாண்டு 23—8—84 ல் நிறைவு பெறுகிறது என்பதை அறிந்தேன். விழா சம்பந்தமாக ஒரு மலர் வெளியிட தாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளதையும் அறிந்து மகிழ்கிறேன்.

திரு, துரைசாமி முதலியார் அவர்களை கடந்த சில ஆண்டுகளாக அறிவேன். அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பினையும் பெற்றவன் நான் அவரது இனியபண்புகள், ஏழை எளியவர்கள்பால் அவர் கொண்டிருக்கும் பரிவு, பாசங்களை நேரில் அறிந்து என் நெஞ்சம் நெகிழ்ந்த சந்தர்பங்கள் பல. அவர் உண்மையான நண்பர். நம்பிக்கைக்கு, நியாயத்துக்கு நேர்மைக்கு எடுத்துக்காட்டு அவரிடம் நான் கற்ற பாடங்கள், ஆழ் கடல்போன்ற அமைதி நமது நிம்மதிக்கு தேவை. வென்றுலும் வீழ்ந்தாலும் சலனமற்ற உள்ளத்தோடு ஏற்றுக் கொள்ளவேண்டும். அதிகாரம், பதவி வேறு, அன்பு, நட்பு வேறு என்ற உண்மை. அதை நம் வாழ்க்கைக்கு வழி காட்டியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற நியதி. இத்தனை உண்மைகளையும் தனது நடவடிக்கையால் எனக்கு உணர்த்திய அந்தப் பெரியாரை எனது வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டுள்ளேன்.

மேற் கூறிய நற்குணங்களை, கொள்கைகளைவாழ்ந்து காட்டி நமக்கு உணர்த்தும் பெரியவரது மணிவிழா இனிதே நடக்க, அவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்க இறைவன் அருள்புரியட்டும்.

வணக்கம்:

இப்படிக்கு,

செ. கெ. குமாரசாமி,

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
திருத்தணி–631 209.

ந. ச. ராமசந்திரன், பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர் / நிருவாக அதிகாரி

வாழ்த்து

தங்களின் அறுபதாண்டுகள் நிறைவு விழாவை யொட்டி 'விழா' மலர் ஒன்று வெளியிட இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுறுகிறேன். சாலச் சிறந்ததாகும்.

தாங்கள் இத்திருக்கோயிலின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு எல்லோராலும், எப்பொழுதும் போற்றப்பட்டு வருவது கண்கூடாகும்.

தாங்கள் மேல்மேலும், இதுபோன்ற நற்காரியங்கள் செய்து பல்லாண்டுகள் வாழ, தனிகை முருகனை இறைஞ்சுகிறேன்.

அன்பன்,

ந. ச. ராமசந்திரன்.

புரபசர். **Dr. S.** சரவணன் சென்னை

M.Sc., Ph.D. F.M.S. F.G.S.

சேர்மன் தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்

அன்புடையீர்!

பெருமதிப்புக்குரிய பெரியவர் திருமிகு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்களுக்கு 60-வது ஆண்டு நிறைவு விழா எடுத்திருப்பது குறித்து நான் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். திருத்தணி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி தேவஸ்தானத்திற்கு பத்தாண்டுகளுக்கு மேலாக அறங்காவலராக அவர் பணியாற்றியதை யாரும் மறக்க இயலாது. அவரது காலத்தில்தான் மலைமீது சந்நிதிவரை பாதை அமைக்கப்பட்டது. வசதிமிக்க தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டன.

அவர் பெரும் பக்தர் மட்டுமல்ல; தன்னலங்கருதாத பொதுநலத் தொண்டருங் கூட. முப்பது ஆண்டுகள் அம்மையார்குப்பம் பஞ்சாயத்துத் தலைவராக இருந்து சரித்திரம் படைத்துள்ளார். அவர்காலத்தில் அக்கிராமம் 'மாதிரி கிராமமாக' தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்படைந்தது. மருத்துவ வசதி, குடிநீர் வசதி, இவற்றோடு வடிகால் வசதி யையும் அவர் அக்கிராமத்திற்குப் பெற்றுத் தந்துள்ளார். திருத்தணி நகரில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நூல் நிலையம் அமையவும், மலைமீதுபாதை அமையவும் அவர் காரணமாயிருந்துள்ளார்.

இவ்வாறு மகேசன் சேவையிலும் மக்கள் சேவை யிலும் தன்னை அற்பணித்துக் கொண்டுள்ள பெரியவர் திருமிகு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் மேலும் பல்லாண்டுவாழ்ந்து தொண்டாற்ற எல்லாம் வல்ல முருகன் அருள்புரிய வேண்டுகிறேன்.

சு. சரவணன்

S. M. கனகரத்னம், B.A. சென்னை.

கைத்தறி, டெக்ஸ்டைல் துணை டைரைக்டர்

வாழ்த்து

திருப்பணிச் செம்மலும் பொது நலத்தொண்டரும் தணிகைத் தேவாலயங்களின் முன்னாள் அறங்காவலக் குழுத் தலைவருமான அம்மையார்குப்பம் உயர்திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்களுக்கு 23-8-84 அன்று அறுபதாமாண்டு நிறைவு விழா நடைபெறுவதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி.

திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார், சிறந்த பண்பாளர். பழகுவதற்கு ஏற்றவர்; தொண்டுள்ளம் படைத்தவர். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற கொள்கையில் நாட்டம் கொண்டு அதற்காக அயராது பாடுபட்டு வருவது பாராட்டத்தக்கது. அவர் ஆற்றிய திருப்பணிகள் ஏராளம். அவை கடவுள் கிருபையையும் நமது பாராட்டையும் பெறத் தக்கவை. கைத்தறித் துறையில் வெளிநாடுகளுக்குச் சென்று அனுபவம் பெற்றவர். அன்னார் பல்லாண்டுகள் வாழ்ந்து சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நல்ல சேவை செய்ய நீண்ட ஆயுளும் திடகாத்திரமும் அளிக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

சி. மு. கனகரத்னம்

S. K. நரசிம்ம முதலியார், B.A.B.L., I.A.S. ஓய்வு
முன்னாள் அறநிலையத்துறை ஆணையர்

செயற்கரிய செய்த பெருந்தகையார்

அம்மையார்குப்பம் உயர்திரு G.S. துரைசாமி முதலியார் அவர்களுக்கு 23-8-84 அன்று அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மலர் வெளியிடுவதைக் கேட்டு மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே. என்றபடி இப்பணியை முன்னின்று மலர் வெளியிடும் பொறுப்பேற்றுள்ள சைவத்திரு திரு. தி.மு. சபாபதி தேசிகர் அவர்கள் செயலை மிகமிக பாராட்ட வேண்டியதே.

முதலியார் தம் இளைமையை இளங்குமரன் திருப்பணிக்கு அர்ப்பணித்தவர். தணிகை அருளாளன் முருகவேள் ஆலயத்திற்கு அறங்காவலர் குழுத்தலைவராய் தமிழக அரசு நியமித்தபோது நான் ஆணை வழங்கும் அதிகாரத்தில் இருந்தேன் இவர் காலத்தில் தான் மலைவழிப்பாதை, தங்கும்குடில்கள் ஆலய அரும்பெரும் திருப்பணிகளோடு, திருக்குள திருப்பணியும் நித்திய பூஜை அறக்கட்டளைகளும் செய்ததோடு தமிழகம் வியக்கும் வண்ணம் தனிப்பெரும் சிறப்பான குடமுழுக்கு முதலியவற்றை திறம்படச்

செய்ததை நான் நன்கு அறிவேன். நான் தணிகை முருகன் வழிபாட்டில் மிக்க பித்துகொண்டு இருந் தமையால் பெருமானுக்கு இவர் நடாத்தும் பெரும் பணிகளைக் கண்டு மனம் பூரிப்பேன்.

அத்துடன் தம் ஊராகிய அம்மையார்குப்பத்தி லும் கிராம வளர்ச்சி திட்டங்கள் அனைத்தையும் செய்ததோடு அங்குள்ள முன்னவனார் ஆலயங் கள் முருகன் ஆலயம் அம்பிகை ஆலயங்களுக்கும் பெரும் சிறப்போடு குடமுழுக்கு ஆற்றியதற்கும் நான் சென்று களித்து இன்புற்றேன்.

முதலியார் அவர்கள் இம்மணி விழாவின் பின்னர் வருவதான பவளவிழா, முத்துவிழா, இரண்டாம் மணிவிழாவும் கண்டு உடல் வனப் போடு மற்று எல்லா நன்னலன்களும் பெற்று வாழ் வாங்கு வாழ எம்வழிபடும் கடவுளாம் தணிகேசனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

S. K. நரசிம்ம முதலியார்

ஜஸ்டிஸ் பி. ஆர். கோகுலகிருஷ்ணன்
சென்னை.

வாழ்த்துச் செய்தி

60-வது ஆண்டு நிறைவு விழாவினுக்குறிய உயர்திரு G. S. துரைசாமி முதலியார் அவர்கள், சிறந்த செயல்களுக்கு சொந்தக்காரர். வாழ்க்கை பயனுள்ளதாக பிறர் பழிப்பதற்றதாக அமை வதையே நல்ல உள்ளங்கள் விரும்பும். அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு முதலியார் அவர்கள். இறைவனிடத்து நீங்காத பேரன்பு கொண்ட திரு முதலியார் அவர்கள், திருத்தணி தேவாலயத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்த போது பல திருப்பணிகளை சமுதாய நன்மைக்காகச் செய்து இறையருள் பெற்றவர். தெய்வத் திருத் தொண்டில் மட்டுமன்றி, சமுதாயப் பணியிலும், அம்மையார்குப்பம் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது தன்னுடைய தொண்டினை, கிராம மக்களுக்கு குடி தண்ணீர் வழங்குவதன் மூலமா கவும், கிராமச் சீரமைப்பு பணிகள் மூலமாகவும் நிருபித்துக் காட்டியவர் திரு முதலியார் அவர்கள் சந்தர்பங்களை நழுவவிடாமல், கிடைத்த பணியினை உலகம் போற்றுகின்ற வழியில் முடித்துக் காட்டி, நல்லவர்கள் உள்ளங்களிலே இடம் பெற்றவர் திரு முதலியார் அவர்கள், அவர்களுடை அறுப தாவது ஆண்டு நிறைவு விழா்வினை சிறப்போடு கொண்டாட ஏற்பாடு செய்தவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன். அன்னாரின் உடல்நலமும், மன நலமும் சிறப்போடு அமைந்து, சமுதாயப் பணிக்கு பல்லாண்டுகாலம் பயன்பெற வேண்டு மென நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

பு. ரா. கோகுலகிருஷ்ணன்

ஜஸ்டிஸ் S. நடராஜன் சென்னை.

மணிவிழா வாழ்த்துச் செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அறம் பல பேணி நற்பணி செய்வதே தம் வாழ்வின் குறிக்கோள் என வாழ்ந்து வரும் அருட்செல்வர் உயர் திரு ஜி எஸ். துரைசாமி முதலியார் அவர்களின் மணிவிழா நடைபெறுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

இறைவனுக்குத் தொண்டு செய்வதே தம் தலையாய பேறு எனக்கொண்டு, ஆண்டுகள் பல, திருத்தணி, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் அறங்காவலர்க் குழுத் தலைவராகத் தொண்டாற்றிய அத்தகு நல்லார் மணிவிழாக் காணும் நாளில் இன்னும் நலமும், வளமும் பெற்று வாழ்க என எல்லாம் வல்ல இறைவன் அருளை இறைஞ்சுகிறேன்.

S. நடராஜன்.

ஆர். சண்முகம் ஐ.ஏ.எஸ். **சென்னை**

கமிஷ்னர் & செயலர்

சுகாதாரம், குடும்ப நலம்

மணிவிழா கொள்ளும் பெரியவர் மதிப்பிற்குரிய திரு ஜி.எஸ். துரைசாமி முதலியார் அவர்களைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக செங்கை, சென்னை மாவட்டங்களில் அவர் "வீட்டுப்பிள்ளை"யைப் போன்றவர்.

காட்சிக்கு எளியவர் செயல் திறமும், சாதுரியமும் ஒருங்கே அமைந்தவர். எப்பணி ஏற்பினும் அதனைச் சிறப்புற முடிக்கும் ஆற்றல் மிக்கவர் மக்கள் பணியும் இறைவன் திருப்பணியும் தன் இருகண்களென மதித்து தம் வாழ்க்கையை நெறிப் படுத்திக்கொண்டவர். திருத் தணிகைத் திருகோயிலுக்கும் செங்கை மாவட்டத்தின் மேல்பகுதியில் வாழும் மக்களுக்கும் இவர் ஆற்றிய பணி கள் எண்ணிலடங்கா.

மக்களுக்காக தன்னலங்கருதாது பிறர் நலம் பேணி உழைக்கும் இவருடைய பாங்கும், மக்களிடையே இவருக் குள்ள நன்மதிப்பும் இவருடன் பழகும் அனைவரும் நன்குணர்வர். நம் இலக்கியங்களில் வரும் தமிழ்ச் சான்றோருக்கு திரு. துரைசாமி முதலியார் ஒரு எடுத்துக் காட்டு.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் இவர் பன்னெடுங் காலம் நல்வாழ்வு வாழ திருத்தணிகை ஆண்டவன் அருள் பாலிப்பாருக.

ஆர். சண்முகம்

வி. சங்கர சுப்பையன் IAS **சென்னை**

பால்வளத்துறை ஆணையாளர்.

உயர்திரு சபாபதி தேசிகர் அவர்களுக்கு,

உயர்திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார், அம்மையார்குப்பம், அவர்களது அறுபதாம் ஆண்டு விழாவின்போது மணிவிழா மலர் வெளியிட இருப்பதாக அறிந்தேன். மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் திருத்தணி முருகன் கோவிலில் அறங்காவலராக பத்து ஆண்டுகள் பணியாற்றியபோது பக்தர்களுக்கு மலைப்பாதை வசதியும், மாணவர்கள் கல்லூரியும், பொதுமக்கள் தங்குவதற்கு குடில்களும் அமைத்து இருக்கிறார்கள். அவர்கள் அம்மையார்குப்பம் பஞ்சாயத்தில் முப்பது ஆண்டுகள் அரும்பணி ஆற்றியிருக்கிரார்கள்.

மேலும் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தெய்வத் தொண்டு, சமூக சேவையும் செய்ய வேண்டும் என்று திருத்தணி முருகன் அருளை வேண்டுகிறேன். மணிவிழா சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்கள்.

வி. சங்கரசுப்பையன்

A. ராதாகிருஷ்ணன், M.A., B.L.,
முன்னாள் H. R. & C. E. கமிஷனர், சென்னை.

ஐயா,

வணக்கம் : உங்கள் 1—7—1984 தேதியிட்ட கடிதம் கிடைத்தது.

உயர்திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்களுக்கு 23-8-1984 அன்று அறுபதாமாண்டு நிறைவை முன்னிட்டு மணிவிழாமலர் வெளியிடயிருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் த்ருகின்றது.

முதலியார் அவர்கள் ஒரு சிறந்த முருக பக்தன். அவர் திருத்தணியிலும் அம்மையார் குப்பத்திலும் முருகர் ஆலயங்களுக்கு செய்திருக்கும் பணி என்றென்றும் மறக்க முடியாதது. இன்று திருத்தணியில் தங்கும் வசதிகளும் மலைப்பாதையும் மற்ற சேவார்த்திகளுக்கு வேண்டிய பல சலுகைகளும், திருக்கல்யாணக் கூடங்களும், மலை மீது சேவார்த்திகளுக்கு கட்டியிருக்கும் மண்டபம் முதலியவைகள் எல்லாம் அவர் தலைவராக யிருந்த காலத்தில்தான் செய்யப்பட்டன. இவை அனைத்துக்கும் ஆணையிடும் பாக்கியம் நான் ஆணையராயிருந்த காலத்தில் கிட்டியதால் எனக்கு அவரை பற்றி நன்கு தெரியும். அவருக்கு எவ்வளவு குடும்ப சங்கடங்களிருந்தாலும், சிரித்துக்கொண்டே மற்றவர்களுக்கு சேவை செய்வார். அவர் பல்லாண்டு வாழ்ந்து தன் சேவையை மேன்மேலும் செய்வாருக என்று முருகனை பிரார்திக்கிறேன்.

இப்படிக்கு,

A. இராதாகிருஷ்ணன்,

T. PURUSHOTHAM, Ex-M.L.C. MADRAS-5.

I am indeed happy that our good friend Sri G. S. Duraiswami Mudaliar is completing his 60th Year and that his 61st Birthday is proposed to be celebrated on the 23rd August 1984. I offer my heartiest felicitations to Sri Mudaliar and wish him long life and prosperity. Sri Mudaliar's genuine service to the public will ever be remembered. As President of the Ammayarkuppam Panchayat Board he rendered Yeo man service in the cause of village uplift and did not rest content till he provided all the amenities of life in the rural centre, High School, Library, Post Office and all. The Ministers who visited the place had no hesitation in complimenting Sri Duraiswami Mudaliar as a true Ghandian who made Ammayarkuppam an ideal village.

As a member of the Local Library Authority he took keenest interest in spreading library service throughout the Chengleput District. All important villages were provided with libraries and he used his influence to get decent buildings for all the libraries. He was a tower of strength to me, and if I was able to make a mark in that time, it was largely due to the co-operation and enthusiastic support he gave me in all the activities and

thus did his best to ensure adult education in the villages through well-established libraries.

His memorable service to Sri Subramaniaswami Devasthanam as Chairman of the Board of Trustees of the temple deserves to be written in letters of gold. He made the temple as truly great as any other temple in South India. He was a member of the freedom struggle to get Tirutani included in the State of Tamil Nadu, and after getting Tirutani for Tamil Nadu he devoted all his time and energy in the service of the Tamil-god Sri Muruga. The modern Pilgrim Centre Tirutani owes not a little to his personal service in the cause. He laid steps to the Hill Temple to fecilitate pilgrims to go to the temple. He instituted a novel scheme of building hundreds of Pilgrim lodges in and around the Hill by getting public donation and constructing the lodges in the names of the donors. His monumental work as chairman of the Temple Trust Board deserves praise and everlasting glory. I wish a best of Sŕi G. S. Duraiswami Mudaliar in suppliant posture is installed in one of the mantapams on the steps leading to the Temple, as an expression of our tribute to his great work.

I wish Sri G. S. Duraiswami Mudaliar and his family all the best in life.

T. PURUSHOTHAM,
Ex. M. L. C.

L. நாராயணன் செட்டியார், மதுரை.

அன்புடையீர்,

நலம். உயர்திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்களுக்கு 23-8-84ல் அன்று மணிவிழா நிகழ்வதறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன், திரு. துரைசாமி முதலியார் அவர்கள் ஆன்மீகத் துறையிலும், தொழிலிலும் பொதுநலத் தொண்டிலும் சிறந்து விளங்குகின்றவர்கள். அவர்களின் தெய்வீகப் பணி மிகவும் போற்றத்தக்கது. அருள்மிகு தணிகை முருகன் திருக்கோயிலில் அறங்காவலர் குழுத்தலைவராகப் பணியாற்றி, குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவினை சிறப்பாக நடத்தி பெருமை அடைந்தவர்கள்.

அவர்களின் மணிவிழா இனிது நிகழவும், அவர்களும் அவர்கள் துணைவியாரவர்களும், குடும்பத்தில் அனைவரும் எல்லா வளமும் பெற்று பெருவாழ்வு வாழவும், திருத்தணி முருகன் திருவருளையும் அம்கயற்கண்ணி தன்னொடும் அமரும் ஆலவாய் அண்ணலின் திருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

லெ, நாராயணன் செட்டியார்,

பேரா. சு. ந. சொக்கலிங்கம், எம். ஏ.,
கல்லூரிக் கல்வித் துணை இயக்குனர் மதுரை

உயர்திருவாளர் அம்மையார்குப்பம் ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கட்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது அறிந்து மகிழ்கிறேன். அவர் தணிகைத் தேவாலயங்களில் அறங்காவலக்குழுத் தலைவராக இருந்து, சீராகவும், சிறப்பாகவும், பொறுப்பாகவும் கடமை ஆற்றி யுள்ளார்.

"எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ப வர். அரும்பாடு பட்டு ஈட்டிய செல்வத்தைப் பல அறச்செயல்களுக்கு மனமுவந்து கொடுக்கும் தன்மையாளர். கைம்மாறு வேண்டாது தம்மால் இயன்ற உதவிகளை அனைவர்க்கும் உவகையோடு செய்யும் பண்பாளர். அவர் நூறாண்டு வாழ வேண்டும் என நெஞ்சார வாழ்த்துகிறேன்.

சு. ந. சொக்கலிங்கம்

D

ம. சா. இராமகிருஷ்ணன் சென்னை

G. S. துரைசாமி முதலியார் மணிவிழா வாழ்த்து மடல்

திருமிகு G. S. துரைசாமி முதலியார் அவர்கள் பிறந்த ஊருக்கு பெருமை தேடிதந்த சிறந்த மனிதர் பட்டியலில் முதல்வர். அம்மையார் தந்தையார் எனஇவர் அருமை பெருமை அறிந்து போற்றாதார் யாருமில்லை.

அம்மையார் குப்பம் பிறந்தவர். வறுமையில் செம்மை யாய் வாழ்வதற்கு கல்விகற்க நேரமின்றி கடுமையாய் உழைத்த செம்மல் நம்அண்ணல். மடுத்தவாய் பகடு ஆனார் அடுத்தவர்போற்ற இன்று மேருஎன உயர்ந்து நின்றார்.

அன்று திருத்தணியை தமிழகத்துக்கு உரிமையாக்க தடுத்தவர்க்கு பகைவர் ஆனார் சிலம்புசெல்வர் தொடுத்த போர்வில்லின் அம்பு ஆனார். வடக்கெல்லைப் போரில் முன்னனி வீரரானார். இடர்தரும் சிறைக்கு இதற்காக 1956-ல் அடைக்கப் பெற்றார். நாட்டுநலம் கருதி கிடைத்த பெயராக இதனை போற்றலானார். எதிலும் வெற்றிபெற்ற நல்லவர், நம்மவர்க்கு இதிலும் வெற்றி. திருத்தணியே பாராட்டதிருத்தணி 1960-ல் தமிழகத்து சொத்தானது.

கர்மவீரர் காமராசர், பெரியவர் பக்தவச்சலம் பாராட்ட இவர் அவர்கள் வசமானார். நாட்டுப்பணி முடித்த நல்லவர்க்கு ஆலயப்பணி காத்திருந்தது. 1961 திருத்தணிகை அறங்காவலர் தலைவரானார். தலை வர்கள் போற்றிய நம் தலைவர் பகுத்தறிவாளர் பேரறிஞர்

அண்ணா இவர் வகுத்த நேர்மை நெறிபார்த்து அவர் நாளில் மாற்றான் தோட்டத்து மல்லிகை மலரை மாற்றுக் குறையாத தங்கம் என அறிந்து போற்றி மீண்டும் தணிகை முருகன் அறங்காவலர் குழுத்தலைவர் ஆக்கி பெருமைசேர்த்தார். பெருமைக்கு பெருமை சேர்க்கும் நல்லவர் நம்மவர்.

திரு. துரைசாமி முதலியார் அவர்களோ ஆலயத் திருப்பணியினை சிறக்கச்செய்து ஆண்டவன் தரிசனத்தை சுலபமாக்கி மலைப்பாதை அமைத்தார். மலைப்பாதை அது பார்ப்பவர் மலைக்கும் பாதை பலரும் போற்ற அன்றைய முதல்வர் அண்ணா அவர்களை திறக்க வைத் தார். அண்ணாவை திருக்கோயில் அழைத்துச் சென்றார். இவர் தலைமை ஏற்ற நாளில்தான் தங்கும் நிலையங்கள் அழகான வீடுகள்போல் அமைத்திட்டார்.

இவர் தலைமை ஏற்ற நாளில்தான் உண்டியல் நிலை கொள்ளாது நிறம்பி வழிந்தது. 1969 ல் உண்டியல் வசூல் ஒருலட்சம் தாண்டியது. முருகனருள் நிறையப் பெற்ற திருவாளர் முயற்சியால் அரசினர் கலைக் கல்லூரி ஆண்டவன் பெயரில் தொடங்கப் பெற்று திருத்தணி ஊருக்கு பெருமை சேர்த்தார். இதுபோல இவர்கள் திருப்பணி சிறப்புகளை பொதுவாக சொல்வதுஎனில் நாள் போதாது.

பிறந்த ஊருக்கு பெருமை சேர்க்க ஆரம்ப சுகாதார நிலையம் உயர்நிலைப் பள்ளி சிறந்த நூலகம் என அனைத்தும் கொணர்ந்து தம் ஊரை மாவட்டத்தில் முதன்மை ஊராக ஆக்கி பரிசுகளும் பெறவைத்தார். தன் குடுப்பம் தன் பிள்ளை எனப்பாராது, தன்நாடு தனதூர் என்றிருந்த பொதுப்பணி தொண்டர் திருமிகு முதலியார் அவர்கள்.

இளமையில் முதுகில் துணி சுமந்தார். முதுமயைில் ஏற்றம் பெற்ற தணிகைமலை இவர் புகழை சுமக்கக் கண்டார், கண்டோம். கோயிலில் இவர் திருப்பணியில் வளர்ந்த சிலைகளும் தங்கும் இடங்கள் மலைப்பாதையும்,

இவர் நாமம் கூறுவது என்காதில் விழுகிறது, ஆலயம் தொழுவது சாலவும் நன்றென்று காலமெல்லாம் ஆண்டவன் திருப்பணி புரிந்தவர் எனதுதந்தை, அவர் சாயலில் இவரைக் காணும் எனது பிள்ளைகள் **கோயில் தாத்தா** எனவே அன்போடு இவர்களையும் அழைக் கின்றார். எளியஉடை, முதிர்ந்த அனுபவம், பழகும் தன்மை மடைதிறந்த வெள்ளமென காட்டும் அன்பு, கடவுள்பக்தி, தொண்டு, பண்பு, அடக்கம் வெள்ளை உடை, திருநீற்று நெற்றி, எடுத்தது முடிக்கும் ஆற்றல், வறுமையிலும் செழுமையிலும் நிலைமாறா பெருமனது அனைத்தும் பெரியவர் குணநலனில் எனைக் கவர்ந்த சிலவாகும்,

குறளதனில் படிக்கப் படிக்க புதுப்புது பொருள் கிடைப்பது போல பெரியவர் இவரோடு பழகப் பழக புதுப்புது குணநலன் நம்மை ஆட்கொள்ளும் நாமும் இவர்கள் வசம் கட்டுண்டு போவோம், இவர்போல நாமும் இருக்கத் துடிப்போம். மனத்திட்பம் அதற்கு நிறைய வேண்டும். நம்மால் இயலாதது கண்டு இவர் பெருமை மேலும் உணர்வோம் இது வாடிக்கையாய் ஆகிவிடும். எங்கள் குலதெய்வம் திருத்தணிகை முருகன் **எனது தந்தையை** மீண்டும் எங்களுக்கு இவர் வடிவில் காட்டிவிட்டான், அதற்கு ஆண்டவருக்கு நன்றி கூறி, அறுபதில் இருபதான இளைஞரை ஐம்பதில் என்பதான முதியவன் நானும் என் குடும்பமும் பல்லாண்டு பல் லாண்டு பல்லாயிரத் தாண்டு இன்பமுடன் மகிழ்ச்சியுடன் புதிய எழிற்சியுடன் அமைதியுடன் இன்றுபோல் என்றும் எல்லோரும் போற்றும் வண்ணம் சிறக்க வாழ குடும்ப முடன் எனைஆளும் திருத்தணிகை முருகனிடம் வேண்டு கிறேன். வணங்குகிறேன், வாழ்க, வணக்கம்!

ம. சா. இராமகிருஷ்ணன்.

P. வேலுசாமி, B.Com., திருச்சி

கைத்தறி, டெக்ஸ்டைல் உதவி டைரக்டர்

திருவளர் பெருமானே !

திருப்பணிச் செம்மலே !

அருள்திரு அம்மையார் குப்பம் ஈன்றிட்ட
மருளறு மாந்தர்கள் போற்றிடும் பெரியோனே !
கருணையின் கடலே ! கொடையில் வள்ளலே !
பொறுமையில் உயர்ந்திடும் பொதுநலத்
தொண்டரே !

அறுபத்து ஆண்டுகள் நிறைவுற்றோய் !
வாழியவே !

பிணிகள் போக்கிடும் தணிகை ஆலயத்தில்
பணிவிற் சிறந்திட்ட முன்னாள் அறங்காவல்
பணிக்குழுவின் பண்பான தலைவரே !
வாழியவே !

இன்சொல் விளைநிலமாய் ஈதலே வித்தாக
வன்சொற்களைபோக்கி வாய்மை எருவூட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்போயே !
அன்பும் அமைதியும் குறைவின்றிப் பெற்றிடவே
அன்புடன் வாழ்த்துவோம் பல்லாண்டு
வாழியவே !

P. வேலுசாமி

திருச்செந்தூர்

திரு. த. நாகராசன், B.Sc.,
நிர்வாக அதிகாரி,
அருள்மிகு சுப்ரமணிய சுவாமி, திருக்கோயில்

பேராயிரம் பெற்று நூறாண்டு வாழ்க!

வழித்துணை வரும் திருத்தணி முருகன் திருக்கோயில் முன்னாள் தலைமை அறங்காவலர் சீலத் திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் 60-வது ஆண்டு நிறைவெய்வது கேட்டு மகிழ்வுற்றேன்.

ஆறமர் செல்வன், ஆறுபடை வீடுறை அழகன் திருத்தணி முருகன் திருக்கோயிலை விண்ணவரும், மண்ணவரும் மெச்சும்படி செப்பனிட்டு திருவருள் வாரிதியில் திளைத்துக் களித்திட்ட திருப்பணிச்செல்வர் அம்மையார்குப்பம் சிவத்திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் இடறினும், தளரினும், இகழினும், எத்தனை இடர்கோடி சூழினும் நிலை கெடாமல்–அன்பின் தலை கெடாமல் நீக்கரும் தொல்லை ஊழ்அறத்தொலைத்து மூவிரு முருகனை முறையாகத் தொழுது ஆறெழுத்தோதி ஆறிருகரத்தோனின் அன்பில் திளைத்தவர்.

''வாழ்க எல்லா வளங்களும் நலங்களும்
சூழ்க ஆயுளும் சுகமும்–இனிதே
சூழ் கதிர் மதியுளவரை தொலையாச்
செல்வமொடு
வாழ்க பல்லூழி வாழ்க செவ்விதினே''

என்று வாயார, நெஞ்சார வாழ்த்தி

''நூறாண்டு வாழ்க நூன்முறை உணர்ந்து''
''பேராயிரம் பெற்று பெருவாழ்வு வாழ்க''

என்று நந்தூர் அலைவாயில் செந்தூர் முருகனின் சேவடியைத் தொழுகிறேன்.

அன்புள்ள,
த. நாகராசன்

திரு. கே. எஸ். சுப்பைய்யா, சென்னை-6.
துணை இயக்குனர் (துவக்கக்கல்வி)

மணி விழா நாயகரின் திருத்தொண்டு

1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் படாஸ்கர் அவர்களது தீர்ப்பின்படி திருத்தணித்தாலுகா ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டுடன் இணைக் கப்பட்டது. பல்வேறு காரணங்களினுல் எவ்வித முன்னேற்றமின்றி மிகப் பின்னடைந்த நிலையி லிருந்த திருத்தணித் தாலுகாவில் வளர்ச்சிப் பணியில் பங்கேற்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தமிழ் நாட்டுடன் இணைந்த திருத்தணி வட்டாரத்தில்கல்வித்துறையில் முதலாவது பள்ளித் துணை ஆய்வராகப் பணியேற்றேன். வளர்ச்சிப் பணிகளில் கல்வித்துறையும் சீரிய பங்கை ஏற்றது பல்வேறு இடங்களில் துவக்கப்பள்ளிகளும், நடுநிலைப்பள்ளிகளும், உயர்நிலைப்பள்ளிகளும், ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் திருத்தணியி லிருந்து சுமார் 20 கிலோமீட்டர் தொலைவிலுள்ள அம்மையார்குப்பம் என்னும் பேரூரில் தான் முதன் முதலாக உயர்நிலைப்பள்ளி துவக்கப்பட்டது. இப் பள்ளி துவக்கப்படுவதற்குக் காரணமாயிருந்த தொண்டுள்ளம் கொண்ட சான்றோர்களில் மணி விழாக் காணவிருக்கும் பெரியவர் திரு. ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் சீரிய பணியை ஆற்றினார்கள் என்றால் அது மிகையாகாது. இவர் கள் திருத்தணி வட்டாரத்தில் வளர்ச்சியில் சிறந்த வழிகாட்டியாக விளங்கிப் பல வழிகளிலும் சேவை

புரிந்தனர். இவர்களது சீரிய தொண்டு என் நெஞ்சத்தில் பசுமையான இடத்தைப்பெற்றுள் ளது.

திரு ஜி.எஸ். துரைசாமி முதலியார் அவர்களது இன்முகங்கொண்ட சேவையுள்ளமும், அலுவலர் களிடமும், மற்றோரிடமும் நயமுடன் பழகும் பாங் கும், சலியாத உழைப்பும் அடக்கமும், அமைதியும் அவர்களது பொதுநலத்தொண்டின் வெற்றிக்கு முக்கிய காரணமாய் விளங்கின. இவர்களது முயற் சியினுல் திருத்தணி வட்டாரத்தில் பல துவக்கப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப் பட்டன. புதியபள்ளிக்குத் தேவையான இடவசதி, தளவாடச் சாமான்கள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குவதற்குப் பொதுமக்களது ஒத்துழைப்பை நாடுவதில் அய ராது உழைத்தார்கள். இதுபோன்று இன்னும் பல் வேறு வளர்ச்சிப் பணிகளில் இப்போதும் உழைத் துக்கொண்டு வருகிறார்கள்.

இத்தகைய சேவையுள்ளம் கொண்ட திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்களுக்கு மணி விழா எடுப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடை கிறேன். மணிவிழாக்காணும் பெரியவர் அவர்கள் இன்றுபோல் என்றும் வாழ்ந்து மக்களுக்கும் சீரிய முறையில் சேவைபுரிய நீண்ட ஆயுளையும், நல்ல உடல்நலத்தையும் அருள எல்லாம்வல்ல இறை வனை இறைஞ்சுகிறேன். மணிவிழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதாக.

கே. எஸ். சுப்பைய்யா.

வி. வெ. சண்முகம், எம்.ஏ., பி.எல்., **திருத்தணி**
வழக்கறிஞர்.

"அருள்தர வேண்டி ஆராதனை செய்கின்றேன்"

ஆலயம் பலசூழ் அம்மையார் குப்பத்தில்
சாலவும் சிறந்த செங்குந்த ரினத்தில்
உரையா வெள்ளியாய் ஒளிவிடும் மணியாம்
துரைசாமி யென்னும் தூயயெம் அண்ணனே.

தோற்றத்தில் எளியவராய் தோழமை
உடையவராய்
கொற்றம் மிகுந்தவராய் கொள்கைநெறிக்
கொண்டு-இனச்
சுற்றம் சிறந்திடவே சுறுசுறுப்பாய் பணியாற்றி
வெற்றிபல காணும் வள்ளலேநீ வாழ்க.

தணிகையை மீட்டிடவே தளரா மனங்கொண்டு
தமிழினத் தலைவனும் மாண்புமிகு மாபொசியுடன்
அணியாய் திரண்டு அளவிலா வெற்றிக்கு
அருந்தவம் புரிந்தாய் அவனியில் சிறந்தாய்.

திருத்தணிகை ஆலயத் திருச்சபை தலைவனாய்
திருப்பணிகள் பலவும் தேர்ந்தெடுத்து முடித்தாய்
இருப்பிடமும் மலைவழித்தடமும் இன்னும் பல
வசதிகளை
பொறுப்புடன் பணியாற்றி புகழினைப் பெற்றாய்.

மணிவிழாக் காணும் மாண்புறு தலைவா உன்
மனையென்றும் மகிழ்வால் மிகுந்திடவே-நம்மின
அணியின் தெய்வமாம் ஆறுமுகனை அனுதினமும்
அருள்தர வேண்டி ஆராதனை செய்கிறேன்.

வி. வெ. சண்முகம்.

டாக்டர் இ. எஸ். எஸ். இராமன், M.B.B.S. MRSH

பக்தியில் பெரியவர் எங்கள் ஜி. எஸ். டி.

" ஆஸ்த்துமா ஏன் வருகிறது ? "
" ரத்தக் கொதிப்பு வரக் காரணம் யாது ? "
" சர்க்கரை வியாதி எப்படி வருகிறது ? "

இந்த வியாதிகள் வருவதற்கான காரணங்களைச் சொல்லும் பொழுது குறிப்பிட்ட சில காரணங்களைச் சொல்லி, முன்பு, "வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்ட கவலைகளும், பரபரப்பும், அமைதியின்மையும்" இவ்வியாதிகளுக்குக் காரணங்களாகும் என்கின்றனர் மருத்துவ அறிஞர்கள். அது உண்மைதான் !

நாகரீகம் முன்னேற, ஏற மனித வாழ்விலேயே பரபரப்பும், அமைதியின்மையும் அதிகமாகி விட்டன. வாழ்க்கை வசதிகள், போர்க் கருவிகள் அனைத்தும் நவீனப்பட்டுவிட்ட இக்காலத்தில் மனிதன் "அமைதியைத்" தேடுகிறான் !

இந்த அமைதித் தேடலில் தான் மது, மாது, எல், எஸ், டி, போன்ற லாகிரி வஸ்த்துக்கள் மனிதனை முதலில் அமைதிக்கு மீட்டு, முடிவில் நிரந்தரமாக "அமைதியின்மைக்கு" இழுத்துச் சென்று விடுகின்றன !

அதனாலேயே சான்றோர்கள் அமைதிக்கு வேறோர் வழி சொன்னார்கள். அதுவே " ஆன்மீக நெறி " ஆன்ம அமைதிக்கு ஆன்மீகமே வழியாகும்.

எந்திரகதியில் இயங்கும் அமெரிக்காவில் இந்து சமயம் மீது ஆர்வமும், மோகமும் ஏற்பட்டு 'ஹரே ராமா' இயக்கம் ஏற்படுவதற்கும் இந்த அமைதி தேடல் தான் முக்கிய காரணம். ஒரு எல். எஸ். டி.யில் (L.S.D.) இருக்க கூடிய

போதையைவிட அமைதியான பக்தி ரசம் சொட்டும் எம். எஸ் ஸி யின் பக்தி கீர்த்தனையில் 'போதை' அதிகம் ஆனல், இப்போதை எப்போதைக்கும் கெடுதல் தராது.

சற்றுநேரம் புறச் சூழலை மறந்து அகநிலையில் இறைவனேடு ஒன்றுபட்டு லயிக்கும் நேரம் பிரார்த்தனை நேரமே. கடவுள் உண்டு, இல்லை என்கிற சர்ச்சையில் எனக்குச் சம்மதமில்லை. கடவுள் உண்டு என்பார்க்கு, 'பக்தி' இல்வாழ்க்கையின் அல்லலிலிருந்து விடுபடும் புகலிடம் என்றே சொல்லவேண்டும்.

எதையுமே கற்றுக் கொடுத்தால் செய்வது சுலபம்! இறைவனைக் "கற்பித்து" பக்தி என்னும் அறநெறிக்கு இட்டுச் செல்வது சான்ருேர் வழியாகும். உண்மையி லேயே சமயச் சான்ருேர்கள் ஒரு வகை மருத்துவர்கள். "எம் பி பி எஸ்; டி பி எம்" படிக்காத மன நல மருத்துவர்கள்.

பக்தி நெறியை அவர்கள் எந்தக் குறிக்கோளுடன் பரப்பினுலும் ஒரு மருத்துவன் என்கிற முறையில் சொல் கிறேன்: "பக்தி மனதுக்கு மனசாந்தியைத் தருகிறது" அவனுடைய பிற கவலைகளினுல் புத்தி பேதலித்து போகாது காப்பாற்றுகிறது. மனேநிலையைச் செம்மைப் படுத்துகிறது.

"மனநோய் ஏற்பட்ட நோயாளிகளுக்குத் தரப்படும் மாத்திரைகளுக்குப் பெயர் Tranquilizers"

மனநோய் ஏற்படாது தடுக்கும் பக்தியும், சன்மார்க்க மும், கடவுள் நம்பிக்கையும் உண்மையில் Tranquilizers தான்,

நெறிகளில் மனிதனுக்கு நம்பிக்கையும், அதர்ம வழி களில் பயமும் இருப்பது அவசியம். அப்படியிருந்தால் குற்றங்கள் மலியாது. விண்வெளியினையே விஞ்ஞா னத்தால் வெற்றிகொண்ட அமெரிக்கனும் அங்கு போயும் இறையருளை வேண்டுகிருன். பக்தியைப் போதிப்பது

இக்காலத்தில் மிகவும் அவசியம் என்பதற்காகவே வியாக்ஙனங்கள் செய்யலாயிற்று.

கைத்தறியையும், கவலையையுமே ,செல்வங்களாகக்' கொண்ட கைத்தறி நெசவாளர்களின் குலப் பெருமாஞகிய தணிகையம்பதியில் பக்தி நெறியைச் சிறப்பாக வளர்த்தவர், வளர்ப்பவர் நம்முடைய பெரியவர் திரு, ஜி, எஸ். துரைசாமி முதலியார் அவர்கள்.

மன நலம் பேணிடும் தூய, ஆன்மீகப் பணிக்குத் தன்னுடைய பெரும் நேரத்தைச் செலவிட்டவர். அவருடைய சீரிய தொண்டினுலும், செம்மையான ஆற்றலினுலும் இன்று தணிகையிலே எம்பெருமாஞர் ஆனந்தக் கோலோச்சுகிருர்.

தன்னருள் வேண்டுபவர்களைத் தன்னருளால் தணிகை வேலன் பாலிக்கிருன். ஜி. எஸ். டி அவர்களுடைய ஆன்மீகத் தொண்டினை மாற்ருரும் மறுக்கமாட்டார்கள். அவர் அறங்காவலர் குழுத்தலைவராக இருந்த காலத்தில் நடைபெற்ற சீரியப் பணிகள் ஆண்டாண்டு தோறும் அவரை நிலை நிறுத்தும் நேர்நெறி கொண்டவர் நட்பிற்கினியவர் வல்லவர் நல்லவர்.

அந்த 'மணி'யான மனிதர்க்கு இன்று 'மணி'விழா ஏகன் அநேகனுய், வேண்டுதல் வேண்டாமை இலாஞய் உண்மையுமாய், இன்மையுமாய், இலங்குபவனுய் இருக்கின்ற அப்பரம் பொருள் அன்னருக்கு பன்னலங்களையும் செய்விக்க மனமார்ந்து பிரார்த்திக்கிறேன். இறையருள் நலம் செய்விக்குமாக!

திரு வி கே. வேலுசாமி, பி. ஏ.,

உதவி ஆணையர்/செயல் அலுவலர்.

அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில், திருவரங்கம்:

நான் கண்ட நல்லவர்.

அம்மையார்குப்பம் திரு ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் 23-8-84ம் தேதியன்று மணி விழாக்காண இருப்பது கேட்க பெருமகிழ்வெய்து கிறேன். அப்பெரியவருடன் 5 ஆண்டுகள் உட னிருந்து பணியாற்றும் நல்வாய்ப்பினை பெற்றவன் நான்.

திருத்தணிகைத் தேவாலயங்களின் முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவராக இருந்து அத்தணி கையம்பதியின் ஆலயத் திருப்பணிகள் மலைப் பாதை அமைத்தல், தங்கும் விடுதி கட்டுதல், இன் னும் பல திருப்பணிகள் செய்வதற்கும் குடமுழுக்கு நடத்துவதற்கும் பேருதவி புரிந்து சிறப்பித்தார்கள். அவர்கள் சிறந்த தெய்வ பக்தியுடையவர். நெறி யாளர். எடுத்த காரியத்தை விடா முயற்சியுடன் செய்து முடிக்கும் செயல்வீரர். அவர்களுடனும் அவர் காலத்தில் இருந்த அறங்காவலர்களுடனும் இணைந்து பணியாற்றிய காலங்கள் நெஞ்சில் என் றும் பசுமையாக இருக்கிறது.

திரு, முதலியார் அவர்கள் தன் சொந்த ஊரான அம்மையார்குப்பத்தில் பல ஆண்டுகள் பஞ்சா யத்து தலைவராக இருந்து அக்கிராமத்தில் பலதரப்

பட்ட முன்னேற்றங்களுக்கும் காரணமாக விளங்கியவர். அவர்கள் காலத்தில் அம்மையார்குப்பம் பஞ்சாயத்து அப்பகுதியிலேயே ஒரு சிறந்த பஞ்சாயத்தாக விளங்கியதற்கு முதலியார் அவர்களின் அயராத உழைப்பே காரணமாகும்.

தன்னை அண்டியவர்களுக்கும், உதவி கேட்டு வந்தவர்களுக்கும், பிரதி பலனை எதிர்பார்க்காமல் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்து வந்தார்கள். அவர்களால் அரசு துறைகளிலும், வேலை வாய்ப்பு பெற்றவர்கள் அநேகர். அன்னாரது கருணையுள்ளத்தால் பல குடும்பங்கள் வாழ்க்கையில் ஒளி பெற்று விளங்குகின்றன,

இப்பெரியவர் மேலும் பல ஆண்டு காலம் வாழ்ந்திருந்து, இறை பணியிலும், மக்கட் தொண்டிலும், சிறப்புற்று, நாட்டிற்கும், தன்னைச் சார்ந்தோர்கட்கும் எஞ்ஞான்றும் பயனுள்ள பல காரியங்களைச் செய்து நலன்கள் பலவும் பெற்று சிறப்புற வாழ எல்லாம் வல்ல முருகப்பெருமானை, இந்த மணிவிழா நேரத்தில் வேண்டிக் கொள்கிறேன்.

வி. கே. வேலுசாமி.

மு. ஏழுமலை, M.A., B.O.L., L.L.B., மதுரை.
வழக்கறிஞர்,

இயக்குனர் பேங்க் ஆப் மதுரை லிமிடெட்.,

நினைந்தவர் நெஞ்சில் நீங்காது நிறைந்து உறையும் தணிகைத் திருமுருகன் தேவாலய முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவராகப் பல ஆண்டுகள் விளங்கிய உயர்திரு கி. சா துரைசாமி முதலியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மணிவிழா மலர் ஒன்று வெளியிட இருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு துரைசாமி முதலியார் அவர்கள் தமது சிறுவயது முதற்கொண்டே பொதுநலத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர், தமது பிறந்த ஊரான அம்மையார்குப்பத்தின் வளர்ச்சிக்காகப் பலவகையிலும் பாடுபட்டவர். பல துறைகளிலும் பின் தங்கியிருந்த அவ்வூரில் மேல்நிலைப்பள்ளி, மாணவர் விடுதி பொது நூலகம், குடிநீர் வசதி மருத்துவமனை முதலியவற்றைக் கொண்டுவர அரும் பாடுபட்டு வெற்றி கண்டவர். ஊராட்சித் தலைவராக மிகப்பல ஆண்டுகள் விளங்கி பொது மக்களுக்கும், சிறப்பாக இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பேருதவி புரிந்ததோடு இன்றும் அவர்கள் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்துவருபவர்.

திரு. துரைசாமி முதலியார் அவர்கள் இறையன்பும், சிவப்பற்றும் மிக்கவர். தணிகையில் அமர்ந்

துள்ள முருகப்பெருமானின் ஆலய அறங்காவலர் குழுவின் உறுப்பினராகவும், பின்னர் அதன் தலைவராகவும் மிகப்பல ஆண்டுகள் விளங்கிப் பல் வேறு திருப்பணிகளை நிறைவேற்றிப் புகழ் கண்ட வர். ஆறுமுகனின் ஆலயம் இன்று இத்துணை சிறப்போடு பல நலங்களும் நிரம்பப் பெற்று விளங் குவதற்கு முக்கிய காரணமானவர். இவரது பதவிக் காலத்தில் ஆலய திருப்பணிகள், ஆட்சி முறைகள் ஆகியவற்றில் தினைத்துணையும் குற்றம் குறைகள் இல்லாமல் சிறந்து விளங்கியமை குறிப்பிடத் தக்கதாகும்.

திரு முதலியார் அவர்கள் அன்பும் பண்பும் நிறைந்தவர். விருந்தோம்பலில் சிறந்தவர். ஒல்லும் வகையான் எல்லோர்க்கும் உதவுபவர். பிறர்க்குத் தீங்கு நினையாதவர். இத்தகைய நல்லார் இன்று அறுபதாண்டு நிறைவினைப் பெறுகின்றார். இப் பெருமகன் தணிகை முருகன் திருவருளால் எல்லா நலங்களும் இனிதெய்தி வையை மணலினும் பல் லாண்டு வாழ்கவென உளங்கனிந்து வாழ்த்து கின்றேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

மு. ஏழுமலை.

தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்,
சென்னை, காளிகாம்பாள் தேவஸ்தானம்.

சிவநேசச்செல்வர், அறப்பணிச்செம்மல் திருவாளர், G. S. துரைசாமி முதலியார் அவர்கள் மணிவிழா சிறப்பாகவும், சீராகவும் அன்னை பராசக்தியின் பரிபூர்ண அருளினால் நன்றாக நடக்க பிரார்திக்கிறேன. திருத்தணி முருகன் ஆலயத்தில் சிறப்புற பல தொண்டுகள் செய்துள்ளார்கள். இன்னும் நிறைய அருளும் பொருளும் பெற்று பல நல்ல காரியங்கள் செய்ய வேண்டுகிறேன்.

ஸ்ரீ அம்பாள் ஆசீர்வாதம்:

K. M. தம்பு செட்டி.

உள்ளம் கவர்ந்த உழைப்பின் சிகரமான ஒருவர்

கலியுகத்திலும் கண்கண்ட தெய்வமாய் வழித் துணைவரும் திருத்தணி முருகப் பெருமானது ஆறு படை வீட்டில் ஐந்தாம்படை வீட்டில் முதல் தலத்துறை தணிகைவேளை வாக்கிற் கருணகிரி வள்ளலும் இவ்வருளாளருக்கு முன்னரும், பின்னரும்' பற்பல அருளாளர்களால் பாடிப்பரவிய சிறப்போடு இன்னுளிலும் நாளும் இன்னிசையில் நற்றிருப் புகழ் பாடிப்பரவும் அடியார் கூட்டங்கள் அலையலையாய் திரண்டுவரும் தணிகையம்பதி ஆலய அறங்காவலக் குழுவினராக தாம் பல ஆண்டுகள் இருந்தபோது அவர் எங்களோடு ஒருவராயும், மறுபடி எங்கள் குழுத் தலைவராயும், நாங்கள் ஏற்றுக்கொண்டபின் அவர் செயல் வீரராய் முனைந்து செய்த திருப்பணிகள்தான் இப்போது தமிழகமேயன்றி ஏனைய மாநிலங்களும். ஏன் திருப்பதி தேவஸ்தானத்தாரும் கண்டு வியக்கும் வண்ணம், மலைப் பாதைமுதல் யாத்ரீகர்கள் தங்கும் குடில்கள்வரை அரும் பெருந்தொண்டைச் செய்தீர்கள்.

பற்பல நற்றெண்டுகளைச் செய்ய கடந்த அறுபதாண்டைப் போல் இன்னும் அறுபதாண்டு வரை உடல் வனப்போடு மனைவி மக்கள், ஒக்கலுடன் செல்வம் மேலோங்கி வாழ்வாங்கு வாழ வாழ்வளிக்கும் தணிகைத் தண்ணருளாளன் தாங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

அம்பை இரா, சங்கரன் தஞ்சாவூர்

அம்மையார்குப்பம் அச்சாணி வாழ்க

அம்மையார்குப்பம் உயர்திரு G. S. துரைசாமி முதலியார் அவர்களைப்பற்றி நீண்ட காலமாகக் கேள்வியுற்றிருக்கின்றேன். பின்னரே அவர்களைக்காணும் பேறுற்றேன். திருத்தணித் திருக்கோயில் மேம்பாட்டிற்கு அவர்கள் ஒரு அச்சாணியாக இருந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

எல்லாம்வல்ல முருகப்பெருமான் அருளால் மணி விழாத் தம்பதியினரும் அவர்கள் குடும்பத்தினரும் எல்லா நன்னலங்களும் வாய்க்கப்பெற்றுச் சிறந்து வாழ்ந்திலங்க அப்பெருமான் அருள் செய்ய அவன் இணையடிப்போதுகளையே வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

வாழ்க உலகெலாம்.

கோல்டன் **ந. சுப்பிரமணியம்,** திருத்தணி.
முன்னாள் தலைவர், நகரப் பஞ்சாயத்து.

மணிவிழாக் காணும் பெருமைக்குரியவர்

அம்மையார்குப்பம் ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு இன்னும் பல தொண்டுகள் செய்ய இறைவன் அவருக்கு அருள் புரிய வேண்டுமென இத்தருணத்தில் பிரார்த்திக்கிறேன்.

அம்மையார்குப்பம் பஞ்சாயத்துத் தலைவராக பொறுப்பேற்று நல்ல பல காரியங்களை செய்த பெருமை அவருக்குண்டு. உயர்நிலைப்பள்ளி, நூல்நிலையம், பிரைமரி ஹெல்த் சென்டர், குடிநீர்வசதி போன்ற மற்றும் பல நற்பணிகளை அம்மையார்குப்பம் கிராமத்திற்கு செய்தார்.

திருத்தணி மலைப்பாதை, குடியிருப்பு இல்லங்கள், வெள்ளித்தேர் வெள்ளோட்டம் போன்றவற்றை செய்தார். திருக்குளத்தையும் தூய்மைப்படுத்தி அதன் படிகளை செப்பனிட்டார். மிகப் பெரிய அளவில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகத்தை நடத்தி தணிகைக்கு ஓர் சிறப்பைத் தேடிக்கொடுத்தார்.

1970-ஆம் ஆண்டு திருத்தணியில் கலைக்கல்லூரி ஒன்றினை அமைக்க நானும், தளபதி K. விநாயகம் அவர்களும் மேற்கொண்ட முயற்சிக்கு

திருக்கோயிலின், தருமகர்த்தாக்கள் என்ற முறையில் திருக்கோயில் சார்பாக ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கி தணிகையிலே ஒரு கல்லூரியை அமைக்க உதவிய பெருமை அவருக்குண்டு.

இவர் காங்கிரஸ் கட்சியின்பால் மிகுந்த பற்றுடையவர்.

வாழ்வில் ஏற்படும், இன்ப துன்பங்களை சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.

திருவாளர் துரைசாமி முதலியார் 60 ஆம் ஆண்டு நிறைவு விழா இனிது நடைபெறவும் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து மக்களுக்குப் பற்பல தொண்டுகளைச் செய்து மேலும் பல பெருமைகளைப் பெற்று வாழ இறைவனை வேண்டுகிறேன்.

வா. சு. மோகன்,
சின்டிகேட் வங்கி,
திருத்தணி.

வாழி. ந. கந்தசாமி
முதலியார் & சன்ஸ்,
வங்கனூர்.

படை வழங்கும் செங்குந்தா வாழ்க! வாழ்க!!

மேகங்கள் எதிர்பார்த்துப் பொழிவதில்லை
ஈவோரும் உதவிநாடி ஈவதில்லை
மரம் நடுவோர் பழம் நாடி வளர்ப்பதில்லை
பணிசெய்வார் பயன்நாடிச் செய்வதில்லை
ஊருக்கு உழைப்பதிலே இன்பமுண்டு
பாருக்குப் பாடுபட்டால் பலனுண்டு
பலருக்கும் பயனுண்டு என்பதனால்
பண்புடனே யாருக்கும் உதவிடலாம்
கொடுப்பதனால் பணத்திற்கு அழிவுண்டு
புகழுக்குப் பழுதேனும் சிறிதுண்டோ?
பகலவன் காய்வதனால் கடல்வற்றும்
காய்ந்தபின்னே கொண்டலது மழைவழங்கும்
வெள்ளந்தான் வேகமுடன் ஆறாய்ப்பாய்ந்து
கடல்தாகம் தீர்த்து மூழ்கும்
கொடுப்பவர்க்கு அழிவே இல்லை
கொடுத்துதவும் கடலே சாட்சியன்றோ ?
ஈத்துவக்கும் அண்ணலே ஈண்டுமக்கு
கடல்போன்ற வளமுண்டு வாழ்வுண்டு
ஊருக்கும் உலகுக்கும் ஏழைக்கும்
எளியோர்க்கும் ஏற்றமுடன் உழைத்திடுக
உழைப்போர்க்குச் சோர்வே இல்லை
கதிரவனாய் ஒளி வீசி மழையெனவே
கொடை வழங்கிப் பாரியென வாழ்ந்திடுக
படை வழங்கும் செங்குந்தா வாழ்க! வாழ்க!!

அன்பு காணிக்கை.

வாழ்க தமிழ்!

குறிக்கோளில் ஒருவர்,

கி. ச. துரைசாமி முதலியார்

அம்மையார் குப்பம் தன்னில் அரும்பெருங்
குடியில் தோன்றி
தம்மைநேர் இளைஞர் நட்பைத் தகவுடன்
பெற்று நாளும்
மம்மரை மாய்க்கும் நல்ல மாண்புடை
தமிழைக் கற்ற
செம்மைசால் நண்பர் என்றும் சிறப்புடன்
வாழ்க! வாழ்க!!

அறநெறித் தமிழ்ச்சங் கத்தின் அடிப்படை
சீட ரோடு
திறமுடன் கல்வி கற்றுத் திறமையும்
பெற்ற நண்பர்
மறமுடன் தொடுத்த எல்லைப் போர்தனில்
முதன்மை யேற்றுச்
சிறப்புடன் சிறையில் புக்குச் சிறுமையே
இன்றி வாழ்ந்தார்.

பிறந்தவூர் பெருமை யெய்த பீடுடன்
தலைவ னாகி
அறத்துடன் மறத்தை எண்ணி ஆன்றவர்
போற்றும் வண்ணம்
சிறப்புடன் ஆட்சி செய்து சிறுமையை
வெளியில் ஓட்டி
மறப்புலி யாக நின்ற மாபெரும்
தலைவ வாழி!

அரசியல் துறையி லான்ற அறிஞரின்
துணையை நாடி
இரவையும் மறந்து நல்லோர் தொடர்பையும்
பெற்று மற்றுக்
கரவிலா மனத்தி ஞலே கண்டவர்க்
கிரக்கங் காட்டி
வரன்முறை யின்றி வேலை வாய்ப்பையும்
தேடித் தந்தார்.

இருமுது குரவர் சுற்றம் இணையிலாத்
தமையன் தம்பி
பெருமைசால் மனைவி மக்கள் பீடுடை
இல்லம் செல்வம்
இருப்பதை யெண்ணி டாமல் இருப்பிட
மான ஊர்க்கு
விருப்புடன் தேவை யெல்லாம் விரைவிலே
செய்து வைத்தார்.

தருவெலாம் சிறந்து நிற்கும் தணிகையாம்
மலையில் ஓங்கும்
முருகனின் கோவில் தன்னை முழுமையாய்
செப்ப னிட்டு
வருபவர் போற்றும் வண்ணம் வண்ணமும்
தீட்டிப் பின்னர்
இருநிதி வளரும் வாய்ப்பும் இனிதுடன்
வகுத்தும் வைத்தார்.

புலவர் உ. த. கோவிந்தசாமி

M, சுப்பராயன்,
கைத்தறி அலுவலர் (சட்டம்).

"தோன்றிற் புகழொடு தோன்றுக"

என்னும் குறள் நெறிக்கேற்ப திரு. G. S. துரைசாமி அவர்கள் அறுபதாண்டுகள் சீரும் சிறப்போடு வாழ்ந்து 60-ம் ஆண்டு நிறைவு விழா காண இருப்பதறிந்து கழிபேருவகை எய்துகிறேன்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'

என்பதற்கினங்க மக்கள் தொண்டாற்றுவதன் மூலம் தெய்வத் திருவருள் பெற்று நீடூழி வாழ இறை யருளை வேண்டுகிறேன்.

சு. சுந்தர முதலியார், பழையனூர்.

முன்னாள் பெருந்தலைவர் :

திருவாலங்காடு ஒன்றியம்.

மணிவிழாக் காணும் செம்மல் G. S. துரைசாமி முதலியாரவர்களுக்கு என் உள்ளம் கனிந்த வாழ்த்துகள் இப்பெரியார் சிவஸ்தலங்களின் திருப்பணித்தொண்டராக பணியாற்றியவர்கள். பழைய னூருக்கும் திருவாலங்காட்டிற்கும் இடையே சிதைந்து போயிருந்த சாட்சி பூதேஸ்வரர் ஆலயமும், தீப்பாய்ந்த மண்டபத்தையும் திருப்பணி செய்ய எங்களுக்கு பல வழியில் ஊக்கத்தையும் ஏற்படுத்திய தோடு தங்களால் முடிந்த அளவிற்கு பொருள் உதவியும் செய்து கோவிலைப் புதுப்பித்தார். இதனால் நீலியின் வரலாறும் பழையனூரில் வாழும் கூழாண்டியார் கோத்திரம் எழுபது பேர் வரலாறும் உலக மக்கள் அறிய ஒரு நல்ல வாய்ப்பினை உண்டாக்கியது. அக்கோயிலை திருத்தணி தேவாலயத்துடன் இணைத்து, என்றும் பூசைகள் சீரான முறையில் நடைபெற வழி வகுத்தார் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நல்ல சீறிய தொண்டினை செய்துள்ளார்.

பொதுத்தொண்டாக, அம்மையார்குப்பத்தில் உள்ள ஏழை மக்களுக்கு படித்த பட்டதாரி ஆசிரியர்கள் இடைநிலை, இள நிலை ஆசிரியர்கள் ஏழ்மை கோட்டில் உள்ளவர்களைத் தானே அயராது அலைந்து தன் பொருளையும் செலவு செய்து அவர்களைப் பயிற்சி பள்ளிகளிலும், ஆசிரியர் தொழிலிலும் சேர்த்து அந்தந்த குடும்பங்கள் நல்ல முறையில் வாழ வழி வகுத்த அவர் நீடூழி திடகாத்திரமாய், தெளிவான உள்ளமும் கருணை மனமும் இன்னும் சிறக்க ஆண்டவன் நீண்ட அருளும் ஆயுளும் அளிக்கும்படி ஸ்ரீ வடாரண்யேஸ்வரர், இரத்தினசபாபதியையும் மிக்க அருள் பாலிக்க வேணுமாய் வேண்டுகின்றேன்.

கர்மவீரர் காலமெலாம் வாழ்க !

இவ்வுலகில் இணையில்லா கர்ம வீரர்
இல்லையென்ற சொல்லதனை மாற்றிவிட்டார் ;
தெவ்வுலகம் தெளிவுடனே என்றுமோங்க
தேர்ந்தறிவால் நன்மைதனைச் செய்துவைத்தார்;
எவ்வுலகும் போற்றிடவே ஏற்றவொன்றை
யென்றென்றும் செய்ததுரை சாமியண்ணல்
கவ்வையின்றி வையமதில் நிலைத்துவாழ
கார்த்திகேயன் கழலடியை வணங்குகின்ருேம்

S. பாலசுப்பிரமணிய குருக்கள்,
ஏகாம்பர குப்பம்.

S. கிருஷ்ணமூர்த்தி ஐயர்,
புரோகிதர்

S, M. T. கோவிந்தசாமி முதலியார்,

ஏகாம்பர குப்பம்,

உழைப்பில் உயர்ந்த உத்தமர்

அம்மையார் குப்பம் சடையப்ப முதலியார் முனியாத் தம்மாள் இருவருக்கும் தவப்புதல்வராக பிறந்த திரு. G. S. துரைசாமி முதலியார் என்னுடன் பல்லாண்டு களாக வியாபாரத் துறையிலும், சமூகத்துறையிலும் இறையருட் திருப்பணித்துறையிலும் பற்பல நற்பணி களைச் செய்து அவர்கள் புகழ் பெருமளவில் உயர்ந்தது. பல்லாண்டுகளாக நம் சமூகம் நடத்தி வந்த காலசந்தி அறக்கட்டளை மீண்டும் துவக்க என்னுடன் கலந்து பேசி 366 நாட்களுக்கு நம் சமூகத்தவர்களையே நியமித்த பெருமையும், மேலும் குடியிருப்பு இல்லங்கள் அமைத்த பெருமையும், அவரையே சாரும் உண்மை, நேர்மை, நாணயம் இவற்றைக் கடைப்பிடித்து இளமை தொட்டு இன்னுள்வரையும், ஒரே கொள்கையில் நின்று அரசியல் துறையில் பற்பல பெரியோர்கள் தொடர்பினைப் பெற்று பற்பல சிரமங்களுக்கும் அரியபெரிய செயல் களைச்செய்த பெருந்தகை யென்பதில் தடை யேதுமில்லை.

தங்களின் மணிவிழாக் காணும் இந்நன்னுளில் தாங்களும் தங்கள் துணைவியர் காமாட்சி அம்மையார் அவர்களும் இதுகாறும் வாழ்ந்த சிறப்பான வாழ்க்கை யைப் போலவே இனி என்றும் வாழ்க்கையில் சீரும் சிறப் போடு எல்லா செல்வங்களையும் பெற்று இனி வரும் பவள விழா, முத்துவிழா, இரண்டாம் மணிவிழாவையும் கண்டு வளமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

K. K. PAI, **MANIPAL**

On the happy occassion of the Sashtiabdapoorthi of my esteemed friend and well wisher, Shri G.S. Doraiswamy Mudaliar, to be celebrated on the 23rd August 1984, I have immense pleasure to offer to Shri Mudaliar, my hearty felicitations and good wishes for a long, happy and prosperous life, of full 100 years and more, with the Grace of God. It is in the fitness of things that his friends and admirers should celebrate this memorable event in the illustrious life of one of the God s goodmen, I have ever come accross in the course of my long public career and with whom I had the most pleasent associations.

It was many years ago-I do not remember the exact year that I came to know him, for the first time and it did not take long for us to become good friends, for such is his good and friendly nature and the noble qualities of his head and heart Whenever I happened to visit Madras in the course of my official duties, there always was Shri. Mudaliar with a big garland of flowers and the holy Prasadam of Shri Subramanya Swamy of Tiruthani, to greet me and to invoke the Grace and Blessings of the Lord. I have valued his attection and regard for me all these years. He was with me on all major joyous occasions of my official and personal life and these his goodwill and good wishes-have been a source of inner strength and confidence to me in life

I still remember the occasion when, because of his pursuasive invitation, I visited Tiruthani on pilgrimage. He received us with full Temple honours and we had the Darshan of Lord Subramanya Swamy in all His Splendour and Grace. I know of the important role Shri. Muda-

liar played in organising the renovation of Shri Subrahmanya Devasthanam, Tiruthani, which has now become the Tirupathi of Tamilnadu with ever increasing number of devote pilgrims visiting the Temple year by year. I am also aware of the excellent facilities now provided for the devotees and pilgrims at the temple, thanks to him and his colleagues in-charge of the Temple Management. He is a true servant of God in every sense, feeling happy in the happiness of others and always willing and helpful to alleviate the misery and difficulties of his fellow beings.

He has played a significant role not only in Temple affairs, but has rendered valuable services to enrich the civic life of Tiruthani, the economic life of the region and the banking, industry and trade in the District, by his association with several organisations.

I remember one particular event in his life when during one of his visits to Udupi and Manipal, he was involved in an accident which resulted in grievous injury to his person and he had to be hospitalised. He was calm, cool and collected all through this ordeal with only faith in God for his rapid recovery and without any regrets for what had happened. The equanimity of his mind was remarkable. Though we, his friends near him, felt rather miserable that he had to go through the pain and trouble in a far away place, he had no complaints, made no fuss and he was as cheerful and resourceful as ever. This reveals his attitude towards life and life's problems.

By his simplicity of life, he radiates affection and friendliness towards all who come into contact with him. He took up the cause of the less previleged and the poor and the weaker sections and pleaded for their employment and financial help. Most of his visits to Udipi and Manipal were to plead their causes and to way, "no" to such a genial, sincere and pious man was will nigh impossible

Shri. Mudaliar will complete 60 years of his illustrious life on the 23rd of this month. His life has been a life of dedication, devotion and fulfilment. Expecting no reward for himself, he has sought to make the world around him worthliving for others. In this world full of selfishness, corruption, hypocrisy and evil propensities, persons like Shri. Mudaliar alone stand above them all, giving hope and cheer to the general mankind.

Well can he look back on the 60 years of his illustrious life as years lived well in the service of God and Man! May he live for the proverbial hundred years enjoined by our Scriptures, not for the sake of himself or his family alone, but for the sake of all his admirers, friends and well wishers and for the sake of all mankind. God fulfils Himself through men such as Shri. Durai Swamy Mudaliar, for, verily he is Durai and a Swamy, combined as one humble noble man.

B. காளத்திநாதன், B.A., B.L., சென்னை.
வழக்கறிஞர்.

ஆயிரத்தொருவர்

அம்மையார்குப்பம் திருப்பணிச் செம்மல் உயர்திரு G.S. துரைசாமி முதலியார் அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவெய்தியதை முன்னிட்டு மலர் வெளியிடும் நற்செய்தியை கண்டு மனம் பூரிக்கும் நல்லோர் பலருடன் யானும் கலந்து இன்புறுகிறேன்.

பெரியார், நான் அறிந்தவரையில் நற்குண பண்பாளரோடு பற்பல பணிகளை செய்த பெருந்தகையார். தணிகை ஆலயம் தற்போதுள்ள வளமான சிறப்புக்கு மூல காரணமாவார் என்று சொல்வது மிகையாகாது. பிறர்க்கு தக்க தருணத்தில் சென்று ஆதரவு தருபவர். சமூகத் தொண்டிலும், பொதுத் தொண்டிலும் சற்றும் சளைக்காது உழைக்கும் உத்தமர்.

இப் பெரியார் நூறுண்டுகள் நன்னிலையோடு நாளும் தணிகேசன் தன்னருளால் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன்.

முருகேச முதலியார், அம்மையார்குப்பம்

ஔவைத் தமிழ் போல் வாழ்க !

அன்புக் களஞ்சியம் அறிவின் சிகரம்,
ஆண்டவன் முருகனின் அடிமைத் தொண்டன்,
இன்பச் செயலை இனிதே முடிப்பர்,
ஈடிலாப் புகழை ஈட்டிய செல்வர்,
உண்மைக் கென்றும் உதவும் சீலன்,
ஊரவர் போற்ற வுழைத்த வீரர்,
என்னுடை நண்பர் என்றும் வாழ,
ஏர்மயி லோனின் எழிலடி வணங்குவன்.
ஐயம் நீங்க பையவே என்னும்
ஒண்மை சான்ற வோர் துரை சாமி
ஓங்கிய புகழுடன் ஓகையாய் உலகில்
ஔவைத் தமிழ்போல் வாழ்கவே நின்று.

V. நாராயணசாமி,
உதவி ஜெனரல் மானேஜர்,
சிண்டிகேட் பாங்க்.

சென்னை.

அருள் நிறைந்த திரு G. S. துரைசாமி முதலியார் அவர்கட்கு மணி விழா மலர் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்ச்சி.

திருவாளர் G. S. துரைசாமி முதலியார் அவர்களின் அன்புள்ளம், தொண்டாற்றுவதையே குறிக்கோளாக கொண்ட தூய உள்ளம். தன்னை இறைவனின் அறபணிக்கும், அருள்பணிக்கும், அற்பணித்துக் கொண்ட ஈடற்ற பண்பினர். சமுதாயத் தொண்டினில் முழு மூச்சுடன் முனைந்து செயல்படும் நல்லிதயம் கொண்டவர். தணிகை வேல்முருகனின் அருள்பெற்ற முதலியாரின் அருள் உள்ளத்தை, திருக்கோயிலின் திருப்பணிகள், புகழ் மணக்கச் செய்கின்றன. விரைந்து செயல்பட்டு, சுறுசுறுப்புடன் தொண்டாற்றும் முதலியார் அவர்களின் வயது அறுபது என்பது வியக்கத்தக்கதே!

தக்கதொரு திருத்தொண்டருக்கு மணி விழா மலர் சாலப் பொருத்தம். அன்னாரின், தொண்டுள்ளம், பண்புள்ளம், பாச உள்ளம் பல்லாண்டு, பல்லாண்டு வாழ, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

திருஞான சம்பந்தர் தேவார திருச் சபையார்,
அம்மையார் குப்பம்

திருமிகு கி. ச. துரைசாமி முதலியார் நீடு வாழ்க !

உயர்திரு கி. ச. துரைசாமி முதலியார் அவர்கள் திருஞான சம்பந்தர் தேவார திருச் சபைக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளார். திருவண்ணமலையில் ஆண்டுதோறும் நடைபெறும் அருணகிரி நாதரின் சிறப்பு விழாவில் பங்கேற்கும் வழிபாட்டுக் குழுவில் எங்கள் ச பை யை யு ம் ஒன்றுக இணையவைத்தார். தணிகையில் நடைபெறும் பல அடியார்களின் விழாக்களிலும் அவ்வாறே பணி யேற்க வைத்தார். குறிப்பாக அன்னூர் செல்லும் தேவாலயங்கட்கெல்லாம் எ ங் க ள் சபையையும் கூட்டிச் சென்று சபைக்கும் பெருமையைத் தேடி வைத்தார்.

முதலியார் அவர்கள் முருகக் கடவுளிடம் இணையிலா ஈடுபாடு கொண்டவர். ஒழுக்கத்தில் உயர்ந்தவர். அறநெறிக்காவலர். அனைவரையும் கட்டிக் காப்பதில் மிகவும் வல்லவர். அறுபதாண்டு நிறைவை முன்னிட்டு நிகழும் மணிவிழா, முதலியார் செய்த நற்செயல்களுக்கு நன்றிக் கடனுக விளங்கும் விழாவாகும். இவ்விழாத் தலைவர் இன்றுபோல் என்றும் வாழ எல்லாம் வ ல் ல தமிழ்க் கடவுளை எங்கள் சபையின் சார்பில் வழுத்துகின்றோம். வாழ்க துரைசாமி முதலியார் புகழ்!

E. S. தியாகராஜன், பொதட்டூர்.

முன்னாள் பஞ்சாயத்து தலைவர் & M.L,A.

பண்பிற்கும் பாசத்திற்கும் உரிய உயர்திரு G. S. துரைசாமி முதலியார் அவர்கள் 60ம் பிறந்த நாளை கொண்டாடுவதை அறிந்து மட்டில்லா மகிழ் வெய்துகிறேன். த ணி கை தமிழகத்தில் இணை வதற்கான போராட்ட காலத்திலிருந்து இன்னாள் வரை அவர் கலந்து கொள்ளாத நிகழ்ச்சிகளே இருக்கமுடியாது. மக்களின் நல்வாழ்வில், சமூகத் தினரின் எதிர்கால வாழ்வில் மிகவும் அக்கரையும் ஆர்வமும் கொண்டவர்.

தணிகை முருகனை நினைக்கும் போதெல்லாம் திரு. G. S. D. அவர்களின் தொண்டு யாவரின் மனத்திலும் தோன்றாமல் இருக்க முடியாது. ஆண் டவனுக்கு அவர் செய்துள்ள பல தொண்டுகள் உலகமறிந்த விஷயமாகும். அரசியலிலும், ஆன் மீகத் துறையிலும் அவர்கள் ஆற்றிவரும் பணிகள் போற்றலுக்குரியதாகும். அவர்கள் பிறந்து வளர்ந்த அம்மையார்குப்பம் கிராமத்திற்கு குறிப் பாக அவர்கள் செய்துள்ள நல்ல காரியங்களை நேரில் சென்று பார்த்தாலன்றி புரிந்துகொள்ள முடியாது அந்த அளவுக்கு அம்மக்களுக்கு திருத் தொண்டாற்றி யுள்ளார்கள்.

பலத்துறையிலே அவர்கள் பங்கேற்றவர்கள். அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து இறைத் தொண்டும் தொடர்ந்து செய்ய தணிகை முருகன் அருள்புரிய வேண்டுகிறேன்.

டாக்டர் S. ஜகன்னுதன், மைலாப்பூர்
M.B.B.S , L.O , T.D.D.,

திருத்தணிகை திருத்தலத்தில் டிரஸ்டியான திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்களின் மணி விழாவில் அவரைப் பற்றிய ஓரிரு வரிகளில் என் சிந்தனையிலிருந்து சிதறியவை :

உள்ளமும், உடலும் முருகனின் பெயரல்லாது வேறு ஒன்றினையும் உச்சரித்தறியேன். அவர்கள் வாழ் நாளெல்லாம் முருகனின் திருப்பணிக்கும், ஏழை, பெரியோரின் நல் வாழ்விற்குமே செலவழித்து தன் நலம், கருதாது பொது நலமே தன்னலம் என வாழ்ந்து வருகின்றவர். எந்த ஒரு திருமணத்திற்கும், பொது நல காரியத்திற்கும், அவர் வருகை தருகிருர். என்ருல் அவர் திரு முருகனின் பரிபூரண அருளுடனும், பிரசாதங்களுடனுமே வருகைதருவார் இராப்பகல் எனப் பாராது, அயராது முருகனின் திருப்பணிக்கு நிதி திரட்டவும் அஞ்சார். முருகனின் தணிகை க்ஷேத்திரமே தன் இல்லம், அங்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளே தன் குடும்ப கோலாகலம் என்று எண்ணி வாழ்பவர்.

அவர் தம் 60-ம் ஆண்டு நிறைவு விழா நடக்கிறதெல்லாம் அதுவும் முருகனின் திருவடிக்கே

அர்ப்பணம், திருமுருகனின் திருவருளால் அவர் 80-ம் ஆண்டு நிறைவு விழாவினையும் பின் கோலாகலமாக 100-ம் ஆண்டு நிறைவு விழாவினையும் கொண்டாட, அதன்மூலம் மக்களுக்கு நல்ல தொண்டுகளை மேற்கொண்டு செய்துகொண்டே இருக்க அருள்மிகு வள்ளி தேவசேன சமேத ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமியின் திருப்பாதங்களை இறைஞ்சி கேட்டுக் கொள்கிறேன். திருமுருகனருளால் அவர் தம் வாழ்வில் சீரும் பற்பல சிறப்பும் பெற்று மேன் மேலும் திருத்தணிகை திருத்தொண்டிலும், பொதுமக்களின் பொதுத் தொண்டிலும், ஓங்கி வளர்ந்து உயர்வாராக என வாழ்த்துகிறேன்.

S. M. T. பொன்னுசாமி முதலியார்,
ஏகாம்பரகுப்பம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவரின் வாக்குக்கு இணங்க மதிப்பிற்குறிய அண்ணுர் திரு. G. S. துரைசாமி முதலியார் வகித்த பல பதவிகளிலே தொடர்ந்து பத்து ஆண்டு காலமாக திருத்தணி திருமுருகன் தேவாலய அறங்காவலக்குழு தலைவராக இருந்து குன்றுதோராடலில் முதற்பதியாயதலத்தை வள மிக்கதாயாக்கிய பெருமை ஒன்றே அவர் புகழுக்கு ஓர் உதாரணம் செங்குந்தமரபின் காலை சந்திக்கட்டளை நித்திய பூசையை என்றும் நிலைத்து நடைபெற செய்த பெரும்புண்ணியப்பயன் நம் சமூகத்தலைவர்களை வாழ்விக்கும் பொக்கிஷம் என் பதில் தடையேதுமில்லை.

பதவிக்கு பெருமை தேடித் தரும் தாங்கள் தற் சமயம் வகிக்கும் பதவிகளல்லாமல் மேலும் பல பதவிகள் தங்களால் பெருமை யடையவும், எதிர் நோக்குகின்றவரும் பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழா இரண்டாம் மணிவிழாவையும் காண கண்டு உடல் வனப்போடு மற்றெல்லா நன்னலங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வேணு மாய் எம் தணிகைத் தண்ணருளாளனைப் போற்றிப் பரவுகின்றேன்.

P. பொன்னுசாமி B. Com., (H.D.C.)

மின்னல், வ. ஆ.

பல்லாண்டு வாழ்க !

சீர் பல சிறக்கும் சிறந்த நகராம்
பாரெலாம் போற்றும் அம்மையார்குப்பம்
தளரா முயற்சியால் தான்வாழ்ந் திட்ட
உளத்தால் சிறந்த சடையப்ப முதலி
மகனாய்த் தோன்றி மணிவிழாக் காணும்
புகழ்மிகு நல்லோன் துரைசாமி யென்னும்
தொண்டா லுயர்ந்த நற்றமிழ்ப் பெரியீர் !
தணிகை முருகன் ஆலயத் திருப்பணி
அணிபெறச் செய்து புகழ்பெற் றதுபோல்
நற்பணி தானே நாளும் செய்து
பற்பல புகழும் பாரினில் எய்தி
இன்றுபோல் என்றும் குன்றாப் புகழுடன்
நன்றே வாழ்ந்து நலம்பல பெற்று
பல்லாண்டு நீவிர் நீடு வாழ
எல்லாம் வல்ல சேவற் கொடியோன்
எண் திசை யோரும் போற்றி வணங்கும்
தண்டமிழ் முருகன் தாள்பணி ந்தேனே !
வளர்க அவர் தொண்டு !

C. N. நம்மாழ்வார், B.Sc., B.Com., B.L.,
சுந்தரம் பைனான்ஸ் - ஜெனரல் மானேஜர்.

சென்னை

திரு. ஜி. எஸ். துரைசாமி முதலியார் அவர்களுடைய 60 வது ஆண்டு நிறைவு விழா 23-8-84 அன்று நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். திருத்தணி ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி ஆலயத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் சேர்மனாகப் பணியாற்றி அங்கு மலைப்பாதை குடியிருப்பு இல்லங்கள், சுவாமி பெயரில் கலைக்கல்லூரி ஆகியவற்றுக்கு வழி வகுத்தவர் திரு. முதலியார். அம்மையார்குப்பம் கிராமத்தில் பல ஆண்டுகள் பஞ்சாயத்து தலைவராக இருந்து அங்கு குடிநீர், மின்சாரம் பள்ளி வசதிகள் செய்து கொடுத்து தமிழக அரசின் மாதிரி கிராமத்திற்கான பரிசை அந்தக் கிராமத்திற்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறார். மேலும் அவர் செங்கல்பட்டு மாவட்டத்தில் காங்கிரஸ் (இ) கமிட்டியின் பொருளாளராகவும், வள்ளுவர் நூலக குழுவின் உறுப்பினராகவும் பல ஆண்டுகள் பணியாற்றி யிருக்கிறார். ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கோயில் திருப்பணி கமிட்டியில் துணை சேர்மனாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் திரு. முதலியார் மேன்மேலும் இதைப் போன்ற நற்பணிகள் செய்ய அவருக்கு நீண்ட ஆயுளையும் உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

ச. ப. சடையப்பன், அம்மையார்குப்பம்

கிராம காங்கிரஸ் தலைவர் :

ஒரே குறிக்கோளுடைய ஒருவர்

தற்பெருமையும் தன் நலமும் தலைத்தூக்கி யாடும் இக்காலத்தில் இம்மனித வாழ்வில் பொது நலம் பேணும் தொண்டர்கள் தோன்றுதல் மிக மிகக் குறைவே. அந்த நிலையில் பார்க்கும்போது பொதுத் தொண்டில் ஈடுபட்டு தொண்டருக்கு தொண்டராய் உழைத்து தணிகைவட்டம் தமிழ கத்தோடு இணைவதற்கு அல்லும் பகலும் பாடு பட்டு, இணைந்தபின் ஊர்நலம் நாடி உழைத்து ஊராட்சி தலைவராய் உயர்ந்தார். இன்று அம் மையார் குப்பம் ஒளிமயமாக காட்சிதர காரண மாய் இருந்தார். இருள்மயமான அம்மயைார் குப்பம் உயர பொதுநூல் நிலையம், ஒலிசங்கு ஆரம்ப சுகாதார நிலையம், குடிநீர் வசதி, பள்ளி கட்டிடங்கள், பொது அஞ்சல் நிலையம். தொலை பேசி, கழிவுநீர் கால்வாய்கள், பேருந்து நிலையம் இப்படி எண்ணற்ற பல காரியங்களை பலவித மான இடுக்கண்கள் நேர்ந்தபோதும் விடாப்பிடி யாக தன்னுடைய சுய அறிவால் செய்துகாட்டி அம்மயைார் குப்பம் மாவட்டத்திலேயே தன்னி றைவுபெற்ற தலைசிறந்த கிராமமாக்கிய பெருமை எங்கள் தலைவர் திரு. கி. ச. துரைசாமி முதலியார் அவர்களுக்கே உரியதாகும். அரசியலிலேயும் அன்றுமுதல் இன்றுவரை காங்கிரஸ் பேரியக்கத் தில் பற்று கொண்டு ஒரே குறிக்கோளாய் இருந்து எங்களுக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக திகழும் எம் தலைவர், அன்பு அண்ணன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். வணக்கம்

V. பாலமன்னர், B.A., C.A.I.I.B., சென்னை.

நான் கண்ட நற்பெரியார்

திருப்பணிச்செம்மல் அம்மையார்குப்பம், **G. S.** துரைசாமி முதலியார் அவர்களுக்கு அறுபதாமாண்டு நிறைவு மணி விழாவையொட்டி மலர் வெளியிடும் சிறப்பினைக் கண்டு மனம் பூரிக்கின்றேன்,

மணிவிழாக் காணும் உயர்திரு முதலியார் அவர்கள் சுமார் 25 ஆண்டுகளாக எனக்கு நெருங்கிய நண்பர் எனக்கேயன்றி எங்கள் சமூகத்தவர்கள் பலருக்கும் மிக மிகப் பழக்கமானவர்கள் தொழில் துறையிலும் ஒருசார்புடையவர்கள்.

> "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலிற் தோன்றாமை நன்று."

என்ற குறள் மறையின்படி சாதாரண குடும்பத்தில் பிறந்து உழைப்பில் உயர்ந்து செல்வமும் செல்வாக்கும் திரட்டியவர்கள். சோம்பலென்பதே கண்டறியாதவர். எப்போதும் சுறுசுறுப்பாய் செயலாற்றுபவர்கள். இவர்கள் தணிகைத் தேவாலய அறங்காவலக் குழுத்தலைவராய் பத்தாண்டுகள் இருந்தபோது செய்துள்ள அரும்பெருந் திருப்பணிகள் நாடறிந்ததே தமிழகத் திருப்பதியாக்க வேணுமென்று திட்டம் தீட்டி பணிசெய்து வருவாயைப் பெருக்கினார்கள். நிரந்தரமான பூசை அறக்கட்டளைகளையும் ஏற்பாடு செய்து வைத்துள்ளார். அத்துடன் சுற்று வட்டாரப் பகுதி மக்கள் நல்வாய்ப்பினைக்கருதி வியக்கத் தக்க வகையில் பற்பல பணிகளைச் சிறப்புற செய்துள்ளது அனைவருமறிவர்.

வியாபாரத் துறையில் சிறப்புற்று அயல்நாட்டு தொடர்புடன் விரிவாக்கினார். தாமின்புறுவது உலகின்புற வேணுமென்று சமூகத்தவர்களையும், நட்பினர்களையும்,

ஈடுபடுத்தி நலம் பல அடையச் செய்தார். அரசியல் தொடர்பு மிக்குடையோராதலால் அரசாங்கத்தை அணுகி ஆக்கப்பணிகளையும் செய்தவர்கள். காண எளியவர். கருத்துக்கினியவர்.

உள்ளும், புறமும், ஒரேபடித்தாய் உள்ளபடி வெண்மையான தூய கதராடை தரித்து திருநீற்றுநுதலோடு ருத்திராக்ஷ மணியணியாமல் இரார்.

எங்களுக்கு மேற்கு ஆப்ரிகா பகுதி சுற்று வட்டாரங்களில் வியாபாம் நடந்துவருகிறது. அத்தேசத்திலும் முதலியார் அவர்கள் வியாபாரம் தொடங்கியபோது எங்கள் விருந்தினராக 5, 6 மாதங்கள் தங்க நேர்ந்தது. சீதோஷ்ண மாற்றங்களாய் உள்ள பிரதேசமாயிருந்தும் முதலியார் அவர்கள் நடை, உடை மாற்றமின்றி இப்போது எப்படி இருக்கின்றுரே அத்தன்மையைப் போலவே காட்சியளிப்பார். காலைக் குளித்து கடவுள் வழிபாடு முடித்துதான் வெளிக்கிளம்புவார். அன்னுட்டு மக்கள் இவர் வீதியில் வரும்போது திருவேடப் பொலிவைக் கண்டு மக்கள் ஈர்க்கப்பட்டு வணங்கி வழிபடுவதை கண்ணுரக் கண்டுள்ளேன். சமூகத்தவர்களுக்கும், தன்னை அண்டினேருக்கும் நட்பினர்களுக்கும், உதவுவதைக் கடமையாய்க் கொண்டவர்கள்.

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

இத்தகு நற்குணப் பன்பாளர் முதலியார் அவர்கள் கடந்த அறுபதாண்டைப் போல் இனி மற்றோர் அறுபதாண்டுவரை உடல் வனப்போடு உயர்வான செல்வமும் செல்வாக்கும் பெற்று தாமும், தம் குடும்பமும்வளமுடன் வாழ்வாங்கு வாழவேணுமென்று ஸ்ரீவள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கந்தவேளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

மு. ஷண்முகம், M.A.: B.T., காஞ்சிபுரம்.
தலைமையாசிரியர்,
பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி.

அம்மையார்குப்பம் அண்ணா!

மணிவிழாக் கொள்ளும் திரு. G. S. துரைசாமி அவர்களுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு எனக்குக் கடந்த சில ஆண்டுகளாகத்தான் கிட்டியது. எடுத்த எந்த காரியத்தையும் இளமைத் துடிப்புடன் செய்து முடிக்கும் அண்ணாரது ஆற்றல் போற்றற்குறியது. சமுதாய உணர்வில் சிறந்து விளங்கும் இவர் ஏழைகளின்பால் நாட்டம் செலுத்தி அவர்களின் வாழ்வு மலர்ச்சிக்கு உதவிட என்றும் தயங்கியது இல்லை. எங்களைப் போன்றவர்கள் எல்லாம் "அம்மையார்குப்பம் அண்ணா', என அருமையாகப் போற்றப்படும் இப்பெரியாரது மணிவிழா மலர் சிறக்க இறைவன் துணை நிற்பாராக.

மணி விழாக் காணும் மாண்புடைப் பெரியார் இன்னும் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழ்ந்துசீரிய பணிகளில் தொடர்ந்து ஆர்வம் காட்டி உழைத்திட தேக ஆரோக்கியத்தையும் மன திடத்தையும் கந்தகோட்டப்பெருமான் அளித்திட அவர் தாள் பற்றி இறைஞ்சிக் கொள்ளுகிறேன்.

B. R. சுப்பிரமணிய முதலியார் மத்தூர்.

மணி விழா வாழ்த்து

மணி விழா காணும் உயர்திரு G. S. துரைசாமி முதலியார் அவர்களுக்கும், துணைவியார் திருமதி காமாட்சியம்மாளுக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள் பல.

தெய்வீக தன்மையுடனும், இனிய முகத்துடனும், பொதுத் தொண்டுகள் புரிந்து விளங்கும் தாங்கள் இம் மணி விழா புகும் காட்சி என் உள்ளத்தில் ஆனந்த பூரிப்பு ஏற்படுத்துகிறது, தாங்களும், தங்கள் துணைவியாரும், தங்கள் குடும்பத்தாரும் மென்மேலும் பல திருத்தொண்டுகள் புரிந்து பல்லாண்டு சிறப்புடன் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்,

M. துரைக்கண்ணு

மணிவிழா நாயகர்
பவழவிழா காணவேண்டும்!
பல்லாண்டு வாழவேண்டும்!

அருள்மிகு அம்மையப்பர் அருளால் அவதரித்த அம்மையார்குப்பம் நண்பர் G. S. துரைசாமி முதலியார் அவர்கள், தனது வாழ்க்கையைச் சமயப்பணியில் தொடங்கி, சமுதாயத்தொண்டின் வழியாக, நெசவாளர் மரபுடன் பொதுப்பணியில் நடைபயின்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவரும் சிறப்புக்குறியவர். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" எனும் கொள்கையைச் சிரமேற்கொண்டு சமயப்பணியும், சமுதாயப்பணியும் செய்துவரும் அவர்தம் மணிவிழா கண்டு மனம் மகிழ் வெய்துகிறேன்,

அருள்மிகு முருகப்பெருமான் அமைந்துறையும் தணிகைத் திருக்கோவிலில் அறங்காவலராகவும், அப்பழுக்கற்ற ஒழுக்கவழிச் செல்லும் குழுத்தலைவராகவும் அவர் ஒருங்கு சேர்ந்து பணியாற்றிய திறன்கண்டு உளம்பூரிக்கின்றேன். அவர் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்துஞ்சாது, எண்ணித்துணிந்து எடுத்த கருமத்தை சிறக்க முடிப்பவர்.

ஏடறியாது எழுத்தறியாது ஏங்கித்தவிக்கும் ஏழைக் குழந்தைகள் தங்கிப்பயில "அன்பகம்!" அமைத்த அருமையாளர்.

தணிகையில் மலைப்பாதை அமைத்த பெருமையாளர். பக்தர்கள் தங்கிட பல குடில்கள் கட்டிய பண்பாளர்!

இவர் 1969ல் திருத்தணிகையில் குடமுழுக்கு விழா நடத்திக்காட்டியமை எண்ணியும் இனி நடக்கவிருக்கும் திருப்பணிக் குழுவில் துணைத்தலைவராக உள்ள நலம் கண்டு உவகை அடைகிறேன்.

செயல்திறம்கொண்ட சிந்தையாளராம் முதலியார் அவர்கள் செங்குந்தர் மரபினர்தம் குறைகளை வரையாது களைந்த வள்ளலாவார். நீதி நெறி செல்லும் அவர், நெசவாளர் துயர் துடைப்பதிலும் நிபுணர், அம்மையார் குப்பம் ஊராட்சித் தலைவராக பொறுப்பேற்ற போது உயர்நிலைப்பள்ளியை உருவாக்கியவர்! நோயகம் தீர்க்க மருந்தகம் தந்த வித்தகர்!

இவர் அறங்காவல் குழுவுடன் அல்லும் பகலும் அயராது ஆற்றிய பணியாலே குமரக்கடவுளுக்குக் குட முழுக்குச் சிறந்து, அம்மையார்குப்பம் திருமுருகப் பெருமானுக்கும் பெருமுழுக்கு விழாச்செய்தார்,

"யாம் பெற்ற இன்பம் பெறுக
இவ்வையகம்" என்பதெண்ணி

எஞ்ஞான்றும் அறப்பணி செய்துவரும்
மணிவிழாநாயகர் பவழவிழா காணவேண்டும்;
பல்லாண்டு வாழவேண்டும்; அவருக்குப்
பன்னிருகை வேலவன் அருள்பாலிப்பாராக!

வாழ்க மணிவிழா நாயகர்!
வளர்க அவர்தம் அறப்பணி!

M. வடிவேலு, M.A., B.T.,
தலைமை ஆசிரியர்.

உயிருக்கு ஊதியம் தேடுபவர்

உலக உயிர்களுள் மனித இனமே மேம்பட்ட இனம். இவ்வினம் பண்பின் அடிப்படையில் சான்றோர் இனம், கீழ்மக்கள் இனம் என இருவகையில் அடங்கி விளங்குகிறது. "சான்றோர் இனத்து இரு", என்பது அவ்வை வாக்கு. இதற்கேற்ற நிலையில் சான்றோர் இனம் அனைவர்க்கும் கிடைத்தல் அரிதினும் அரிது. இத்தகைய அரிய வாய்ப்பை இளமை தொட்டே பெற்று வளர்ந்த பெரியார்களுள் நம் கி. ச. துரைசாமி முதலியாரும் ஒருவர் என அறியும்போது மனம் மகிழ்கிறது.

இவர் சமூகம், அரசியல், சமயம், வணிகம் ஆகிய துறைகளில் ஆற்றியுள்ள பணிகள் மிகச் சிறந்து விளங்குகின்றன.

தான் பிறந்த ஊரான அம்மையார்குப்பம் ஓர் மாதிரி கிராமமாகச் சிறந்து விளங்க ஆற்றிய தொண்டு இவரது சமூகத் தொண்டுக்குச் சிறந்த சான்றாய் விளங்குகிறது.

அரசியலில் மற்றவர் போல் இன்றி என்றும் காங்கிரசு கட்சிக்கு இப்பகுதியில் விளங்கி நிற்கின்றார்.

திருமுருகப் பெருமானின் ஆறாவது படை வீடாகிய தணிகையம்பதி முருகர் கோயிலுக்கு அறங்காவலர் தலைவர் பொறுப்பேற்று, அக்கோயிலை நவீன நாகரிகத் தோற்றத்தோடு கவர்ச்சிகரமாக்கி, குடமுழுக்கு விழாவும் நடத்திய செயல்

இவருக்குள்ள சமயப் பற்றின் உணர்ச்சியைக் "குன்றின் மேலிட்ட விளக்காய்" காட்டி நிற்கிறது.

இளமை முதல் இன்றுவரை இவர் இப்பகுதி லுங்கி வணிகர்கட்கு வழிகாட்டியாய் அரும் பாடு பட்டு வந்திருக்கின்றார்.

இவர் மாவட்ட நூலக ஆட்சியில் உறுப்பினராய் இருந்து சிற்றூர்களில் நூல்நிலையம் பல அமைய பாடுபட்டிருப்பது கல்வியின் அருமையை உணர்ந்தவர் எனத் தெரிகிறது.

"சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்", என்ற பெரியோர் வாக்குப்படி தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றங்கள் உயர ஏணியாய் அமைந்து உழைத்தவர்.

இத்தகைய இல்லறத்தார்க்குரிய பண்புகளோடு, மனித வாழ்வில் நிலையாமையை யுணர்ந்து இறையுண்மை காண வேதாந்த சித்தாந்த பெரியோர் தொடர்பை நாடிய வண்ணம் வாழ்ந்து வருபவர்.

"ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" - என்ற
வள்ளுவர் வாக்குப்படி உயிர்க்கு ஊதியமும் தேடிவருகிறார்.

இவரது மணிவிழா சிறந்து விளங்கவும், அவர் தொண்டு மேன்மேலும் தமிழக மக்கட்கும், இந்திய மக்கட்கும் கிடைத்துப் பயன்பட மேலும் பல்லாண்டு வாழ்ந்து சிறப்படையவும் எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

———

M. M. சரவணன், B.A.L.T., காஞ்சீபுரம்.
ஓய்வுபெற்ற மாவட்ட கல்வி அலுவர்.
காஞ்சீபுரம் செங்குந்த மகாஜன சங்க தலைவர்.

அம்மையார்குப்பம் உயர்திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்கள் சிறந்த தேசபக்தர். பெருந்தலைவர் காமராஜ் அவர்களோடு நெருங்கிப் பழகியவர். அன்னாரின் நன் மதிப்பையும் பெற்றவர்,

ஆழ்ந்த தெய்வ பக்தி கொண்டவர், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய ஸ்வாமி தேவாலயத்திற்கு பல ஆண்டுகளாக அறங்காவலராக இருந்தவர். எண்ணற்ற சிறந்த பணிகளை யாவரும் பிரமிக்கத்தக்கவண்ணம் செய்தவர் பக்தகோடிகள் வசதியாக தங்குவதற்கு இருப்பிடங்கள் அமைத்த பெருமை நமது பெரியார் அவர்களையே சார்ந்ததாகும். மலையிலேயே உற்சவமூர்த்தி வீதி உலா வருவதற்கு தங்க, வெள்ளி ரதங்கள் அமைத்து லட்சக்கணக்கான அன்பர்களின் பாராட்டுதலைப் பெற்றவர்.

சமூகத்தொண்டிலும் அவருக்கு ஈடாக யாரையும் ஒப்பிடமுடியாது. காஞ்சியில் கடந்த 84, பிப்ரவரி 4, 5 தேதிகளில் நடந்த செங்குந்தர் மாநில மாநாட்டில் வரவேற்புக் குழுவின் இணைத் தலைவராக இருந்து அவர் ஆற்றிய பணி ஏட்டில் அடங்காது, நமது சமூகத்தினரின் வாழ்க்கை அடிப்படை கைத்தறி நெசவுதான் என்பதை நன்கு உணர்ந்து நெசவாளர்களின் வாழ்வு உயர, மலர, வளர்ச்சியடைய தன்னுடைய வாழ்க்கையையே தியாகம் செய்து வருபவர் நமது ஒப்பற்ற தலைவர்.

பல ஆண்டுகளாக தமது சொந்த கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக இருந்து கிராம முன்னேற்றத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்தவர். அரசாங்கத்தின் பாராட்டையும் பெற்றவர்.

தனிப்பட்ட முறையில் தோழமையுடன் பழகுவதற்கு உகந்தவர். அன்பர்களுக்கு வேண்டிய நன்மைகளையெல்லாம் மன நிறைவோடு செய்பவர். ''சிறந்த தமிழர் என்று சொல்லி பாராட்டப்படக் கூடியவர்.

அறுபது ஆண்டுகள் வாழ்ந்து நிறைவுபெற்ற நமது தலைவர் பவளவிழாவையும் கண்டு மகிழ எல்லாம் வல்ல நமது முருகப் பெருமானை பிரார்த்திப்போமாக.

சி. ஆர். உமாபதி. **காஞ்சீபுரம்.**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்.

வடக்கெல்லை போராட்டம் வெற்றி பெற்று தணிகைப்பகுதி வாழ் மக்கள் தாய் தமிழகத்தில் இணைந்த 1—4 1960 முதல் 'அம்மையார்குப்பம்' என்று நான் அன்புடன் அழைக்கும் திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்கள் அறுபதாண்டு நிறைவு மணி விழா காண்பதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

தாய் தமிழகத்தில் தணிகை இணைந்த உடன் தனது கடமை முடிந்துவிட்டதாக கருதாமல் தணி கைப்பகுதியின் முன்னேற்றம் ஒன்றையே தான் மேற்கொண்டவர். வாரியமாக் கொண்டு செயல் பட்டார். சர்க்கார் பொறுப்பேற்றிருந்த காங்கிரஸ் தலைவர்கள், அமைச்சர்கள் யாரை சந்தித்தாலும் சமுதாய முன்னேற்றம் கல்விவளர்ச்சி போன்ற பொதுநல நோக்கத்தோடு கூடிய திட்டங்கள் சொல்லி செயல்படுத்த வற்புறுத்துவதையே தனது தொண்டாக எண்ணி செயல்பட்டார். திருத்தணிப் பகுதியில் துரித முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றியுள்ள பணி மகத்தானது. இவரது அரசியல் வாழ்க்கையும் தொண்டுள்ளமும் எல் லோருக்கும் வழிகாட்டியாக விளங்கும் பெருமை யுடையது. சேக்கிழார் போன்று சிறந்த முறை யில் சைவ சமயத்திற்கு சேவை செய்தவர் செய்து வருபவர். சிறந்த ஆத்மீகவாதி கடவுள் பக்தி மிக்கவர்.

கோவில் நிர்வாகப்பொறுப்பில் பங்கேற்பவர் கள் கடவுள் நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபட வேண்டும், ஆழ்ந்த நம்பிக்கையும், மன ஈடுபா டும், நமது புராதன கோவில் பண்பாட்டை பேணி காக்கவேண்டும் என்ற உறுதியும் உடையவர்கள் தான் கோயில் சம்பந்தமான நிர்வாகப் பொறுப் புக்களை நன்கு நடத்த முடியும், மேற்கண்ட உய ர்ந்த குணங்கள் யாவும் தனக்கிருப்பதை 1963-ம் வருஷம் திருத்தணிகைவாழ் முருகன் கோவில் அறங்காவலராக பொறுப்பேற்று தான் ஆற்றிய சிறப்பான திருப்பணி செயல்கள் மூலம் பக்த கோடிகளின் அன்புக்கு பாத்திரமானவர் துரை சாமி முதலியார் என்றால் அது மிகையாகாது.

எண்ணித் துணிந்த காரியத்தை எந்த சூழ்நிலையிலும் செய்து முடிக்கும் ஆற்றல் இவ ரிடம் நிறைந்துள்ளதற்கு எடுத்துக்காட்டாக முரு கன் கோயில் மலைப்பாதையை ஒப்பிடலாம். மேற் கண்ட பாதை அமைப்புக்காக அவர் நண்பர்களு டன் சேர்ந்து செய்த முயற்சி மகத்தானது எல்லோ ருடனும் இன்முகத்தோடு பேசி ஆவன செய்வதில் ஆர்வமிக்கவர் அமைதியானவர்.

சமயத்திற்கும், சமுகத்திற்கும் அரசியலுக்கும் தெய்வீக திருக்கோயில் திருப்பணிக்கும் அரும் பெறும் தொண்டாற்றிய பெருமகனார் திரு ஜி.எஸ். துரைசாமி முதலியார் மேலும் பல்லாண்டு வாழ்க, வாழ்க அவர் தொண்டு மேலும் வளர்க வளர்க என தணிகைவேல் முருகனை வேண்டி வாழ்த்துகிறேன்.

R. Y. சிங்கார முதலியார், சென்னை

உபதலைவர்,

சென்னை நூல் வியாபாரிகள் சங்கம்

வாழ்த்து

திருப்பணிச் செம்மல் திருவாளர் G.S. துரைசாமி முதலியார் அவர்களின் அறுபதாமாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மலரொன்று வெளி வருவது கண்டு மிக்க மகிழ்ச்சியும், மன நிறைவும் கொள்கிறேன்.

மணிவிழாக்காணும் நாயகர் திரு கி. ச. து. அவர்கள் தணிகைத் திருக்கோயிலில் பன்னெடுங் காலமாக நடந்து வந்த காலைசந்தி கட்டளையை செங்குந்த சமூகத்தினரின் நிரந்தர கட்டளை யாக்கி நடந்து வருகிறது. தணிகை முருகனின் கோயிலில் திருப்பணிகள் அயராது செய்வித்து பல்லோராலும் வியக்கும் வண்ணம் செய்துள்ளார்.

அன்னார் பல்லாண்டு வாழ்ந்து பலவளம் பெற தணிகை முருகனை வேண்டுகிறேன்.

காஞ்சீபுரம்.

A. சம்பந்தன்,

செயலாளர் :

பட்டு ஜவுளி உற்பத்தியாளர் சங்கம்.

ஆணித்தரமான உபகாரி!

'பிறவி எடுத்ததின் பயன் தம்மால் முடிந்த வரை பிறருக்கு உதவியாக வாழ்தல்' என்பது உயர்ந்தவர்களின் கொள்கைக்கு ஏற்ற இலக்கணமாக வாழ்ந்து வருபவர் மணி விழாக் கொள்ளும் மாண்புடைப் பெரியார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். தாம் மேற் கொண்ட பணிகளைச் செவ்வனே செய்து முடிப்பது, காலந்தவறாமை, கடமை உணர்வு, பெருந்தன்மை முதலிய உயர் பண்புகளில் சிறந்து உபகாரியாய் விளங்கும் ஒழுக்க சீலர் அவர் என்பது அவரை அறிந்தவர் அறிந்தது. தாம் மேற்கொண்ட பொதுப்பணிகள் பலவற்றுள்ளும் செங்குந்தர் மாநாடு போன்ற இனப்பணிகளிலும், திருக்கோயில்களில், குறிப்பாக தணிகை வேலன் திருப்பணிகளிலும் அவர் செய்துள்ள அரும் தொண்டுகள் அளவற்றவை- ஆணித்தரமானவை, அன்பர்களால் பாராட்டப் படுபவை.

மணிவிழாக் காணும் பெரியார் திரு. G. S. துரைசாமி முதலியார் செங்குந்தர் தம் குல முதற் கடவுள் குன்றுதோராடும் குமரனருளால், பேரும், புகழும், பெருவாழ்வும் மேலும் பெற வாழ்த்துகின்றேன்.

T. N. ராமசாமி முதலியார், **அம்மையார்குப்பம்.**
முன்னாள் பிரசிடென்ட்,

அணைத்துவாழும் அருங்குணச்செம்மல்

திரு. G.S. துரைசாமி முதலியாரவர்கள் இறை பணி பொதுப்பணி, சமூகப்பணிகளில் அயராது உழைத்து அரும் பாடுபட்டு சிறப்புற பணியாற்றி ஞர்கள். நான் இளமையிலிருந்து அவரோடு பழகி அவரது உறவினனுமாவேன். ஊராட்சியில் அவர் பத்துஆண்டு தலைவராகயிருந்து நான் துணைத் தலைவராக இருந்த காலத்தில் அம்மையார் குப்பம் தன்னிறைவு பெற்றது. தணிகை ஆலயத் தில் அறங்காவலக் குழுத் தலைவராகயிருந்து சிறந்த திருப்பணி செய்து குடமுழுக்கு, மலைப்பாதை, குடில்கள், கலைக்கல்லூரி ஆகியவைகளை பிறர் வியக்கும் வண்ணம் செய்தார். அம்மையார்குப் பத்தில் எல்லா கோயில்களுக்கும் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்துள்ள இவர் முருகன் அருள் பெற்று நீடூழி வாழ வேண்டுகிறேன்.

ஐயப்ப பக்தர்கள்,
அம்மையார்குப்பம்.

S. பாலசுப்பிரமணி குருக்கள்
S. கிருஷ்ணமூர்த்தி ஐயர்,
N. C. கோவிந்தசாமி முதலி,
M. வெங்கடேச முதலி,
சாமி அருணசல முதலி,
S. அவிஞசி முதலி.

மணிவிழா காணும் துரைசாமி முதலியார் வாழ்க

அறுபதாண்டு நிறைவுவிழாத் தலைவர் துரைசாமி
அரும்பணிகள் அகிலமெங்கும் ஓங்கிடவே நாளும்
அறுமுகனின்திருவடியை அனுதினமும் போற்றி
ஆடிடுவோம் பாடிடுவோம் அனைவருமே ஒன்றாய்;
மறுவிலாத மணியாரம் மலர்ந்த திருமார்பும்
மணிநீருலும்திருமுகத்தில் காட்சிநல்கும் நாளும்
உறுபகையோ சிறிதுமிலா உத்தமரை நாமும்
உலகமதில் வாழ்ந்திடவே வாழ்த்திடுவோம் நன்றே

அணிமலையாம் தணிகைமலை யமர்ந்த நாதன்
அடிபணியும் துரைசாமி யண்ணல் நாளும்
பணிவுடனே அருளுரையில் பாரோர் ஏத்தும்
பண்புடை ஐயப்பன் திருத்தாள் போற்ற
கணிசமுடன் இருமுடியைத்தலையில் தூக்கி
கண்கவரும் இடமெல்லாம் காட்டு வித்த
மணித்தொண்டர் மணிவிழவோ மாண்பு பெற்று
மாநிலத்தில் என்றென்றும் சிறக்க வாழி!

புலவர் மி. ச. நடேசன்
முன்னாள் தணிகை அறங்காவலர் குழுத்தலைவர்,

தொண்டர் தம் பெருமை சொல்லில் அடங்குமா?

மணிவிழா காணும் திருவாளர் துரைசாமி முதலியார் அவர்கள் பல்லாண்டு வாழ்க! அவர்களின் தொண்டு, குறிப்பாக திருத்தணி தொகுதி மக்களுக்கும், சிறப்பாக அவர் சார்ந்துள்ள சமுதாயத்திற்கு பயன்படுமாக. அவர்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளும் வெல்க! அவர்களின் புகழ் தமிழகம் எங்கும் பரவுக என்று வாழ்த்தும் போது அவர்களுடைய இன்றைய நிலையையும், ஆரம்ப நிலையையும் எண்ணிப் பார்த்து அவர்களை நான் என் வாழ்க்கை உயர்வுக்கு வழிகாட்டும் என் அண்ணனாக மதிக்கிறேன், போற்றுகிறேன்,

அடுத்து அம்மையார் குப்பத்தில் பிறந்து உழைப்பால் உயர்ந்த உத்தமர் தற்போது பல்வேறு தடைகளைத் தமது உயர்வுக்கு படிக்கட்டாக்கிக் கொண்டவர்கள்,

தணிகைப் ப்குதி. ஆந்திரத்தோடு இணைந்திருந்த நேரத்தில் மக்களின் உள்ளக் கோயில்களில் வீற்றிருக்கும் மதிப்பிற்குரிய மங்கலங்கிழார் அமைத்த படையில் தன்னையும் இணைத்து அரும்பாடுபட்டதை பகுதி மக்கள் உள்ளங்களில் பதியவைததுக் கொண்டவர்.

அம்மையார் குப்பத்தில் நெடுங்காலம் ஊராட்சித் தலைவராக பொறுப்பேற்று பல்வேறு திட்டங்களைச் செய்து ஊராரின் உள்ளத்தில் குடிகொண்டிருப்பவர்.

கைத்தறித் தொழிலை நம்பி வாழும் ஏழை நெசவாளர்கள் உயர. நண்பர்கள் பலரையும் அத்துறையில் ஈடுபடச் செய்து. ஏழை நெசவாளர்கள் சமுதாயத்தினர் உள்ளங்களில் வீற்றிருப்பவர்.

தணிகை தந்த பெருமகன், தத்துவமேதை உலகப் புகழ் உத்தமர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க மலைப்பாதை அமைத்து பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்துத் திறந்து வைத்த காட்சி என்றும் மறையாது.

மணிவிழா காணும் பெரியவர் துரைசாமி முதலியார் அவர்கள் நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

திரு துரைசாமி முதலியார் அவர்களின் பெருமைகளை என் சொல்லில் அடக்க நினைத்தேன். முடியவில்லை. தொண்டர் தம் பெருமை சொல்லில் அடங்குமா.

———

அ. இராமசாமி முதலியார், திருத்தணிகை.

"திருப்பணிச் செம்மல்"

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" குறள்

மனிதப் பிறவி எல்லாப் பிறவிகளிலும் மிக உயர்ந் தது, மனிதன் பிறந்தான் - வாழ்ந்தான் - மடிந்தான் என் பதல்ல ; பிறருக்கு இன்னா செய்யாமை, பிறர்மாட்டு வரும் இடுக்கண் களைதல் ஆகிய நன்னோக்கங்களை யும், செயற்கறிய நற்காரியங்களை ஆற்றியவர்களை யுந்தான் நல்லுலகம் வரவேற்கும் என்பது "பொது மறை."

இத்தகைய செயற்கரிய காரியங்களை ஆற்றியவர் நமது பெரியவர் திரு. கி. ச. துரைசாமி அவர்கள். மேல வைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தலைமையில் நடந்த வடக்கெல்லைப் போராட் டத்தில் பலமுறை பங்கேற்று உழைத்தவர். தணிகை தாய்த்தமிழகத்தோடு இணைந்த பிறகு, முருகன் ஆலயத் தில் 13 ஆண்டுகள் அறங்காவலராகவும், 10 ஆண்டுகள் அறங்காவலர்க் குழுத் தலைவராகவும் இருந்தார். இவரது காலத்தில்தான் நன்கொடை மூலமாக பல குடில்களும், அறைகளும் கட்டி முடிக்கப்பெற்றன. 25 லட்ச ரூபாய்க்கு மேல் நன்கொடை வசூலித்து, பல திருப்பணிகள் செய்வித்து, 1969-ம் ஆண்டில் "குடமுழுக்கு விழாவை" செய்வித்தார். தமிழக முதல்வராக இருந்த "பேரறிஞர்"

அண்ணா அவர்களை வரவழைத்து, புதிதாக அமைக்கப் பெற்றிருந்த, மலைப்பாதையைத் திறக்கச் செய்தார்.

தணிகையில் ஒரு கலைக் கல்லூரி இவரது காலத்தில் தான் தொடங்கப் பெற்றது. சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் திரு. நெ. து சு. அவர்கள் இதற்கு உறுதுணையாக இருந்தார்.

பொது வாழ்விலும், ஏழை எளியோர்மாட்டு இவர் கொண்டுள்ள பற்றும், பாசமும் அதிகமாகும், இவரது உழைப்பால் உயர்ந்தோர் பலர்.

"திருப்பணிச் செம்மல்" சீருடன் வாழவும், அவரது நற்பணிகள் மேல்மேலும் வளரவும்: தணிகை முருகனை வேண்டுகிறேன்.

புலவர் ப. கி. பொன்னுசாமி, எம்.ஏ., பி.லிட்.
தமிழாசிரியர், மாநகராட்சி மேனிலைப் பள்ளி, சென்னை.

கருவில் திருவுடையவர்

பிறந்த ஊருக்கு பெருமை தேடியவர்

மதிப்பிற்குரிய உயர்திரு G. S. துரைசாமி முதலியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 'மணி விழா' கொண்டாடுவது குறித்தும், 'மணி விழா மலர்' வெளியிடுவது குறித்தும் பெரிதும் மகிழ்வடைகின்றேன்

பெரியவர் துரைசாமி முதலியார் அவர்கள் செங்கை மாவட்டத்தில் அம்மையார்குப்பம் என்னும் ஊரில் தோன்றியவர், இளமை முதற் கொண்டே கைத்தறி ஆடை வாணிகத்தை மேற்கொண்டு தன்னுடைய உழைப்பால் முன்னுக்கு வந்தவர் ; கருவிலே திருவுடையவர் ; இறையன்பு நிரம்பப் பெற்றவர்; ஆல் போல் உற்ருர் உறவினர்களைப் போற்றிப் பாதுகாப்பவர் ; ஏழைகளிடத்தில் இரக்கமுடையவர் ; சமயப்பற்று மிகுந்தவர்.

முதலியார் அவர்கள் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் அறங்காவலராக இருந்து அரும் பணியாற்றியவர் ; முருகப் பெருமானிடத்து நீங்காத பக்தியுடையவர் ; தான் பிறந்த ஊருக்குப் பெருமை தேடும் வகையில் அரசு

மேனிலைப் பள்ளி உருவாவதற்கு முன்னோடி யாக விளங்கியவர்; தமது ஊரிலுள்ள சுப்பிர மணிய சுவாமி கோயில் அறப்பணி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக அரும்பணி ஆற்றி வருப வர்; இவற்றிற்கு மேலாகச் சமுதாயத்தின் முன் னேற்றத்திற்காக அயராது உழைத்து வருபவர்.

இத்தகைய அரும்பண்புகள் நிறைந்த பெருமக னாரின் அறுபதாம் ஆண்டின் மணி விழா கொண் டாடுவதுடன் அமையாது. பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழாக் கொண்டாடும் வகை யில் சீரும் சிறப்புடன் உடல் நலத்தோடு நீண்ட நாள் வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறை வனின் அருளை வேண்டுகிறேன்.

சு. பன்னீர் செல்வம், பி. எஸ்ஸி., பி. டி.,
நரசிங்கபுரம், மின்னல்.

மணிவிழா மடல்

அன்புள்ளம் கொண்டவரே அஞ்சா நெஞ்சம் பெற்றவரே - எங்கள் இதயத்தில் வாழும் இனியவரே துரைசாமியே - செங்குந்தர்களுக்கு மன்னவரே!

கைத்தொழிலை சிறப்புடன் நடத்தி பாரினில் - புகழ் மணக்க ஏற்றுமதி தந்து தம் இனமக்களின் வாழ்வுக்கு வழி வகுத்திட்ட மன்னவா வாழ்க பல்லாண்டு, வாழ்க பல்லாண்டு!

பொதுநலம் கொண்டவரும் தம் இனத்தவருக்கே உரித்தான இறைபக்தியை நாட்டுக்கு ஊட்டிட திருத்தணிகை தேவாலயத்துக்கு அறங்காவலர் குழுத் தலைவராக வந்து கோயிலை சிறப்புடன் நடத்திய துரைசாமியே தங்கள் பணி சிறக்க வாழ்க பல்லாண்டு, வாழ்க பல்லாண்டு.

நாட்டு நலம் கருதி அன்னை இந்திராவின் காவலராக இருந்து காமராஜின் சீடராக வந்து ஊருக்கும் நாட்டுக்கும் நற்பணியாற்ற புறப்பட்டு, தொண்டுள்ளம் கொண்ட துரைசாமியே தங்கள் பணி சிறக்க வாழ்க பல்லாண்டு, வாழ்க பல்லாண்டு.

வள்ளுவன் வகுத்த இல்லறம் உணர்ந்து இல்லத்தின் குல விளக்காய் நம் இனத்தாரின் ஒளி விளக்காய் உலகத்தின் புது விளக்காய் அன்பின் அகல் விளக்காய் ஆலயத்தின் திருவிளக்காய் திகழும் துரைசாமியின் புகழ் மணக்க இல்லறம் நடத்திட்ட மன்னவனுக்கு பல்லாண்டு, வாழிய பல்லாண்டு.

V. M. பாண்டுரங்க முதலியார் புதுப்பேட்டை.
V. K. சீனிவாச முதலியார்
ஸ்ரீ அபிராமி வீவிங் பாக்டரி.

"நாங்கள் கண்ட நற்பண்புடைப் பெரியார்"

தொண்டை நன்னாட்டின் தூய நற்குணச் சான்றோர் அம்மையார் குப்பம் கி. ச. துரைசாமி முதலியார் அவர்களுக்கு அறுபதாமாண்டு நிறை வெய்தி மணிவிழாக் காணும் மாண்பினையும், அப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை நறுமணம் மிக்க மலராக வெளி வருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியில் மனம் பூரிக்கின்றோம்.

கி. ச. துரைசாமி முதலியார் அவர்கள் எங்க ளுடன் பல்லாண்டுகளாகப் பழகிய பண்பாளர் அத்துடன் எங்கள் சமுகத்திலேயே அயரா உழைப் பினாலும், இறையருட் பக்தியாலும், ஆலய திருப் பணிகள், பெருஞ்சாந்திகள், முதலிய அருந் தொண் டுகளினாலும், மக்கள் சேவையே, மாதேவன் சேவையென்று பற்பல பொதுத்தொண்டுகளிலும் முன்னின்று பணியாற்றி பேரும் புகழும் எய்திய பெரியார்.

இனிய இருக்க இன்னாத கூருதவர், எளிய வாழ்க்கை, எளிய உடை, நடையுயைடவர், ஆடம் பரத்தை அறவே வெறுப்பவர், பிறர்க்கு உதவி செய்வதில் நேரம் காலம் பார்க்காமல் நட்பின் நலம் கருதி விரைவாக வருவார்.

எங்கள் சமூகத்திலும், கிராமங்களிலும் ஏற்படும் பெருஞ் சிக்கல்களை சமயோசித புத்திக் கூர்மையால், இருபாலரும் இணங்கி வந்து பாராட்டும்படி தீர்த்துவைப்பவர்.

திருத்தணிகையம்பதி ஆலய அறங்காவலக் குழுத்தலைவராய் பத்தாண்டுகளிருந்து பாரோர் வியக்கும் வண்ணம் பெருந்திருப் பணிகளையும் குடில்களும் வசதியுள்ள வயது முதிர்ந்தோர் வள்ளல் முருகனைத் தரிசிக்க மலைப்பாதையும், புதிதாயமைத்து பக்தர்கள் உள்ளம் பரவசமடையச் செய்தார்கள்.

ஆலய நித்திய பூசை நிபந்தங்களும் சரவணப்பொய்கை படித்துறை நீராழிமண்டபத் திருப்பணியும் ஆலய வருவாயைப் பெருக்கும் திட்டங்களும் ஆலயச் சார்பில் கலைக்கல்லூரியையும் நிறுவினார்கள்.

பிறந்தபதியில் ஆலயத் திருப்பணிகளும், குடமுழுக்குகளும், கல்வி மருத்துவம் வழித்துறை நற்பணிகளையும் தன்னிறைவடையச் செய்தார்.

''அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழு மில''

என்று கருதுபவர்கள் இவருடைய செல்வமும் செல்வாக்கும் பலருக்கும் பயன்பட்டு வருகிறது.

இப் பெரியாரை அகங்குளிர
வாழ்த்துகின்றோம் !!!

புலவர்: கா. பா. இராசகோபால், M.A., B.Lit., B.Ed.,
தமிழாசன் அரசு மேனிலைப் பள்ளி.

மின்னல்.

மணிவிழாத் தலைவர் நீடு வாழ்க !

தெண்ணீர் வயல்சூழ் தொண்டை நாட்டில் அணிபொழில் சூழ்ந்த அழகிய நல்லூர் அம்மை வள்ளியால் அரும்பெயர் பெற்ற அம்மையார் குப்பம் என்னுமூரில் செய்யுந் தொழிலில் சிறந்த தொழிலாம் நெய்யுந் தொழிலை நேர்படச் செய்து உய்யும் நல்லோர் உயர்ந்த குலமாம் குந்தர் குலத்தில் குவலயம் போற்ற வந்த நல்லோன் வளமுடைச் செம்மல் சடையப்ப முதலி தகைசால் வாழ்வில் இடையில் தோன்றிய இனிய புதல்வன் இன்குணங் கொண்ட இனிய பண்பாளன் மணி விழாக் காணும் மாண்புறு நல்லோன் தொண்டுளங் கொண்ட துரைசாமி முதலி அரிய தொண்டை அனைவரும் மனங்கொள் அருந்தமிழ்ப் பாட்டால் அழகுடன் சொல்வேன்.

தண்டமிழ் முருகன் தங்கியுள்ள தணிகை ஆலயப்பணிகள் தன்னை இனிதே நடத்தும் இன் குழுவிற்கே அறங்காவலரின் அணிமிகு தலைவராய் தணிகைக் குன்றில் அணிபெற விளங்கும் தண்டமிழ் முருகன் தகைசால் கோயிலை அணி பெறச் செய்து அழகுடன் திகழவும், தங்கும் குடில் கள் தகவுடன் கட்டியும், பொலிவற்றிருந்த சரவணப்பொய்கை பொலிவுடன் திகழப் புதுப்படி அமைத்தும் திருக்குட முழுக்கு விழாவைச் செய்து

அம்மையார்குப்பம் அழகுடை ஊராய் செம்மை யுடனே சீர்பெற வேண்டி ஊராட்சி மன்றத் தலைவராகி பாராட்டும்படி பணிசெய் திட்டதால் அவ்வூர் தானே அளவிலா நன்மை

எவரும் புகழ எய்திடச் செய்தும் செங்கை மாவட்ட நூலகக் குழுவின் அங்கத்தினராய் ஆர்வத்துடனே ஆற்றிய பணியை யனைவருந்தானே போற்றியே புகழ்வர் இன்றும் நன்றாய் அம்மையார்குப்பம் உயர்நிலைப்பள்ளியின் கட்டிடக் குழுவின் தலைமை யேற்று உயர்நிலைப் பள்ளியை ஊரில் திறந்தும் மேனிலைப்பள்ளியாய் மாற்றச் செய்து தொல்காப் பியமெனும் தொன்னூல் தானே வடக்கில் வேங்க டம் தெற்கில் குமரி என்றே கூறி எல்லை வகுத்தது. மொழிவாரி மாநிலம் அமைத்த போது திருமுருகன் தான் வாழும் மலையும் ஆந்திர மாநிலத்துடனே சேர்க்க எல்லாத் தமிழரும் எரிமலையாகி எல்லை காக்க எழுந்த போது சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யுடனே "எல்லையைக் காப்பேன் "என்றே கூறி போராட்டத்தை நடத்திய உங்களைப் பாராட் டாமல் இருக்கலாமோ?

செந்தமிழ் முருகன் வழியில் தோன்றிய குந்தர் தாமே இந்நாடெங்கும் தென்னிந்தியாவின் செங் குந்தர் சங்கம் பழமை வாய்ந்த பல்லவர் பதியாம் எழில்மிகு காஞ்சியில் எடுத்த மாட்டை சீர்பெற விருந்தே சிறப்புடன் நடத்தினீர்!

தணிகைக் குன்றம் தகவுடன் சிறக்கவும், அழகுடன் மிளிரவும் திருக்குட முழுக்கு விழாவைச் செய்ய அறநிலையத்துறை ஆணையர் தானே இனிதே யிருந்து இன்பணி யாற்றிட நன்றே யாணை நயந்திட் டுள்ளார்.

நல்லோர் விரும்பும் நற்செயல் களையே நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் எண்திசை யோரும் என்றும் வணங்கும் தண்டமிழ் முருக னின் தண்ணருள் வேண்டி நற்றமிழ் போல நானிலந் தன்னில் நீடு வாழ்க! பல்லாண் டென்று பாட்டால் பலமுறை வாழ்த்திட் டேனே!

திரு-திருமதி வெ. மு. கோவிந்தசாமி முதலியார்,

முன்னாள் ஊராட்சி, வங்கநூர்.

பள்ளிக்கட்டிடக் குழு தலைவர்.

முன்னணிக்குக் கொண்டுவந்த முதல்வர்

அம்மையார்குப்பம், உயர்திரு. G. S. துரைசாமி முதலியார் அவர்கள் எங்கள் தாய் மாமன், இப்பெருந்தகையார் எங்களுக்கு உறவின் உரிமையானவரோடு மற்று எல்லா சமூகத்தவர்களுக்கும் எல்லா கிராமங்களுக்கும் பொது சொத்தானவர். “நப்போல்வளை” “சுற்றத்திற்கழகு சூழ இருத்தல்” என்ற முதுரையின்படி உறவினர்களை அணைத்து அருளும் தன்மையால் நாங்கள் ஒவ்வொருவரும் பற்பல முன்னேற்றத்திற்கு வந்தவர்கள். அனைத்துக்கும் மூல காரணம் எங்கள் மாமாதான். இவர்கள் ஆன்மீக அருளாளர்களையும் அரசியல் துறை அமைச்சு பெருந்தகையார்களையும், அதிகார வர்க்க தலைமையாளர்களையும், நெருங்கி மிக்க தொடர்பு உடையவரானதால் பொதுநலத் தொண்டில் ஈடுபட்டது முதல் தம் ஊரேயன்றி அண்மை ஊர்களுக்கும் வளம் மிக்க நற்பணிகளான கல்வி, மருத்துவம், பேருந்து வசதி, முதலியவற்றை திறம்பட செய்வித்தார்.

ஆதலால் பெரும் பங்கு தெய்வத் தொண்டில் ஈடுபட்டவர்கள் தணிகைப்பதி இன்றுள்ள நன் னிலைக்கு வந்ததற்கு காரணம் எங்கள் மாமா அவர்கள் என்று நாங்கள் சொல்லுவதல்ல, தமி ழகமே சொல்லுகின்றது. இவர் செய்த நற்செயல் சொல்லும் தரமன்று.

இந்த நன்னாளில் எங்கள் தாய் மாமாவும், மாமியும், மக்களும் மேலும் பல சிறப்புடன் உடல் வனப்போடு உள்ளம் களிப்புடன் பல்லாண்டு வாழவேண்டும் என்று தணிகேசன் தண் ணருளை வேண்டி எங்கள் மாமாவின் பொன்னார் திருவடிகளை வாயார வாழ்த்தி மனமார வணங்கி வழிபடுகின்றோம்.

శ్రీ

లోకమాన్య రాజపూజితులైన శ్రీ శ్రీ శ్రీ దొరస్వామి మొదలియార్ గారి
షష్టిపూర్తి వేళయందు, మద్రాసు వాస్తవ్యులు, నెం. 97,
శ్రీ అయ్యప్ప నగర్, యం. యస్. మణిగారు.
సమర్పించిన

—: ప ద్య ర త్న ము లు :—

శతమానం, భవతి, శతాయుర్భవతి,

సీ॥ చడయప్ప మొదలియార్, ధన్య మునియాతమ్మ
తొలిజన్మ ఫలముగా, వెలసినాడు,
తమిళనాడు, తిరుత్తణి దనరార జేర్పింప, మాపోశి
దొరస్వాములు పోరాడి, శిక్షల బొందినారు,
ఆ తిరుత్తణి దేవున - కభిషేక మొనరించి
ధర్మకర్తవ్య పదవిలో దనరినాడు,
పంచాయతీబోర్డు ప్రెసిడెంటుగా జేరి
ప్రభుత్వ మెప్పును గాంచి - ప్రబలినాడు,
గీ॥ అమ్మయారికుప్ప - మాతని స్వగ్రామమందు
అచట వ్యాపారమున, పేర్గాంచిన దిట్ట యితడు,
శ్రీలు చెలువొంద, షష్టి పూర్తి వేళ నేడు,
యితడె, దొరస్వామి మొదలియార్, అతులగుణుడు.

(శ్రీ కృష్ణపరమాత్మని దీవించుటకు పిలుపు)

ఉ॥ అరయన్, శంతను పుత్రుపై, విదురుపై, అక్రూరుపై, కుబ్జపై
నరుపై, ద్రౌపదిపయిన్, నందవ్రజశ్రేణిపై, పరగన్ గల్గు
భవత్ కృపారసము, మా దొరస్వామి మొదలియార్ పైన
కొంత రానిమ్ము, నీ చరణాబ్జంబుల నమ్మి జగదీశా! కృష్ణభక్తప్రియా!

(శ్రీరామచంద్రుని దీవించుటకు పిలుపు)

ఉ॥ కరినేలింది హులక్క, ద్రౌపదికి కోకల్ మెచ్చి యిచ్చినది దబ్బర!
కాకాసురుని కటాక్షమున, చేబట్టిన దబద్ధంబు హా! శరణన్నన్ పగవాని
తమ్మునకు రాజ్యం బిచ్చుటల్ కల్ల, యిత్తరి మా దొరస్వామి
మొదలియార్‌ను దీవించిన, నిక్కము నీ కథలు, రామా!
రామచంద్ర ప్రభో!!

సర్వేజనా స్సుఖినో భవంతు!
సమస్త సన్మంగళాని భవంతు!!

యం. యస్. మణి.

கி. ச. இராதா, வள்ளியம்மை அம்மையார்குப்பம்

ஸ்ரீ சங்கர்

அறுபதல்ல! இருபதே!!

பூர்வீகக் குடியில் தோன்றிப் புறம்படாத
புகழ்மிக்க வீரர்குலமென பேறும் பெற்று
ஊராண்ட ஏதுவால் கிராமணியாக நின்று
உண்மையாய் ஊருக்கே நன்மை செய்து
"கிராமணிகள்" எனும் வழிப்பெயர் பெற்றுக்கொண்டு
கிராமணி, சடையப்பர்க்கும் முனியம்மைக்கும்
சீரான, மகவாக உலகில் தோன்றி
சீர்பெற்ற துரையான சாமியே நீவிர் ;

தோன்றிய நாள்முதலே தொண்டுள் ளத்தால்
தோன்றியதோ பொதுத் தொண்டு உம்முடனே !
ஊன்றிய பற்றதனுல் ஊருக்கும் தான்
உழைத்ததனால் ஊருக்கே தலைவர் நீரே.
ஆன்றமைந்த அறிவதனுல் அறிவோ ரெல்லாம்
அழைத்தழைத்து பதவிகளை உமக்கே தந்தார்.
தோன்றியது அப்பதவிக் கெல்லாம் புகழும்தானே
துவளாத உம்முழைப்பால் துணிந்து சொல்வேன்.

தணிகை முருகனே தாமென்று சொன்னால்
தப்பாக இருக்காது. சில்லோர் ஒப்பார்.
அணியணியாய் அக்கோயில் அழகுறவே
அவனாகி நீரிங்கே தோன்றி நின்றீர் !
பிணியாலே நீர்பட்ட துன்ப மெல்லாம்
பனிபோல போனதெனின் யார்தான் செய்தார் ?
பணியெல்லாம் அறப்பணிகள் அவன் பணிகள்
ஆதலாலே நீரேதான் பிழைத்தும் விட்டீர்.

M

காரியங்கள் பலருக்கும் பலவும் செய்தீர்
கருணையால் தான் காசுபணம் கேட்டீரோ?
கார்மேகம் உலகத்தை வாழச் செய்தும்
கைமாறு என்ன செய்தார் உலகத்தாரும்?
பாருக்குள் காதவழி பேரும் பெற்றீர்
பக்குவங்கள் பகைவர்க்கும் செய்து வந்தீர்.
வாரியரும் வந்திங்கே வாழ்த்தும் பேற்றை
வகையாகப் பெற்றீரே இனியென் வேண்டும்?

அறுபதல்ல நீர்கடந்து செல்வ தண்ணா:
இருபதென்றே எல்லீரும் இயம்பு கின்றோம்.
பொருப்புக்கள் இனிநீங்கள் பலவும் பெற்று
புவியிதற்கு நல்லவைகள் செய்வீர் அண்ணா?
உறுப்படியாய் நல்லவைகள் செய்யும் தொண்டில்
உரமேற்றி உறுதியுடன் செய்வீர் அண்ணா!
குறைகொண்ட நம்கோயில் கோபு ரத்தைக்
குறைநீக்கி உயர்தூக்கி வைப்பீர் அண்ணா.

மணிவிழாவில் நம்தெய்வ வாழ்த்தும் பெற்றீர்
மங்காமல் அத்தனையும் வந்து சேரும்.
பணிவதனால் பலர்போற்றும் வாழ்த்தும் உற்றீர்
பதமனைத்தும் இனியுமக்கு ஒன்று சேரும்.
தணிகையருள் முருகனவன் இருக்கும் போழ்தில்
தலைக்குனிவு உமக்குண்டோ? இல்லை, இல்லை
அணியணியாய் உம்மாயுள் பல்நூற்றைப் பெற்று
அகிலமே போற்றிடவே வாழ்வீர்! வாழ்வீர்!!

வணக்கம்.

திரு V. இரத்தினசாமி, **காஞ்சீபுரம்.**

கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குனர்

மணிவிழா வாழ்த்து மடல்

ஏடெடுத்தேன் கவிதை ஒன்று எழுதிடவே எழுத்தெல்லாம் கவிதை என்ருல் என் எழுத்தும் கவிதை தான் என்ருலும் பாரில் பலரும் தமிழை பாடிவிட்டார் எதைப் பாட என்று நான் ஏங்கி நின்றேன் அப்போது ஓர் அன்பு குலம் எழுந்து வந்தார் எனைப் பாடென்ருர் அம்மையப்பன் பெற்ற மைந்தன் அருள்திரு முருகன் தன்னின் அடியேன் நானென்ருர் ஈரைந்து திங்களுடன் இன்னும் ஓர் ஆண்டு ஈசன் தன் மைந்தன் திருத்தணி வாழ் திருகுமரன் தாசர்க்கு தாசனுய் இருந்தவரும் இவரேதானே அருள்மிகு முருகன் வாழும் திருத்தணி அருகினில் இருக்கும் ஊர் அம்மையார் குப்பம் இரக்தாக்ஷி ஆண்டு ஆவணித் திங்கள் பத்தாம் நாளில் அன்னை முனியாத்தம்மாள் தந்தை சடையப்பர் இவர்களுக்கு மகனுய் பிறந்தார் வான்புகழ் வள்ளுவன் தன் வாக்குக்கு இலக்கணம் போல் தந்தைக்கு முந்தி நின்ருர், ஊராட்சிதனில் தலைவனுய் உயர்வும் பெற்றார் குப்பமெல்லாம் குப்பையே என்றிருந்த காலத்து அம்மையார் குப்பத்தை ஆல் போல் வளரச் செய்தார் அவ்வூரில் எல்லா வசதிகளும் செய்தார்.

படிப்புக்கு பள்ளி, நோய்க்கு மருத்துவமனை உயிர் வாழ நெல்லிருந்தாலும் பயிர் வாழ நீர் தேவை என்பான் போல், ஊர் வாழ ஊரணி கண்டு குழாயும் குடிநீரும் கண்டார், அன்நீரும் பன்னீர் போல் அருந்துகின்ருர் உண்டோர் எல்லாம் வாழ்த்துகின்ருர் அன்றும் இன்றும் எளியவர் இனியவர் பண்பாளர். பணியாற்றும் திறனில் இவர் ஈசனின் உறுதி கொண்டவர் அதனால் குன்று தோறும் குடியிருக்கும் குமரனுக்கு திருத்தணி முருகனுக்கு தாசனுய் வாழ்கின்ருர் குமரன் அருள் பெற நினைக்கும் ஆயிரமா

யிரம் மக்களுக்கு மலை ஏறிச் செல்ல நல்ல வழி கண்டார். அவர் தம் வாழ்த்தினை இன்று வரை இருத்திக் கொண்டார் பிறந்ததே மன்னர் குழுவில் முதலிடம் வகிக்கும் முதலியார் குலம்.

பறந்ததே பாரில் புகழ் பரப்பும் பல நாட்டில் வாழ் வாங்கு வாழ்ந்த இவர் தம் சாதனைகளை வாழ்த்தாத வாய் உண்டா? இல்லை, இல்லை. அறுபதை அடையும் அன்பர் உடலில் உரம் கொண்ட இருபதில் இன்னும் தன்ழ்க்கின்றார், இவர் தம் புகழ்பட இருப்போர் எண்ணில் அடங்கா அகிம்சையின் நாயகனும் அண்ணல் காந்தி அவர் தம் தொண்டன் இவர் அன்றே திருத்தணி கொண்டான் திருமிகு புகழ் கொண்டான் மாவீரன் மா பொ. சி. வீறு கொண்டெழுந்தபோது விழித்தெழுந்தது இத் தமிழகம் அவர் படையில் இவர் சேர்ந்தார்.

பாலகன் பள்ளிக்குச் செல்வது போல் சிறை சென்றார். வென்று வந்தார், திருத்தணியை தமிழகத்திற்கு அன்னைபூமி அடைந்தது திருத்தணியை அருள்முருகன் அருளாளன் என்றும் அருள்பாலிக்கின்றான்.

திருமிகு துரைசாமி பெயரைச் சொல்ல மணி விழா காணவா வேண்டும் அன்பர்களே! திருமுருகன் வாழும் திருத்தணி என்றும் சொல்லும். அன்னார், பல்லாண்டு வாழ்க, பல்நலம் பெற்று வாழ்க, வாழ்க, வாழ்கவே பல்லாண்டு.

வெணியன் அச்சகம், 169, பிராட்வே, சென்னை-600

உ

முருகன் துணை



அம்மையார்குப்பம்

திருப்பணிச்செம்மலும், பொதுநலத் தொண்டருமாய

உயர்திரு G. S. துரைசாமி முதலியார்

அவர்களின் அறுபதாமாண்டு நிறைவு

மணிவிழா மலர்

ரக்தாக்ஷி வருஷம் ஆவணிமாதம் 7 உக்கு 23-8-84

வியாழக்கிழமை

திருவாலங்காடு

தி. மு. சபாபதிதேசிகர்

ஆக்கியோன்

முன்னுரை

" நல்லார் குணங்களுரைப்பதுவு நன்றே "

மனம் உடையவர் மனிதர். மனம் நல்வழியிலும், தீயவழியிலும் செல்லுந்தகையது. மனதைச் செம்மைப் படுத்தி ஆட்கொள்ளுவது அறிவு இது யானைக்கு அங்குசம் போன்றது மனம் செம்மையானுல் நாட்டுக்கும் மக்களுக்கும், நலம்பல பயக்கும். இத்தகு பண்புடையோ ரைத்தான் மனிதரென மதிக்கப்படும். மனதை நல்வழிப் படுத்தும் அறிவை செம்மைப்படுத்த நல்லோரிணக்கமும், (நின்பூசைநேசமும்) இறைவனிடத்து பக்தியும் மிகமிகத் தேவை "மனமது செம்மையானுல் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" என்ருர் மனமானது நன்மை தீமை இரண் டிடத்தும் செல்லக்கூடியது. தீயவழியில் செல்லும்போது அறிவினுல் தடுக்க வேண்டும் "மனம் போன போக் கெல்லாம் போக வேண்டாம்" தடுங்கோள் மனத்தை என்ருர்.

" கடலுலகில் வாழும் எழுபிறப்பினுள் மிக்க காட்சி பெறு நரஜென்மமாய் கருதப்பிறத்தலரிது" என்ற படியும் "எண்ணறிய பிறவிதனில் மானிடப்பிறவி தான் யாதினும், அறிதறிது காண்" மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இல்லறமாய நல்லறத்தைக் கடைபிடித்து ஒழுக வேண்டும். இல்லறத்தில் தாய், தந்தை, மனைவி மக்கள் இவர்களோடு இணைந்து நல்லறங்களைச் செய்ய வேண்டும் அறவழிக்கு இல்வாழ்க்கை தான் சிறந்தது.

" அறனெனப் பட்டதே இல்வாழ்க்கையஃதும்
பிறன்பழிப்பதில் லாயினன்று "

தன்னைச் சார்ந்த அனைவர்களையும், இகத்திலும், பரத்திலும் நல்வழிப்படுத்த கடமைப்பட்டவன். வாழ்க்கை ஒரு படகு. நீர் நிறைந்துள்ள ஆறு, கடல், இவைகளில் தான் செல்ல வேண்டும். இந்த தோணியில் தம்மைச் சார்ந்த அனைவர்களையும் ஏற்றிக் கொண்டு கரையில் சேர்க்க

வேண்டும். அக்கரையில் சேர்க்க அக்கரை வேண்டும். படகில் ஓட்டை விழாமல் துடுப்பினால் நேர்வழியில் செலுத்திக் கொண்டு போக வேண்டும். படகில் ஓட்டை ஏற்பட்டாலோ ? துடுப்பு ஒடிந்தாலோ ? படகு நீரில் முழுகுவதோடு குடும்பத் தலைவனும், இவனை ஆதாரமாகக் கொண்டுள்ள சுற்றத்தினரும், நட்பினரும், நீரில் ஆழ்ந்து போக வேண்டியது தான். பிறவிக்கடல் துன்பக்கடல், ஆகியவற்றில் நம் வாழ்க்கைப் படகு செல்கின்றது. கவனமாய் பார்க்கவேண்டும் " மனமெனுந்தோணி பற்றி மதியெனுங் கோலையூன்றி சினமெனும் சரக்கை ஏற்றி செறிகடலோடும்போது" வெகு ஜாக்கிரதையாக செலுத்த வேண்டும் " தஸ்மாத் ஜாக்கிரதோஜாக்கிரத "

இவ்வகையில் நம் மணிவிழாச் செல்வர் தம் குடும்பம், சுற்றம், நட்பினர், அனைவர்களையும், அக்கரையோடு அக்கரையில் சேர்ப்பித்து வருகிறாரென்பதில் ஐயமே யில்லை.

இது புண்ணியம், இது பாவம், என்ற எண்ணமும் இரக்கமுள நெஞ்சமும், ஒருங்கே அமையப்பெற்றவரே மதிப்பிற்குறியரும், மதிமிக்குடையருமாய நம் மணிவிழாச் செல்வர். மேற்கண்ட இலக்கணங்களுக்கு, இலக்கிய மாய்த் திகழ்பவர்கள்.

இவர்கள் தம் சமூகத்திற்கும், எங்கள் சமூகத்திற்கும் பல்லாண்டுகளாக வழிமுறையாய் நெருங்கிய தொடர் புண்டு. இவ்வருளாளரோடு பல ஆண்டுகள் நெருங்கி இணைந்து பழகியதோடு நானின்றி எந்தவொரு நற்பணி யினைத் துவக்கார் இவரின்றி நானும் எத் தொழிலிலும் செயல்படேன்.

இவர்கள் பற்பல கும்பாபிஷேகங்களும், ஆலய திருப் பணிகளும், முன்னின்று செய்வதோடு, அண்டினோருக் கும், முன் பின் அறியாதவர்களுக்கும் பன்முறை அலைந் தேனும், தன் செலவில் முன்னின்று உதவியைத் தடை யின்றி செய்து வாழ்வளிக்கும் பண்புடையோராதலினா லும், என்பால் மட்டற்ற மதிப்போடு என்குடும்பம் உயர் வுக்கும், கிளைஞர்களுக்கும், உதவும் பண்பினாலும், அன்பு

அருள், அடக்கம், ஒருங்கேயமைந்த காரணங்களால் ஈர்க்கப்பட்டயான் இம் மணிவிழா அறுபதாமாண்டு நிறைவு நன்னுளில் என் மன நிறைவோடு, இவர்கள் நற் செய்கைகளை நான் நன்கறிந்த வகையில் எனதன்பின் பெருக்கால் இம் மலரின் மூலமாக வெளியிடுகின்றேன்.

"தன்னுசிரியன் தன்னுடுகற்றேன் தன் மாணுக்கன் தகுமுரைகாரனென்ற" இன்னேர்கள் புகழ்ந்துரைக்கத் தக்கவர்கள் என்ற நன்னூலிலக்கணத்தின் படி இச் சமூகத்தவர்களுக்கு ஆசாரிய பரம்பரையைச் சேர்ந்தவ ஞதலால் ஆசாரிய முறையில் மணிவிழாச் செல்வரின் நற்பண்புகளை வரைகின்றேன்.

மாண்பு மிக்க இந் நல்லன்பர் உடல் வனப்புடன் இனி வரவிருக்கும் பவள விழா, முத்து விழா, நூற்றுண்டு விழா, இரண்டாம் மணிவிழா, ஆகிய விழாக்களையுங் கண்டு மக்களும், ஒக்கலுமாக நல்லனயெல்லாம் பெற்று, இன்னம் பற்பல அறப்பணி, பொதுப் பணிகளையும் செய்து வாழ்வாங்கு வளமுடன் வாழ தணிகைத் தண் ணருளாளன் திருவடிகளை வந்தித்து சிந்தித்து வாழ்த்து கின்றேன்.

"சதமானம்பவதி சதாயு புருஷசதேந்திரிய
ஆயுஷ்யே வேந்தரியே பிரதி திஷ்டதி"

இம் மலரை மணமிகச் செய்ய வாழ்த்துரை வழங்கி யருளிய பெருந்தகையார்களுக்கும், இம் மலரை அழகுறச் செப்பனிட்டு அச்சிட்டருளிய முதுபெருஞ் சைவப் பெருந்தகையார் கவுணியன் அச்சக உரிமையாளர் சிவத்திரு C. M. சிவராமன் செட்டியார் அவர்களுக்கும், அச்சகப் பணியாளர்களுக்கும், எனதன்பு கலந்த நன்றி வணக்கம் உரித்தாகுக.

தி. மு. சபாபதிதேசிகர்,
திருவாலங்காடு

உ

இறைவணக்கப் பாடல்கள்

தோடு உடைய செவியன்,
விடை ஏறி, ஓர்தூ வெண் மதி சூடி,
காடு உடைய சுடலைப்பொடி பூசி
என் உள்ளம் கவர் கள்வன்—
ஏடு உடைய மலரான் முனைநாள்
பணிந்து ஏத்த, அருள் செய்த,
பீடு உடைய பிரமாபுரம் மேவிய,
பெம்மான்—இவன் அன்றே.

நாளாய போகமே, நஞ்சு
அணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு, செய்வோம்;—
மடநெஞ்சே!—அரன் நாமம்
கேளாய்; நம் கிளை கிளைக்கும்
கேடு படாத் திறம் அருளிக்
கோள் ஆய நீக்குமவன்
கோளிலி எம்பெருமானே.

வேய் உறு தோளி பங்கன், விடம் உண்ட
கண்டன், மிக நல்ல வீணை தடவி,
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல்
அணிந்து, என் உளமே புகுந்த அதனல்—
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன்,
வெள்ளி, சனி, பாம்பு இரண்டும் உடனே
ஆசு அறும்; நல்ல நல்ல; அவை
நல்ல நல்ல, அடியாரவர்க்கு மிகவே.

மண்ணின் நல்ல வண்ணம்
வாழலாம், வைகலும்;
எண்ணின், நல்ல கதிக்கு
யாதும் ஓர் குறைவு இலை;
கண்ணின் நல்லஃது உறும்
கழுமல வள நகர்,
பெண்ணின் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே!

குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல்
மேனியில் பால் வெண் நீறும்,
இனித்த முடைய எடுத்த
பொற் பாதமும் காணப்பெற்றால்,
மனித்தப் பிறவியும் வேண்டுவதே,
இந்த மாநிலத்தே.

எந்த மா தவம் செய்தனை நெஞ்சமே!—
பந்தம் விடு அவை ஆய பராபரன்
அந்தம் இல் புகழ் ஆரூர் அரநெறி
சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே!

நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார்!
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்;
சினம் திருகு களிற்று உரிவைப் போர்வை
வைத்தார்
செழு மதியின் தளிர் வைத்தார்; சிறந்து வானோர்
இனம் துருவி, மணி மகுடத்து ஏறத் துற்ற
இன மலர்கள் போது அவிழ்ந்து, மதுவாய்
பில்கி நனைந்தனைய திருவடி என் தலைமேல்
வைத்தார்;—நல்லூர் எம்பெருமானார்
நல்லவாறே!

பொய்யவன்; நாய் அடியேன்;
புகவே நெறி ஒன்று அறியேன்;—
செய்யவன் ஆகியே வந்து இங்கு
இடர் ஆனவை தீர்த்தவனே!
மெய்யவனே! திருவே!
விளங்கும் திருக்காளத்தி என்
ஐய!—நுன் தன்னை அல்லால்
அறிந்து ஏத்தமாட்டேனே.

தனித் துணை நீ நிற்க,
யான் தருக்கி, தலையால் நடந்த
வினைத் துணையேனை விடுதி
கண்டாய்?—வினை யேனுடைய
மனத் துணையே, என் தன் வாழ்முதலே,
எனக்கு எய்ப்பில் வைப்பே,
தினைத் துணையேனும் பொறேன்,
துயர் ஆக்கையின் திண் வலையே.

அம்பிகை

தனம் தரும் கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக் கண்களே,

திருமால்

கரியமேனி மிசை வெளிய
நீறு சிறிதே யிடும்
பெரிய கோலத் தடங் கண்ணன்
விண்ணோர் பெருமான் தன்னை

உரிய சொல்லா லிசைமாலைக
ளேத்தியுள்ளப் பெற்றோற்கு
அரிய துண்டோ வெனக்கின்று
தொட்டு மினி யென்றுமே.

திருமகள்

திருத்தாமரை மேல் வீற்றிருக்கும் தேவி
தெய்வ விளக் கொளியே !
கருத்தாய் வணங்கும் அடியவர்க்குக்
கனகவெள்ளம் பாய்ச்சி வரந்
தருந் தாயே! நின் சிலம்படிகள்
சிந்தித்து உணரும் எளியேனை
வருத்தா நிற்கும் வறுமை கெட
வழங்காயோ நின் திருவருளே !

கலைமகள்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள் என்
உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

நவக்கிரக தோத்திரம்

உலகிருளை நீக்கி யொளி பரப்பும் ஞாயி
றெருப்பற்ற வொளி நிலா வெரிக்கும் திங்கள்
பலமளிக்கும் செவ்வாயும் புதனும் வியாழன்
பகைமை யிலா வெள்ளி சனி ராகு கேது
நில வுலகில் கொடுப்பதிலே இவர்களைப்போல்
நீடுலகில் வேறுமொரு தெய்வ முண்டோ !
தலையதனால் வணங்கி வழி படுவோர்க்
கெல்லாப்
பெரும் செல்வம் தந்து அருள் புரிவார் தாமே !

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணைபூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப்பிள்ளையைப் பேணுவாம்.

மணிவிழாச் செல்வர்

உயர்திரு G. S. துரைசாமி முதலியார்

அவர்களின் வாழ்க்கை வரலாறு

நாட்டின் சிறப்பு :

நம் தமிழகம் தெய்வத் திருவிளையாடல்கள் பற்பல நிகழ்ந்ததோடு, அருளாளப் பெரு மக்களால் தேனினுமினிய திருப்பதிகங்கள் எண்ணிறந்தவற்றைக் கேட்டு ஆனந்திக்க இறைவன் அடியாரைப் பின் தொடர்ந்தானென்பது சரித்திரம். இத்தகு சிறப்புடைய நம் தமிழகத்திற்கு கயிலாயத் துச்சியுள்ள நம் கண்ணுதற் கடவுள் தமிழ் இனிமையைப் பருக, வெறும் ஓவியமாக திருக்குற்ருல சித்திரசபையில் ஆடல் வல்லான் அமர்ந்து அருள் பாலிக்கின்ருர் இதை.

''கடுக்கவின் பெறுகண்டனுந் தென்திசை
நோக்கி
அடுக்கவந்து வந்தாடுவான் ஆடலின்
இளைப்பு
விடுக்க ஆரமென்கால் திருமுகத்திடைவீசி
மடுக்கவுந்தமிழ் திருச்செவி மாந்தவு
மன்ரே ?'' என்றும்

''விழுமியார்கள் நின்கழல் பாடலால் அவாயிலாய்''
''வாயாரத்தன்னடியே பாடுந்தொண்டர் இனத்

தகத்தான்'' "அருச்சனைபாட்டேயாகும்'' "பாடும் பணியே பணியாயருள்வாய்'' "தேவரெல்லாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட் செழுங்கரும்பே மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலுந்தமிழ் கேட்கும் திருச்செவி'' என சைவ நூல்களிலும், வைணவ சமயத்திலும், ஆழ்வாராசாரியர்கள் பாடலைப் பருகி பிரபந்தத்தின் பின்னுடியே திருமா லும் இன்புற்று அனுபவித்துச் செல்கின்ற நம் இனிய தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய, கொங்கு, மகதம், அறிவா, சேதி, என்ற நாடுகள் போல நம் தொண்டை நாடும் சிறப்புடைய ஒன்று முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய நாடுகளையொப்ப தொண்டைநாடும் முடியுடையரசனல் ஆளப்பட்டதே நாடுகளின் சிறப்பைக் கூறவந்த ஒளவைப் பிராட்டியார்.

வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னுடு முத்துடைத்து தெண்ணீர்வயற்
றெண்டை
நன்னுடு சான்ருே ருடைத்து ,, என்ருர்

சேரநாட்டவர் யானைக் கூட்டங்களினல் வளம் பெறுகிருர்கள். சோழநாடர் காவிரியாற்றின் நீர்ப் பெருக்கால் வளம் பெறுகிருர்கள். பாண்டிய நாடர் நன் முத்துக்களால் வளம் பெறுகிருர்கள்.

இம் மூன்று நாடுகளிலும் ஜீவநதிகள் பாய் கின்றது மூன்றுநாட்டிலும் மிகுதியாய் உள்ள வற்றைக் கூறியவர் ·இத்தொண்டை நாட்டில் மிகுதியாய் உள்ளவர்கள் சான்ருேர் என்றதோடு தெண்ணீர் என்ருர். தொண்டை நாட்டிற்கு உள்ள ஆறு பாலாறு. கருப்பாட்டை வெள்ளாடு என்பதைப் போல தண்ணீரே இல்லாத வரட்டு

ஆற்றை பாலாறு என்றூர்கள். இனி தெண்ணீர் என்பதற்கு தெள்ளிய நீர். அதாவது கசக்கால் வெட்டி மண்ணைப்பறித்து ஊற்ருல் வரும் நீர் காவேரி, தாம்பிரபரணி, பெண்ணை முதலிய ஆறு களில் நீர் கலங்கலாகவரும். கசக்காலில் வருவது ஊற்று நீரல்லவோ? இதை தெள்ளிய நீர் என்ருர்.

"மன்னர் வேனிலன் மணற்றிடை பிசைந்து கைவருட வெள்ள நீர்" என்ருர். சேக்கிழார் பெருமான். எவ்வளவு உழைப்பு வேண்டும் பாருங்கள். ஏனைய மூன்று நாட்டவர்களும் சிரமப் படாமலே செல்வந்தர்களாகலாம். தொண்டை நாட்டவர் உடலுழைப்பால் மிகு பிரயாசைப்பட வேண்டும். இத்தகு கடின உழைப்பினுல்தானுகவே அமைதி, சாந்தம், குடி கொண்டுவிடு மல்லவோ? பின் ஏன் சான்ருேர்களாக மாட்டார்கள்.

"தீயயென்பன கனவிலுநினைவிலாச் சிந்தை தூய மாந்தர் வாழ் தொண்டநாடு" உழைப்புக்கே நேரம் போதவில்லை பிறரைப் பற்றி சிந்திக்க நேரம் ஏது மேலும் ஔவைப் பிராட்டியார்

"வையக மெலாம் கழனியாய் வையகத்துள்
செய்யகமே நாற்றிசையின் தேசங்கள்
செய்யகத்துள் வான்கரும்பே தொண்டை
வளநாடு"

என்றும் சிறப்பித்தார். இத்தகு சிறப்பானது தொண்டைநாடு என்ருல், ஏனைய நாட்டில் சான் ருேர்களில்லையா எனலாம். பற்பல அறிஞர்களும் சான்ருேர்களும். இருந்ததும் இருப்பதும் காண் கின்ருேம். தொண்டை நாட்டில் சற்று அதிகம் எனக் கூறலாம்.

இத்தகு தொண்டை நாட்டில் அறுமுகத் தண்ணலின் அறுபடை வீட்டில்ஐந்தாம் படை வீட்டில் முதலிடமாய குன்று தோராடலில்

"தரையிடங்கொளும் பதிகளிற் காஞ்சியத்தலம்
போல்
வரையிடங்களிற் சிறந்த தித்தணிகை மால்
வரையே"

எனும் சிறப்புமிக்க தணிகையம் பதிக்கு அண்மையிலும், கடிகாசலம் எனும் (சோளிங்கபுரம்) வைணவத் திருப்பதிக்கு இடையில் இருமலைத் தீபங்களைத் தெரிசிக்கும் பதியாயும், முருகவேள் தமிழர்தம் முறைப்படி இச்சாசக்தியாம் வள்ளியம்மையாரை வள்ளிமலைக்குச் சென்று பற்பல திருவிளையாடல்களால் கடிமணம் புரிந்து, தணிகைக்கு அழைத்து வரும்போது, ஏற்கனவே தணிகையில் முதல் மனைவியான-கிரியாசக்தி-தேவயானையின் அனுமதி பெருமல் இம்மணத்தை முடித்துக் கொண்டு போனல் பிணக்குண்டாகுமே என்றதோடு சாத்திர சம்மதமுமில்லையே (சட்டவிரோதம் தாமே வகுத்த சட்டத்தை மீறலாமா?) என்றதால் வள்ளி மலையினின்று அழைத்து வரும்போது விடிந்த நேரம் வந்தயிடம் விடியுங் காடு என்ற பதிஇன்றும் உள்ளது. அதையடுத்து குப்பம் என்ற ஊரில் அம்மையாரை இருக்கச் செய்து தணிகைக்கு வந்து கிரியாசக்தியாம் தேவயானையிடம் நீங்கள் இருவீரும் என்னையடைய தவமிருந்தவர்களில் நீ ஒருத்தி மற்றவள் வள்ளி அவளையும் மணம் முடித்தேன் நீங்கள் இருவீரும் சமாதானமாக இருங்கள் என்று முன்வரலாற்றைக் கூறி. மீண்டும் குப்பம் வந்து நீ யிங்குதங்கியிருந்த காரணத்தினல். இன்று முதல் இப்பதிக்கு "அம்மையார்க்குப்பம்" என வழங்குவதாகுக

என்று அருளிச் செய்து இத்தலத்தில் நம்மை பக்தியோடு வழிபடும் அடியார்களுக்கு வேண்டிய வேண்டியாங்கு அருள் புரிவோமென்று அருளிச் செய்ததால் அதுமுதல் தொன்று தொட்டு அம்மையார் குப்பமென வழங்கி வருகின்றது.

மணி விழாச் செல்வரின் தோற்றம் :

இப்பதியில் தூய நற்குலமாய செங்குந்த மரபில் உயர் திரு சடையப்ப முதலியார், திருமதி முனிரத்தினம்மாள் இவர்களின் அருந்தவப்பயனாய் இரக்தாக்ஷி ஆண்டு ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் 26—8—1924 திங்கட்கிழமை தேய்ப்பிறை தசமி திருவாதிரை துலாலக்கினத்தில் 6-வது திருமகனாக நம்மணி விழாச் செல்வர் வந்துதித்தார். "செம்மைமிகு சடையப்பர் செய்த பெருந்தவப் பயனாய் அண்மையுள தணிகைநகர் அருட்குமரன் தலம் விளங்க இம்மைநலம் அம்மை நலம் இருபயனும் ஒருங்கெய்த நன்மை மிகு துரைசாமி நற்றவத் தோன் வந்துதித்தான்" 27 நட்சத்திரங்களில் இரண்டு நக்ஷத்திரங்களுக்குத்தான் "திரு" என்ற அடைமொழி, "திருவாதிரை" 'திருவோணம்" "ஆதிரையான் அரசனாவான்" "ஆதிரையான் அஞ்சான்" என்பதும் ஆறுவது ஆண்மகவு "யானை கட்டி வாழ்வான்" என்பது பழமொழி,

இவற்றின் பயனை பின்னர் படித்தின்புறலாம்.

இவருக்கு முன்னவர்களும், பின்னவர்களும்.

திருமதி. உண்ணாமுலையம்மாள்.

திருமதி. பங்காரம்மாள்.

திருவாளர். இராமசாமி முதலியார்.

திருமதி. கெங்கம்மாள்.

,, சாலம்மாள்.

திருவாளர் G. S. துரைசாமி முதலியார்

(மணிவிழாச் செல்வர்)

திருமதி. மாணிக்கம்மாள்

,, பட்டம்மாள்

,, நந்தியம்மாள்.

,, அம்மணியம்மாள்.

திருவாளர். அண்ணுமலை முதலியார்.

திருமதி. பூங்காவனம்மாள்.

நடுவராகப் பிறந்த இவர் முன் பிறந்தவர்களை யும், பின் பிறந்தவர்களையும், நிலைபிறழாது ஈர்ப்புச் சக்தியால் இன்றும் ஒழுங்கு பெறவைத்து வருகிருர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற்ருேன்ருமை நன்று''

என்ற குறளுக்கிலக்கணமாகத்திகழ்கின்ருர்கள் மணிவிழாச் செல்வருக்கு அமைந்த பெயரின் பொருத்தம் சுவாமி என்ருல் தந்தைக்குபதேசித்த சுவாமிநாதன் துரையென்ருல் அரசரைக்குறிப்பது அக்காலத்தில் அரசர்கள்தான் ஆலயப்பணிகளும், அறக்கட்டளைகளும் செய்தார்களென்று சரித்திரம் கூறும். அத்தன்மையைப் போல் தணிகையையும், எங்கள் திருவாலங்காட்டிலும், தம் ஊரிலுமாக பற் பல திருப்பணிகளை முன்னின்று நடத்தியதோடு பெரு முயற்சியால் என்றும் நிலைத்துள்ள அறக் கட்டளைகளையும், செய்து வைத்தார்கள் இவ்வரும்

பெரும்செயலால் துரையென்பதற்கும், சாமிநாதனிடம் தனிப்பற்றுடன் பக்தி பூண்டுள்ளதால், சாமி, ஆக துரைசாமி எனும் பெயர்சாலப் பொருத்தமானதே.

குடும்பநிலை.

மணிவிழாச் செல்வரின் குடும்பம் பெருங்குடும்பம் செல்வந்தர் குடும்பமல்ல, மிக்க ஏழ்மைக் குடும்பமுமல்ல. நடுத்தரக் குடும்பம். அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து பிறர் மதிக்கும் வண்ணம் வாழுபவர்கள் சற்று சிரமமான குடும்பமென்றே சொல்லவேணும்.

குலமும், சமயமும்.

இவர்கள் செங்குந்த மரபின் தோன்றல்கள். பரம்பரையாக சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள். ஆண், பெண், இருபாலார்களும், தங்கள் குலகுரு ஆசாரியபீடமாய் கச்சியம்பதியில் சட்டநாத தேசிகர். அவர்கள் வழித்தோன்றல்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிகர், இராமலிங்க தேசிகர் முதலிய ஆசாரியார்களிடம் சைவ சைமய தீக்ஷை செய்துக் கொண்டு அநுஷ்டானம் செய்யும் பரம்பரைச் சைவர்கள். இந்த பரம்பரை குரு மூர்த்திகள் சிஷ்ய பரம்பரையார்கள் உள்ள ஊர்களுக்கு ஒவ்வோர் சமயம் சென்று 10, 15, நாட்கள் தங்கி அனைவர்களுக்கும் சைவசமய தீக்ஷை செய்து பஞ்சாக்ஷர உபதேசம் செய்து வைப்பது வழக்கம் அதன்படி இவர் தந்தையார், தாயார், தமையனார், மணிவிழாச் செல்வர் முதலியோர்களும் சைவசமய தீக்ஷை பெற்றவர்கள் தான். "தீக்ஷை" என்ற ஈரெழுத்தால் உணரப்படுவது தீ—கொடுப்பது—க்ஷா—கெடுப்பது கொடுப்பது சிவஞானத்தை—கெடுப்பது மல, மாயா, கர்மங்களை—தீக்ஷை சம்ஸ்காரம்

செய்துகொண்டு விபூதியை திரிபுண்டரமாக (முக்குறி) இடுவதுதான் முறை.

''நீரில்லா நெற்றிப்பாழ்'' ''திருநீறு இட்டு யார் கெட்டார்'' குருவினிடம் தீக்ஷைபெற்று முறையோடு திருநீறிடவேண்டும். ''திருநீரில்லாத நெற்றியைச் சுடு—சிவாலயமில்லாத ஊரில் தீவை சிவனைப்போற்றுத நூலில் தீவை-சிவனை அருச்சிக்காத உடம்பில் தீவை-என்று பஸ்மஜாபால உபநிடதம் சொல்லுகின்றது. குருமுகமாக உபதேசம் பெற்று பஞ்சாக்ஷரம் செபிக்க வேண்டும் ''வித்யாசு சுருதி ரித்யுக்தர் ருத்னாகா தசநீசுருதெள தத்ரபஞ்சாக்ஷரீ தஸ்யாத் சிவ இத்யக்ஷரத்வயம்''

''விண்ணுற அடுக்கிய விறகில் வெவ்வழல்
உண்ணிய புகில் அவை ஒன்றுமில்லையாம்
பண்ணியஉலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே''—

அப்பர்

முப்பது ஆண்டின் முன் இம் முறைப்படி சைவ சமயத்தவர்கள் ஒவ்வொருவரும் கைக் கொண்டு நடந்தார்கள். இப்போது அத்தகு தக்க குருவும் இல்லை உரிய சீடர்களுமில்லை. எங்கள் சமூகத்தவர்களெல்லாம் மேற்கண்ட குரு பரம்பரையாக இருந்தவர்கள் இப்போது வெறுங்குடுக்கையாய் உள்ளார்கள்.

''கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுள் பிறந்தபதராகும்மே'' என்ற இதைச் சொலக் கூட தெரியாதவர்களானோம்.

தொழில்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்றார் பாரதியார் உலகத்தில் வாழும் தோட்டி

முதல், தொண்டைமான் வரை இன்றியமையாது தேவைப்படுவது உணவு, உடை. மற்ற சிறப்புக்கள் வசதியைப் பொறுத்து. உணவு, உடையில்லாமல் வாழ முடியாது. தொழில் என்ருல் முதலில் இருப்பது நெசவுத் தொழில்தான் ''ஆடையிலாதான் அரைமனிதன்''

மிக மிக முக்கியமான இவ்விரண்டு தொழிலில், பாவச் சேர்க்கையின்றி, சோம்பலற்று, அமைதி உள்ளத்தோடு நடப்பது நெசவுத் தொழில்தான் என்பதில் தடையேதுமில்லை. இனி உழவுத் தொழிலில் நம்மை யறியாமல் சில புழு, பூச்சிகள் கொலையாகின்றன. (இக்கால வேளாண்மை செய்யும் அனைவர்களும் அறிந்ததே அநேகமாயிரம் பூச்சிகளை தெரிந்தே கொலை செய்தால் தான் உணவு தானியம் கூடி கைக்குவரும்.) இத்துடன் துரோகச் செயலும் கலக்கின்றது. பதரையும் தூற்ருமல் பணமாக்குகிருர்கள். ஆகவே தான் உழவுத் தொழிலிலும் தூய்மையானது நெசவுத் தொழில் எனலாம்.

பல தேசத்தவர்களும், பல மொழியினர்களும், முடியரசு, குடியரசு, மற்று ஏனைய அரசுவந்தாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் உலகப் பொது மறையை இரண்டாயிரம் ஆண்டின் முன் அருளிச் செய்த குறளை நாம் கடைத்தேற வகுத்தருளிய திருவள்ளுவநாயனுர் திருக்குறளை ''எப்பாலவரும் இயைபவே வள்ளுவனுர் முப்பால் மொழிந்த மொழி'' இத் தவ முனிவர் தம் வாழ்க்கையை நடத்த தேர்ந்தெடுத்த தூய நற்ருெழில் யாதெனின்

''செய்யுந் தொழிலனைத்தும் சீர்தூக்கி பார்க்குங்கால் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை. என்று நெசவுத் தொழிலைத்தான் கைக்கொண்டார்

இனி நம் வாழ்நாளில் ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டிருந்த நம் இந்திய நாட்டை விடுதலை செய்து சுதந்திரம் பெற பேச்சாலும், செயலாலும், ஒரேபடித்தாய் சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகிய மஹாத்மா காந்தியடிகள் நாடு விடுதலை யடைய எத்தொழில் மூலம் நாட்டு மக்களை ஒன்று படுத்தவும், சாந்தத்தைக் கடைப்பிடிக்கவும் எது உகந்ததென்று பலகால் சிந்தித்து, நம் வள்ளுவர் பெறுமான் கைக்கொண்ட தொழிலாய நெசவுத் தொழிலால்தான் மக்களுக்கு அமைதியை உண் டாக்க முடியுமென்று கருதி கைராட்டினத்தில் பஞ்சை நூல் நூற்று ஆடையாக்கி உடுத்தவேணு மென்று நிபந்தனையிட்டார். பார்ப்பதற்கு இது ஒரு அற்பமாயும், ஏளனமாயும் இருக்கும். இதன் தத்து வம் பரந்து போகும் பஞ்சை கோது நீக்கி நூலாக்குவது ரொம்ப சிரமம். இதற்கு மிக வும் அமைதியும், சாந்தமும், ஒருமைப்பாடும் (ஏகாக்கிர சிந்தை) மிகவும் தேவை சற்று பொறுமை யிழந்தால் நூலாக்க முடியாதன்றோ? வேறு சிந்தனையில் மனம் செல்லமுடியாது. அடி யேனும் கைராட்டினம் சுற்றி நூலெடுத்து ஆடை யாக்கித் தரித்தவன் தான். அக்காலத்திலும் காங்கிரஸ்காரர்களில் சிலர் நான் நூற்ற நூலை தாங்கள் நூற்றதாகச் சொல்லி வேட்டி வாங்கு வார்கள் அப்போதே பிளாக் மார்க்கெட்டு நிலவி யது.

நெசவுத் தொழில் அடிப்படையில்தான் இந்திய மக்கள் மனதை ஒன்று படுத்தி சாத்து விக போராட்டம் நடத்தி சுரண்டல்கார வெள்ளை யனை வெளியேற்றி நம்மிலேயே பெரும் சுரண்டல் காரர்களை உருவாக்கிக் கொண்டோம். ஆகவே நெசவுத் தொழிலில் துரோக சிந்தனையேயில்லை, பாபமில்லை, உயிர்க் கொலையில்லை சோம்பலில்லை

யென்பதால் வள்ளுவர் பெருமான் கைக்கொண் டார். வணிக வகுப்பாயிருந்தும் மஹாத்மா காந்தி யடிகள் இத்தொழிலே நாட்டு மக்களுக்கு உப தேசித்தார்.

இத்தொழிலில் தாய்மார்களும் ஈடுபட வேண்டியுள்ளதால் வீண் வம்புப் பேச்சுக்கு யிடமேயில்லே அத்துடன் ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு என்றபடி சமூகத்தில் பலரும் ஒற்றுமை யோடிருந்தால்தான் பாவு தோய முடியும்.

உழைப்பாலுயர்ந்த உத்தமர் :

மணிவிழாச் செல்வர் திருவாதிரையில் தோன்றி யவர். நக்ஷத்திரங்களில் இரண்டுக்கு திரு அடை மொழிவரும் என்று முன்னரும் கூறியுள்ளேன். திருவாதிரை சிவ பெருமானுக்குஉரியது திரு வோணம் திருமாலுக்குரியது ஆதிரையான் அர சாள்வான் ஓணத்தான் உலகாள்வான்.

பிள்ளேப்பருவமும், பள்ளிப்படிப்பும்

அம்மையார் குப்பம் கிராமம் சித்தூர் மாவட் டம் திருத்தணி வட்டத்தில் தெலுங்கு பிரதேசத்தில் இருந்து சித்தூர் மாவட்டமே குறுநில மன்னர் (ஜமீன் ஏரியா) காளத்தி, வேங்கடகிரி, கார்வேட்டி நகரம், இவர்கள் தெலுங்கர்கள். சித்தூர் மாவட் டத்தில் தமிழர்கள் பெரும்பான்மையும், தெலுங் கர்கள் சிறுபான்மையாகத்தான் இருந்தார்கள். ஜமீன்தாரர்கள் தெலுங்கராகவே யிருந்தபடியால் எல்லா விவகாரங்களும் தெலுங்கிலேயேதான் நடக்கவேணும் பெயரளவில் இரு மொழிப் பிர தேசம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது, ஆத லால் எல்லா ஊர்களிலும் தெலுங்குப் பள்ளிகள் தான். அம்மையார் குப்பத்தில் ரவணம்பட்டு

ஐயரைத் தலைமையாகக் கொண்ட A, N. M. ஆரம்பப்பள்ளியில்தான் நம் மணிவிழாச்செல்வர் ஐந்தாவதுவரை சுந்தரத் தெலுங்கைப் படித்தார். தெலுங்கு மொழியின் துவக்கமே சைவப் பற்றுடையதுதான் களி தெலுங்கு என்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. இம்மொழி வடமொழிப் பயிற்சிக்கு பெருந்துணையாவது. துரைசாமி என்ற பெயருள்ளதால் பள்ளியிலும் மற்ற மாணக்கர்களுக்கு சாமியாகவேதான் தலைமை தாங்குவாராம். அவ்வவ்வகுப்பில் முதல் மாணவராகவேதான் இருப்பாராம். அங்கு படிப்பு அத்துடன் முடிவு. மேல் ஆங்கிலப் படிப்புக்கு சுற்று வட்டாரமெங்கும் ஆங்கிலப் பள்ளியே கிடையாது அரக்கோணத்தில் ஒரு கிறித்தவப் பள்ளிதான் இருந்தது. அங்கு சென்று படிக்க அக்காலத்தில் பஸ். இரயில் வசதிகள் கிடையாது. அத்துடன் குடும்பநிலையும் அந்த அளவுக்கு வசதியும் கிடையாதெனலாம். சற்று தமிழ் தெரிந்தவர்களிடம் சென்று தானாக படித்துக் கொண்டது. தமிழ்மொழி உலகம் தழுவிய ஆங்கில மொழிப் பள்ளிகள் போதிய அளவு அண்மையில் இல்லையே, இருந்தால் எவ்வளவோ மக்கள் நலம் பெருவார்களே என்ற ஏக்கம் பற்பல சந்தர்ப்பங்களில் மனதை வாட்டிய துண்டாம். இந்த சிந்தனை விதைதான் பின்னர் தன்னாலேயே தம்மூரில் ஒரு மேநிலைப் பள்ளியும் தணிகையில் ஒரு கலைக் கல்லூரியும் உருவாக்க பயன்பட்டது.

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றையவை"

"குஞ்சியழ குங்கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு"

என்பதை நன்குணர்ந்தவர்.

உழைப்பால் உயர்ந்து தொழிலில் மேம்பாடடைதல் :

12 வயதில் பள்ளிவாழ்க்கை முடித்தபின் தமது குடும்பம் பெரிது எல்லோரும் உழைத்தால்தான் உயர்வடைய முடியுமென்பதை அந்த சிறு வயதிலேயே உணர்ந்தார். நெசவுத் தொழிலில் ஊக்கங் கொண்டார் பாக்கியஸ்தானத்தில் சந்திர பகவானும், சுக்கிர பகவானும் இருந்து கர்மஸ்தானமாகிய பத்தாமிடத்தில் கடகத்தில் இராகு பகவானும் பலமாயிருப்பது ரொம்பவும் விசேஷமென சோதிடர்கள் சொல்வதின்படியே முதலியாருக்கு யோகம் ஆரம்பிக்கவும் வேஷ்டி புடவைகளை அக்கால கவர்ச்சி முறையில் நெசவுசெய்து இராணிப் பேட்டை, மின்னல், சோளிங்கர் முதலாக சந்தைகள் கூடும் இடங்களுக்குப் போய் தெளிவான முறையில் வியாபாரம் செய்து, ஏனையோரைக் காட்டிலும் கூடுதல் வருவாயைப் பெருக்கிக் கொண்டார்.

"எவ்வ லுறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு"

மக்கள் அப்போது எவ்வகை ஆடையை அவாவுகின்றார்களென்பதறிந்து புதுப்புது டிசைன்கள் போட்டு தயார் செய்ய அக்காலத்தில் பத்து, இருபதாயிரம், தேவைப்படும் அந்தத் தொகையை லுங்கி வியாபாரம் திரு. N. M. கோவிந்தசாமி முதலியார் & Co., பெயரில் வைத்து அந்த சரக்குகளை வெளிநாடுகள் (பாகிஸ்தான், கராச்சி முதலிய இடங்கள் சென்று வியாபாரம் நடத்தி வந்தார். பிறகு உணவு தானிய வியாபாரம் செய்ய ஒரு சேறவைக்கும் நிலையில் குடும்பம் இல்லை. அண்மையில் உள்ள ஏகாம்பர குப்பம் கிராமத்தில் இவரின் இனத்தவர் சாந்தாம்சின்னசாமி முத

''மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டுபவர்''

தானும், தன் குடும்பமும், சுற்றத்தினரும், ஒன்று பட்டு உழைத்ததனுல் ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்றபடி நாளொருவண்ணமாக பொருட் செல்வம் பெருகுவதோடு இறைவன் மக்கட் செல்வத்தையும் அருள் பாலித்தார்.

சீமந்தபுத்திரனுகிய முதல் மகன் செல்வன்
கணேசன்

இரண்டாம் மகனுக செல்வன் இராமச்சந்திரன்
மூன்ருவதாக செல்வி இந்திராணி

நான்காவதாக செல்வி மீனுக்ஷி யென இரு ஆண் மக்களும், இரு பெண்மக்களும், தோன்றினுர்கள். ''மகப் பெரு மாநிடர்கள் வானவர் தம்மூர்க்கு புகப் பெரு மானிடராய்ப் போந்து'' என்றபடியால் மக்கட் செல்வம் இன்றியமையாது வேண்டப்படுவது முதல் மகன் நல்ல தமிழாற்றலும், போதிய அளவு ஆங்கிலப் படிப்பும் உடையவர், இரண்டாம் மகனுர். சந்திரனை ஆங்கிலப்படிப்பில் பட்டதாரியாக்கி. B.A. M.Com. வரையும், தமிழிலும் ஆற்றல் மிக்கவனுக ஆக்கி திருமகளார் இந்திராணி, மீனுக்ஷியை நன்ருய்த் தமிழ் படிக்கவைத்து மகளார்களுக்கு மணப்பருவம் வந்துற்றகாலை

''சுற்றத்தாற் சுற்றப்படவொழுகல்
செல்வந்தான்
பெற்றத்தார் பெற்றபயன்''

என்பதற்கிலக்கணமாக செல்வி இந்திராணியை தம் மூத்த தமக்கை உண்ணுமுலையம்மையாரின்

மகன் செல்வன் திருவேங்கடம் B. Com. வரை படித்து ஏற்றுமதி வியாபாரம் செய்து வெளிநாடு களுக்கு பலமுறை சென்றுள்ள அவருக்கும், இளைய மகள் செல்வி மீனுக்ஷியை மற்றொரு தமக்கை செங்கம்மாள் திருமகன் செல்வன் தங்கவேலு இவர் உயர்நிலைப்பள்ளி இறுதிவரை படித்து வியா பாரத் துறையில் சிறப்புற்றவர். இவருக்கும் திருமகனுர்கள் செல்வன் கணேசனுக்கு தங்கை மாணிக்கம்மாள் மகள் கிருஷ்ணவேணியையும் மற்றொரு மகன் செல்வன் இராமசந்திரன் B.A., M.Com. மற்றொரு தங்கை பூங்காவனம்மாள் மகள் செல்வி சந்துரு மருத்துவத் துறையில் M.B., B.S., D.G.O.C. (M.D.) பட்டம் பெற்று மதுரையில் பணியாற்றுகிருர். இவர் தந்தை உயர்திரு ஏழுமலை முதலியார் அவர்கள் தமிழ்ப் புலமையோடு ஆங்கில மொழியில் துறைபோய பட்டமும் பேங்கு ஆப் மதுரா வங்கியில் சட்ட ஆலோசகராகவும், இயக்குனர்களில் ஒருவராயும் உள்ளார்கள். மூத்த மகன் கணேசன் அம்மையார் குப்பம் திருமுருகன் W C. S. Ltd.ல் தலைவராக பணியாற்றி வருகிருர் இளையமகன் ராமசந்திரன் T. V. S. கம்பெனியில் பொறுப்புள்ள பெரும் பதவி யிலுள்ளார். இவர்களனைவர்களும் மக்கட் செல் வமும் பெற்றுள்ளார்கள் மணிவிழாச் செல்வரின் நேர்மை, நாணயம், இறையருட்பக்தியின் செயலால் செல்வச்செழிப்பும், செல்வாக்கும் மேலோங்கி பெயரன் பேத்திகளோடு வாழ்வாங்கு வாழ்வதை இவரின் தாயார் தந்தையார் பூரண வயதோடிருந்து கண்டுகளித்தது பெரும்பாக்கியம். சிலருக்கு இளமையிலேயே தந்தையோ? தாயோ? இருவருமோ? போய் விடுவார்கள். அப்படிக்கின்றி தந்தையார் 87 வயதும் தாயார் 92 வயதுவரை

உடல் நலத்தோடு இருந்தது மணிவிழாச் செல்வரின் புண்ணியம்.

“தம்மிற்றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாமினிது”

